உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு,

## மூலமுமுரையும்.

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பரிசோதித்து,

மேற்படியார்

சதாசிவப்பிள்ளையால்

சென்னப்பட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஏழாம் பதிப்பு.

ஏவிளம்பி௵ ஆனிமீ.

இதன்விலை ரூபா - ௧.

24556

உ

# சூசிபத்திரம்.


| பக்கம். | தொகுதிப்பெயர். | விருத்தத் தொகை. |
|---|---|---|
| க | சிறப்புப்பாயிரம். | அ |
| சு | முதலாவது தெய்வப்பெயர்த்தொகுதி. | கூங |
| ங0 | இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி. | க0சு |
| ருஅ | மூன்றாவது விலங்கின்பெயர்த்தொகுதி. | எஅ |
| எஅ | நான்காவது மரப்பெயர்த்தொகுதி. | சுஅ |
| கூசு | ஐந்தாவது இடப்பெயர்த்தொகுதி. | சுஅ |
| ககச | ஆறாவது பல்பொருட்பெயர்த்தொகுதி. | ஙரு |
| கஉச | ஏழாவது செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி. | எசு |
| கஙச | எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி. | அஉ |
| கசுசு | ஒன்பதாவது செயல்பற்றியபெயர்த்தொகுதி. | சுஅ |
| கஅஉ | பத்தாவது ஒலிபற்றியபெயர்த்தொகுதி. | ருஉ |
| | ஆக தொகுதி க0-இல் விருத்தம் - எஙங. | |

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு.

## சிறப்புப்பாயிரம்.

பொன்னுநன்மணியுமுத்தும்புனைந்தமுக்குடைநிழற்ற
மின்னுபூம்பிண்டிநீழல்வீற்றிருந்தவனைவாழ்த்தி
மன்னியநிகண்டுசூடாமணியெனவொன்றுசொல்வன்
இந்நிலந்தன்னின்மிக்கோர்யாவருமினிதுகேண்மின்.

இதன்பொருள். பொன்னும் நன்மணியும் முத்தும் புனைந்த முக்குடை நிழற்ற - பொன்னினாலும் நல்ல இரத்தினத்தினாலும் முத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட மூன்றுகுடைகளும் நிழலைச் செய்ய—மின்னு பூம் பிண்டி நீழல் வீற்றிருந்தவனை வாழ்த்தி - விளங்குகின்ற மலர்களையுடைய அசோகமரத்தினது நிழலின்கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளைத் துதிசெய்து,—சூடாமணி என மன்னிய நிகண்டு ஒன்று சொல்வன் - சூடாமணியென்று சொல்லும்படி பொருந்திய ஓர்நிகண்டை (யான்) கூறுவேன்.—இந்நிலந்தன்னின் மிக்கோர் யாவரும் இனிது கேண்மின் - இந்தத் தமிழ்நாட்டின்கண்ணே (கல்வியறிவில்) மிக்கவர் சகலரும் நன்றாக இதனைக் கேளுங்கள் என்றவாறு.

யான் என்னுமெழுவாய் வருவிக்கப்பட்டது. முக்குடைகளாவன சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகலபாசனம் என்பவைகளாம். மன்னிய நிகண்டு சூடாமணியெனவொன்று என்பது சூடாமணியென மன்னிய நிகண்டொன்று என மாற்றியுரைக்கப்பட்டது. துதிசெய்து கூறுவேனெனக் கூட்டுக. நிலமெனப் பொதுப்படக் கூறினாரேனும், இந்நூல் தமிழ்நூலாதல்பற்றித் தமிழ் வழங்கு நிலமொன்றற்கே உரித்தாய்நிற்றலால், தமிழ்நாடென்றாம். எல்லாம்

சொல்லொடுபொருளுணர்ந்தோன்சோதிடநீதிவல்லோன்
நல்லறிவாளனெங்கணறுங்குன்றைஞானமூர்த்தி
பல்லுயிர்க்கொருதாயாகும்பரமன்மாமுனிவன்மெய்ந்நூல்
வல்லுநர்வல்லார்க்கெல்லாம்வரையறத்தரையில்வந்து.

இ - ள். சொல்லொடு பொருள் உணர்ந்தோன் - சொற்களோடு அவ்வவற்றின் பொருள்களை அறிந்தவரும்,—சோதிடம் நீதி வல்லோன் - சோதிடநூலிலும் நீதிநூலிலும் வல்லவரும்,—நல்லறிவாளன்-நல்ல அறிவினையுடையவரும்,—நறுங்குன்றை எங்கள் ஞானமூர்த்தி-நல்ல குன்றையூரிலிருக்கின்ற எங்களுடைய ஞானமே வடிவமாகக் கொண்டவரும்,—பல் உயிர்க்கு ஒருதாய் ஆகும் பரமன் - பல ஆன்மாக்களுக்கு ஒப்பில்லாத மாதாவாயுள்ள சிரேஷ்டரும்,—மா முனிவன் - பெரிய முனிவருமாகி,—வரை அற மெய்ந்நூல் வல்லுநர் வல்லார்க்கு எல்லாம் தரையில் வந்து - வரைவின்றி மெய்மையாகிய நூல்களிலே வல்லவர் வல்லவரல்லாதவராகிய யாவர் நிமித்தமும் பூமியின்கண்ணே அவதரித்து. எ - று. (௪)

பரிதியொன்றுதயஞ்செய்துபங்கயமநேககோடி
முருகெழமலர்வித்தென்னமுகமுடனகமலர்த்தி
மருவுமுத்தமிழைமுன்னாள்வளர்த்தபாண்டியனேபோலக்
கருதியவெல்லாந்தந்துகவிமணிமாலைசூடி.

இ - ள். பரிதி ஒன்று உதயம் செய்து பங்கயம் அநேககோடி முருகு எழ மலர்வித்து என்ன முகமுடன் அகம் மலர்த்தி - ஒருசூரியன் உதித்து அநேககோடி தாமரைமலர்களை மணமெழும்படியாக அலரச்செய்தாற்போல முகத்தோடும் நெஞ்சத்தை அலரச்செய்து.—மருவும் முத்தமிழை முன்னாள் வளர்த்தபாண்டியன்போல - பொருந்திய (இயல் இசை நாடகமென்னும்) மூன்று தமிழ்களையும் முற்காலத்தில் வளர்த்த பாண்டியராசனைப்போல—கருதிய எல்லாம் தந்து - நினைத்தவைகள் யாவையும் தந்து, மணிக் கவி மாலை சூடி - அழகினையுடையபாமாலையைச் சூடி. எ - று. ஏ அசை. (௫)

செகமெனும்பளிங்குமாடத்திகிரிவேந்தரையேபோலப்
புகழெனும்பஞ்சிசேர்த்திப்பொலிவுறுபேரத்தாணி
மகிழ்குணபத்திரனெங்கள்வழித்தெய்வம்போல்வான்சொல்ல
இகபரமிரண்டும்வேண்டியியலிசைவல்லோர்கேட்ப.

இ - ள். செகம் எனும் பளிங்கு மாடம் திகிரி வேந்தரைப் போல - பூமண்டலமாகிய பளிங்குமண்டபத்தின் கண்ணே ஆஞ்ஞா சக்கிரத்தையுடைய அரசரைப்போல,—புகழ் எனும் பஞ்சி சேர்த்திப் பொலிவு உறு பேர் அத்தாணி மகிழ் குணபத்திரன் - கீர்த்தியாகிய பஞ்சணையை வைக்கப்பெற்றுப் பொலிவுறுகின்ற பெரிய அத்தாணியின்மீது மகிழ்ந்து வீற்றிருக்கின்ற குணபத்திரனென்னும் பெயரையுடைய—எங்கள் வழித்தெய்வம் போல்வான்சொல்ல - எங்கள் குலதெய்வம் போல்பவர் கூற,—இகம் பரம் இரண்டும் வேண்டி இயல் இசை வல்லோர் கேட்ப - இம்மைப்பயனும் மறுமைப்பயனுமாகிய இவ்விரண்டையும் விரும்பி இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர்கள் கேட்க. எ - று. (சு)

விரவியதேவர்மக்கள்விலங்கொடுமரமிடம்பல்
பொருள்செயும்வடிவுபண்புபோற்றியசெயலொலிப்பேர்
ஒருசொற்பல்பொருளினோடுமுரைத்தபல்பெயர்க்கூட்டந்தான்
வருமுறைதிவாகரம்போல்வைத்துப்பிங்கலந்தைதன்னில்.

இ - ள். விரவிய தேவர் - பொருந்திய தெய்வப்பெயர்த்தொகுதியும்,—மக்கள் - மக்கட்பெயர்த்தொகுதியும்,—விலங்கு - விலங்கின்பெயர்த்தொகுதியும்,—மரம் - மரப்பெயர்த்தொகுதியும்,—இடம் - இடப்பெயர்த்தொகுதியும்,—பல்பொருள் - பல்பொருட்பெயர்த்தொகுதியும்,—செயும்வடிவு - செயற்கைவடிவப்பெயர்த்தொகுதியும்,—பண்பு - பண்புபற்றிய பெயர்த்தொகுதியும்,—போற்றிய செயல் - பேணப்பட்ட செயல்பற்றிய பெயர்த்தொகுதியும்,—ஒலிப்பேர் - ஒலிபற்றிய பெயர்த்தொகுதியும்,—ஒருசொற்பல்பொருள் - ஒரு சொற்பல்பொருட் பெயர்த்தொகுதியும்,—உரைத்த பல்பெயர்க்கூட்டம் - சொல்லப்பட்ட பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த்தொகுதியும்,—திவாகரம் வருமுறைபோல் வைத்து-திவாகரத்திலே வரும் முறைமைபோல வைத்து,—பிங்கலந்தைதன்னில் - பிங்கலந்தையிலே. எ - று. ஒடு, ஓடும், இசைநிறை. இன் சாரியை. தான் அசை. ஒலிப்பேரென்பதில் பேரென்பதைத் தேவரென்பது முதலிய மற்றவைகளோடும் கூட்டுக. (எ)

ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன்விருத்தந்தன்னில்
இருந்தவைநல்லோர்குற்றமியம்பிடாரென்பதெண்ணித்
திருந்தியகமலவூர்திருப்புகழ்புராணஞ்செய்தோன்
பரந்தசீர்க்குணபத்திரன்றாள்பணிந்தமண்டலவன்றானே.

இ-ள். ஒருங்கு உள பொருளும் ஓர்ந்திட்டு - உள்ள பொருள்களெல்லாவற்றையும் அறிந்து,—அவை இருந்த நல்லோர் குற்றம் இயம்பிடார் என்பது எண்ணி - சபையின் கண்ணே இருந்த நல்லோர்கள் குற்றஞ்சொல்லார்களென்பதை நினைந்து,—விருத்தந்தன்னில் உரைத்தனன் - விருத்தமென்னுஞ் செய்யுளாற் பாடினார்,—திருந்திய கமலவூர்தி திருப்புகழ் புராணம் செய்தோன் - திருந்தின அருகக்கடவுளினது சிறப்பாகியகீர்த்தியைப் புராணமாகப் பாடினவர்—பரந்த சீர்க் குணபத்திரன் தாள் பணிந்த மண்டலவன் - பரம்பிய புகழையுடைய குணபத்திரரென்பவரது பாதங்களைவணங்கிய மண்டலவர். எ-று. தான், ஏ அசை. மேலைச்செய்யுளினிறுதியிற் பிங்கலந்தைதன்னில் என்பதை இச்செய்யுளின் முதலில் வைத்துப் பிங்கலந்தையிலே உள்ள பொருள்களெல்லாவற்றையுமெனக் கூட்டுக. (அ)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

முதலாவது

# தெய்வப்பெயர்த்தொகுதி.

அநகனெண்குணனிச்சிந்தனறவாழிவேந்தன்வாமன்
சினன்வரனுறுவன்சாந்தன்சினேந்திரனீதிநூலின்
முனைவன்மாசேனன்றேவன்மூவுலகுணர்ந்தமூர்த்தி
புனிதன்வென்றோன்விராகன்பூமிசைநடந்தோன்போதன். (

பண்ணவன்கமலவூர்திபரமேட்டிகாதிவென்றோன்
புண்ணியன்புலவன்புத்தன்பூரணன்பொன்னெயிற்கோன்
விண்ணவன்விமலன்வீரன்விநாயகன்வீதசோகன்
அண்ணல்வின்மதனைவென்றோனருட்கொடிவேந்தனாசான். (

மூத்தன்மாமுனிகருத்தன்முக்குடைச்செல்வன்முன்னோன்
சித்தனெண்சிறப்புமுள்ளோன்றிகம்பரன்கொல்லாவேதன்
நித்தனின்மலனின்னாமனிராயுதனேமிநாதன்
அத்தனானந்தன்சோதியரியணைச்செல்வனாதி. (

ஆத்தன்குற்றங்களில்லானசோகமர்கடவுளாதன்
சாத்தன்வேதாந்தனாதன்சமியநாமயன்சுயம்பு
நீத்தவன்பிதாவிதாதாநிரம்பரனனந்தஞானி
தீர்த்தன்மால்பகவன்சாமிசீபதிசீமான்செய்யோன். (

நிருமலன்வரதன்சாதுநிரஞ்சனன்விறலோன்யோகி
தருமராசன்யுகாதிசதுர்முகன்சாதரூபி
திருமறுமார்பனீடுசிவகதிக்கிறைதொண்ணூறே
அருகன்பேராகுமற்றுமபிதான * மநந்தமாமே. (

சங்கரனிறையோன்சம்புசதாசிவன்பேயோடாடி
பொங்கரவணிந்தமூர்த்திபுராந்தகன்பூதநாதன்
கங்கைவேணியன்கங்காளன்கடுக்கையங்கண்ணிசூடி
மங்கையோர்பாகன்முன்னோன்மகேச்சுரன்வாமதேவன். (

நீலகண்டன்மாதேவனிருமலன்குன்றவில்லி
சூலபாணியனீசானன்பசுபதிசுடலையாடி
காலகாலன்கபாலியுருத்திரன்கைலையாளி
ஆலமர்கடவுணித்தனைம்முகன்பரசுபாணி. (

---

* அபிதானம் - பெயர்.

# பெயர்ப்பிரிவு

அருகன்பெயர்—அருகன், எண்குணன், நிச்சிந்தன், அறவாழிவேந்தன், வாமன், சினன், வரன், உறுவன், சாந்தன், சினேந்திரன், முனைவன், மாசேனன், தேவன், மூவுலகுணர்ந்தமூர்த்தி, புனிதன், வென்றோன், விராகன், பூமிசைநடந்தோன், போதன். கக.

பண்ணவன், கமலவூர்தி, பரமேட்டி, காதிவென்றோன், புண்ணியன், புலவன், புத்தன், பூரணன், பொன்னெயிற்கோன், விண்ணவன், விமலன், வீரன், விநாயகன், வீதசோகன், அண்ணல், மதனைவென்றோன், அருட்கொடிவேந்தன், ஆசான். கஅ.

முத்தன், மாமுனி, கருத்தன், முக்குடைச்செல்வன், முன்னோன், சித்தன், எண்சிறப்புமுள்ளோன், திகம்பரன், கொல்லாவேதன், நித்தன், நின்மலன், நின்றுமன், நிராயுதன், நேமிநாதன், அத்தன், ஆனந்தன், சோதி, அரியணைச்செல்வன், ஆதி. கக.

ஆப்தன், குற்றங்களில்லான், அசோகமர்கடவுள், ஆதன், சாத்தன், வேதாந்தன், நாதன், சமி, அநாமயன், சுயம்பு, நீத்தவன், பிதா, விதா்தா, நிரம்பரன், அனந்தஞானி, தீர்த்தன், மால், பகவன், சாமி, சீபதி, சீமான், செய்யோன். உஉ.

நிருமலன், வரதன், சாது, நிரஞ்சனன், விறலோன், யோகி, தருமராசன், யுகாதி, சதுர்முகன், சாதரூபி, திருமறுமார்பன், சிவகதிக்கிறை. கஉ. (ஆ_கo.)

சிவன்பெயர்—சங்கரன், இறையோன், சம்பு, சதாசிவன், பேயொட்டாடி, அரவணிந்தமூர்த்தி, புராந்தகன், பூதநாதன், கங்கைவேணியன், கங்காளன், கடுக்கையங்கண்ணிசூடி, மங்கையோர்பாகன், முன்னோன், மகேச்சுரன், வாமதேவன். கரு.

நீலகண்டன், மாதேவன், நிருமலன், குன்றவில்லி, சூலபாணியன், ஈசானன், பசுபதி, சுடலையாடி, காலகாலன், கபாலி, உருத்திரன், கைலையாளி, ஆலமர்கடவுள், நித்தன், ஐம்முகன், பரசுபாணி. கசு.

அந்திவண்ணன்முக்கண்ணனழலாடிபாண்டரங்கன்
சந்திரசேகரனானந்தன்சடைமுடியநந்தனாதி
தந்தியீருரியோனம்பனற்பரனீறணிந்தோன்
நந்தியீச்சுரனேறூர்ந்தோனக்கன்மாஞானமூர்த்தி. (௮)

வரன்மறைமுதலியீசன்மாணிடமேந்திசோதி
பிரமன்மாற்கரியோன்றாணுபிஞ்சகன்பினாகபாணி
பரமனெண்டோளன்பர்க்கன்பவன்யோகிபகவானேகன்
அரனுமாபதிசிவன்பேராறுபத்தாறனந்தமற்றும். (௯)

இலகுமோர்குண்டலன்மற்றிரேவதிகொண்கன்முற்றும்
நிலவியமுசலிவெள்ளைநிகழ்நீலாம்பரனநந்தன்
அலமுறுபடையாக்கொண்டோனச்சுதன்முன்னர்வந்தோன்
பலபத்திரன்காமபாலன்பனந்தாமன்பலதேவன்பேர். (௧௦)

மாதவன்மாயன்செய்யவாமனன்வாசுதேவன்
சீதரனந்தகோபன்றிருமகனுவணமேற்ற
கேதனன்பதுமநாபன்கேசவன்பஞ்சவர்க்குத்
தூதனேசார்ங்கபாணிசுரிமுகச்சங்கமேந்தி. (௧௧)

கொண்டல்வண்ணன்காகுத்தன்கோவிந்தனச்சுதன்மால்
விண்டுவேலையிற்றுயின்றோன்விரகினாலுந்திபூத்தோன்
வண்டுழாய்மவுலியாதிவராகன்வைகுண்டநாதன்
முண்டகாசனைகேள்வன்றாமோதரன்முராரிநேமி. (௧௨)

வலவன்றேவகிதன்மைந்தன்வனமாலிபடியிடந்தோன்
சலசலோசனனனந்தசயனன்பீதாம்பரன்பேர்
உலகளந்தருள்வோன்பஞ்சாயுதனுலகுண்டபெம்மான்
அலகைதன்முலையோடாவியருந்தினோனரசிங்கன். (௧௩)

அரவணைச்செல்வன்கண்ணனறிதுயிலமர்ந்தமூர்த்தி
பிரமனைப்பெற்றதாதைபின்னைகேள்வன்முகுந்தன்
கரியவனெடியோன்காவற்கடவுணாரணனேழேழ்
அரியின்பேராகுமற்றுமபிதானமனந்தமாமே. (௧௪)

பிரமன்மேதினிபடைத்தோன்பிதாமகன்பிதாவிதாதா
வரனயன்மலரோனிந்தமண்பொதுத்தந்தைவேதா
இரணியகருப்பன்போதனினியமாலுந்திவந்தோன்
சுரவனாதிமமுயர்த்தகொடியினனன்னவூர்தி. (௧௫)

அந்திவண்ணன், முக்கண்ணன், அழலாடி, பாண்டரங்கன், சந்
திரசேகரன், ஆனந்தன், அனந்தன், ஆதி, தந்தியுரியோன், நம்பன்,
நற்பரன், நீறணிந்தோன், நந்தி, ஈச்சுரன், ஏறூர்ந்தோன், நக்கன்,
ஞானமூர்த்தி. ௧௭.

வரன், மறைமுதல்வி, ஈசன், மானிடமேந்தி, சோதி, பிரமன்
ற்கரியோன், தாணு, பிஞ்சகன், பினாகபாணி, பரமன், எண்
டோளன், பர்க்கன், பவன், யோகி, பகவான், ஏகன், அரன்,
உமாபதி. ௧௮. (ஆ. ௬௬.)

பலதேவன்பெயர்—ஓர்குண்டலன், இரேவதிகொண்கன், முசலி,
வெள்ளை, நீலாம்பரன், அநந்தன், அலப்படைகொண்டோன்,
அச்சுதன்முன்னோர்வந்தோன், பலபத்திரன், காமபாலன், பனந்
தாமன். ௧௧.

அரியின்பெயர்—மாதவன், மாயன், வாமனன், வாசுதேவன், சீத
ரன், நந்தகோபன்மகன், உவணகேதனன், பதுமநாபன், கேச-
வன், பஞ்சவர்க்குத்தூதன், சார்ங்கபாணி, சங்கமேந்தி. ௧௨.

கொண்டல்வண்ணனன், காகுத்தன், கோவிந்தன், அச்சுதன்,
ால், விண்டு, வேலையிற்றுயின்றோன், உந்திபூத்தோன், துழாய்
மௌலி, ஆதிவராகன், வைகுண்டநாதன், முண்டகாசனைகேள்
வன், தாமோதரன், முராரி, நேமி. ௧௩.

வலவன், தேவகிமைந்தன், வனமாலி, படியிடந்தோன், சலச
லோசனன், அனந்தசயனன், பீதாம்பரன், உலகளந்தருள்வோன்,
பஞ்சாயுதன், உலகுண்டபெம்மான், அலகைமுலையோடாவியருந்
தினோன், நரசிங்கன். ௧௨.

அரவணைச்செல்வன், கண்ணன், அறிதுயிலமர்ந்தமூர்த்தி, பிரம
னைப்பெற்றதாதை, பின்னைகேள்வன், முகுந்தன், கரியவன், நெடி
யோன், காவற்கடவுள், நாரணன். ௧௦. (ஆ. ௬௧.)

பிரமன்பெயர்—மேதினிபடைத்தோன், பிதாமகன், பிதா, விதாதா,
வரன், அயன், மலரோன், மண்பொதுத்தந்தை, வேதா, இர
ணியகருப்பன், போதன், மாலுந்திவந்தோன், குரவன், ஓதிம
முயர்த்தகொடியினன், அன்னவூர்தி. ௧௩.

இறைசதாநந்தனீண்டவெண்கணன்விதிசயம்பு
மறையவனநந்தன்ஞானிமான்மகன்வாணிகேள்வன்
முறைதெரிபகவன்வானோர்மூதுவனான்முகன்விரிஞ்சன்
நறைமலிகமலயோனிநாமமாறைந்துமாமே. (௧௬)

தருமராசன்முனீந்திரன்சினன்பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந்தவுணர்க்கூட்டுந்ததாகதனாதிதேவன்
விரவுசாக்கியனேசைனன்விநாயகன்சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிலிருந்தோனறிவரன்பகவன்செல்வன். (௧௭)

அண்ணலேமாயாதேவிசுதனகளங்கமூர்த்தி
நண்ணியகலைகட்கெல்லாநாதன்முக்குற்றமில்லோன்
எண்ணில்கண்ணுடையோன்வாமனேற்றபுண்ணியத்தின்மூர்த்தி
புண்ணியமுதல்வன்சாந்தன்பூமிசைநடந்தோன்புத்தன். (௧௮)

மேகவாகனன்வேள்விக்குவேந்தன்விண்முழுதுமாளி
பாகசாதனனேவச்சிரபாணிகோபதிசிறப்பாம்
நாகநீணகர்க்குநாதனான்மருப்பியானையூர்தி
போகிவாசவனேவேந்தன்புரந்தரன்புலவன்சக்கிரன். (௧௯)

மருதநன்னிலத்துவேந்தன்மருத்துவன்வானோர்கோமான்
புருகூதன்சசிமணாளன்புரோகிதன்கௌசிகன்னே
கரியவன்சுனாசீரனாகண்டலனுடன்வலாரி
அரிசதக்கிரதுநீண்டவாயிரங்கண்ணனிந்திரன். (௨௦)

அங்குசபாசமேந்தியம்பிகைதனயன்முன்னோன்
ஐங்கரன்மூத்தோனொற்றையணிமருப்பினனேரம்பன்
கங்கைபெற்றோன்முக்கண்ணன்கணபதியீசன்மைந்தன்
வெங்கயமுகனேயாகுவாகனன்விநாயகன்பேர். (௨௧)

உக்கிரனழற்கண்வந்தோனுமைமகன்சிம்பளானோன்
முக்கணன்சடையோன்யானைமுகவனுக்கிளையோன்வில்லி
செக்கர்வானிறத்தன்குரோதன்சிறவிதிமகஞ்சிதைத்தோன்
மிக்கபத்திரைக்குக்கேள்வன்வீரபத்திரன்பேராமே. (௨௨)

முருகன்வேள்சாமியாறுமுகன்குகன்குழகன்மாயோன்
மருகன்சேய்கார்த்திகேயன்வரைபகவெறிந்தோன்செட்டி
அரன்மகன்கங்கைமைந்தனாண்டலைக்கொடியுயர்த்தோன்
சரவணபவன்கடம்பன்றாரகற்செற்றோனாசான். (௨௩)

இறை, சதானந்தன், எண்கணன், விதி, சயம்பு, மறையவன், அனந்தன், ஞானி, மான்மகன், வாணிகேள்வன், பகவன், வானோர் முதுவன், நான்முகன், விரிஞ்சன், கமலயோனி. கரு. (ஆ_கo.)

புத்தன்பெயர்—தருமராசன், முனீந்திரன், சினன், ததாகதன், ஆதி, தேவன், சாக்கியன், சைனன், விநாயகன், சினந்தவிர்ந்தோன், அரசுநீழலிலிருந்தோன், வரன், பகவன், செல்வன். கசு.

அண்ணல், மாயாதேவிசுதன், அகளங்கமூர்த்தி, கலைகட்கெல்லாநாதன், முக்குற்றமில்லோன், எண்ணிலகண்ணுடையோன், வாமன், புண்ணியத்தின்மூர்த்தி, புண்ணியமுதல்வன், சாந்தன், பூமிசைநடந்தோன். கக. (ஆ_உரு.)

இந்திரன்பெயர்—மேகவாகனன், வேள்விக்குவேந்தன், விண்முழுதுமாளி, பாகசாதனன், வச்சிரபாணி, கோபதி, நாகநாக்குநாதன், நான்மருப்பியானையூர்தி, போகி, வாசவன், வேந்தன், புரந்தரன், புலவன், சக்கிரன். கசு.

மருதநிலத்துவேந்தன், மருத்துவன், வானோர்கோமான், புருகூதன், சசிமணாளன், புரோகிதன், கௌசிகன், கரியவன், சுனாசீரன், ஆகண்டலன், வலாரி, அரி, சதக்கிரது, ஆயிரங்கண்ணன். கசு. (ஆ_உஅ.)

விநாயகன்பெயர்—அங்குசபாசமேந்தி, அம்பிகைதனயன், முன்னோன், ஐங்கரன், மூத்தோன், ஒற்றைமருப்பினன், ஏரம்பன், கங்கைபெற்றோன், முக்கண்ணன், கணபதி, ஈசன்மைந்தன், கயமுகன், ஆகுவாகனன். கரு.

வீரபத்திரன்பெயர்—உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், சிம்புளானோன், முக்கணன், சடையோன், யானைமுகவனுக்கிளையோன், விலவி, செக்கர்வானிறத்தன், குரோதன், சிறுவிதிமகஞ்சிதைத்தோன், பத்திரைக்குக்கேள்வன். கஉ.

கந்தன்பெயர்—முருகன், வேள், சாமி, ஆறுமுகன், குகன், குழகன், மாயோன்மருகன், சேய், கார்த்திகேயன், வரைபகவெறிந்தோன், செட்டி, அரன்மகன், கங்கைமைந்தன், ஆண்டலைக்கொடியுயர்த்தோன், சரவணபவன், கடம்பன், தாரகற்செற்றான், ஆசான். கஅ.

வேய்ந்தபூங்குறிஞ்சிவேந்தன்வேலினுக்கிறைவிசாகன்
சேந்தன்காங்கேயன்செவ்வேள்சிலம்பன்மாமஞ்ஞையூர்தி
வாய்ந்தசூர்ப்பகைவன்வள்ளிமணவாளன்றெய்வயானை
காந்தனேகுமரன்கந்தன்கலையுணர்புலவனும்பேர்.

திருமகண்மைந்தன்மாரன்சித்தசன்சம்பராரி
உருவிலிமன்மதன்மீனுறுகொடியுயர்த்ததோன்றல்
இரதிகாதலன்வசந்தனெழில்பெறுவேனிலாளி
கருதியகருப்புவில்லிகந்தர்ப்பன்மதன்பூவாளி.

திங்கள்வெண்குடையோன்றென்றற்றேரினன்வில்லிமோகன்
ஐங்கணைக்கிழவனெய்யுமலர்க்கணைவேளநங்கன்
செங்கண்மான்மைந்தன்மிக்கதிறன்மனோபவன்மனோசன்
அங்கசன்மனோபுவேநீராழிவெம்முரசோன்காமன்.

முத்தனேகுமரன்பிள்ளைமுடிவெல்வெம்படையோன்காரி
சித்தன்கேத்திரபாலனேசெந்தொடைக்குரியகோமான்
வித்தகன்ஞாளியூர்திவிறற்கருங்குதிரையாளி
வைத்தசீர்வடுகனின்னவைரவனுமமாமே.

காரியேபுறத்தவன்பூங்கடல்வண்ணனெடியசாத்தாப்
பூரணைகேள்வன்யோகிபுட்கலைதன்மணாளன்
ஒருமாசாத்தன்செண்டாயுதன்வெள்ளையானையூர்தி
ஆரியனறத்தைக்காப்போனரிகரகுமரனையன்.

அரனதுதோழனேகின்னரர்பிரானளகையாளி
புருடவாகனனேசோமன்புட்பகவிமானமுள்ளோன்
இருநிதிக்கிழவனேகபிங்கலனியக்கர்கோமான்
மரகதன்றனதன்மந்திரிவைச்சிரவணன்குபேரன்.

சமன்செங்கோற்கடவுள்கூற்றுத்தருமனந்தகனேசண்டன்
நமன்வைவச்சுதனேமற்றைநடுவனேதென்றிசைக்கோன்
யமனரிமறலியேமற்றெருமையூர்தியுமாமிப்பாற்
கமையில்காண்மறன்மடங்கல்காலன்பாசத்தனும்பேர்.

மரகதவல்லிபூகமாநீழலுற்றவஞ்சி
பரமசுந்தரியியக்கிபகவதியம்மையெங்கள்
அருகனைமுடிதரித்தாளம்பிகையறத்தின்செல்வி
தருமதேவதைபேரம்பாலிகையென்றுஞ்சாற்றலாமே.

குறிஞ்சிவேந்தன், வேலினுக்கிறை, விசாகன், சேந்தன், காங்கேயன், செவ்வேள், சிலம்பன், மஞ்ஞையூர்தி, சூர்ப் பகைவன், வள்ளிமணவாளன், தெய்வயானைகாந்தன், குமரன், புலவன். கங. (ஆ கக.)

காமன்பெயர்—திருமகண்மைந்தன், மாரன், சித்தசன், சம்பராரி, உருவிலி, மன்மதன், மீன்கொடியுயர்த்ததோன்றல், இரதிகாத லன், வசந்தன், வேனிலாளி, கருப்புவில்லி, கந்தர்ப்பன், மதன், பூவாளி. கச.

திங்கள்வெண்குடையோன், தென்றற்றேரினன், வில்லி, மோ கன், ஐங்கணைக்கிழவன், வேள், அநங்கன், மான்மைந்தன், மனோ பவன், மனோசன், அங்கசன், மனோபு, ஆழிமுரசோன். (கரு) (ஆ உஎ.)

வைரவன்பெயர்—மூத்தன், குமரன், பிள்ளை, மூவெற்படையோன், காரி, சித்தன், க்ஷேத்திரபாலன், செந்தொடைக்குரியகோமான், வித்தகன், ஞாளியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன். கசு.

ஐயன்பெயர்—காரி, புறத்தவன், கடல்வண்ணன், சாத்தா, பூரணை கேள்வன், யோகி, புட்கலைமணாளன், மாசாத்தன், செண்டா யுதன், வெள்ளையானையூர்தி, ஆரியன், அறத்தைக்காப்போன், அரிகரகுமரன். கஎ.

குபேரன்பெயர்—அரனதுதோழன், கின்னரர்பிரான், அளகை யாளி, புருடவாகனன், சோமன், புட்பகவிமானமுள்ளோன், இருநிதிக்கிழவன், ஏகபிங்கலன், இயக்கர்கோமான், மாகதன், தனதன், மந்திரி, வைச்சிரவணன். கஅ.

யமன்பெயர்—சமன், செங்கோற்கடவுள், கூற்று, தருமன், அந்த கன், சண்டன், நமன், வைவச்சுதன், நடுவன், தென்றிசைக் கோன், அரி, மறலி, எருமையூர்தி. கசு.
காலன்பெயர்—கால், மறல், மடங்கல், பாசத்தன். உ.

அருமதேவதையின்பெயர்—மரகதவல்லி, பூகநிழலுற்றவஞ்சி, பரம சுந்தரி, இயக்கி, பகவதி, அம்மை, அருகனைமுடிதரித்தாள், அம் பிகை, அறத்தின்செல்வி, அம்பாலிகை. உக.

அரணிடத்தவள்காமக்கோட்டத்தியம்பிகையேமாதாத்
தருமத்தின்செல்விதேவிசாம்பவிமலைமடந்தை
பரைசிவைகௌரிமுக்கட்பார்ப்பதியொடுபவானி
உரைகெழுசத்திநாரியுமைபெயர்மூவைந்தாமே. (கஉ)

வரநதிசீமந்தாகினிதிரிபதகைமற்றைச்
சுரநதிகங்கைபேர்சானவிபகீரதியுஞ்சொல்லும்
பெருகுமூதணங்குமோடிபேசியகொற்றிசூரி
மருவியவடுகிமாரிவடுகென்றாய்காடுகாள்பேர். (கங)

மாக்கடற்பிறந்தகோதைமாவரிப்பிரியைசெய்யாள்
ஆக்கம்பொன்பொறிசீதேவியலர்மகள்பொருளின்செல்வி
தாக்கணங்கிளையாள்பூமினிலக்குமிசலசைசெல்வந்
தேக்குமிந்திரையீரெட்டுந்திருமகணாமமாமே. (கச)

கலைமகள்பனுவலாட்டிகாயத்திரிஞானமூர்த்தி
உலகமாதாப்பிராமியொள்ளியவெள்ளைமெய்யாள்
இலகுவெண்சலசமுற்றாள்பாரதிசைமடந்தை
மலரயன்மனைவிவாக்காள்வாணிநாமகள்பேராமே. (கரு)

சேட்டையிந்திரைக்குமூத்தாள்சீர்கேடிசிறப்பிலாதாள்
ஈட்டியவேகவேணிநெடுங்காகத்துவசமுற்றாள்
கேட்டையேகெடலணங்குகழுதைவாகனிகேடெல்லா
மூட்டியகலதிதௌவைமுகடிமூதேவியாமே. (கசு)

பொருவிலிந்திராணிசெய்யபுலோமசைசசிபேரின்பந்
தருமயிராணியிந்திரன்மனைவிபேர்சயந்தன்மைந்தன்
அரமகளரம்பையென்பவமரர்தம்மாதின்பேரே
விரவுசூரணங்குதெய்வமெல்லியர்பொதுப்பேர்சொல்லும். (கஎ)

சூரிமாலினியெண்டோளிசூலிசண்டிகையேதேவி
வீரிமாதரிகங்காளிவேதாளியொடுமாதங்கி
தாரகற்செற்றதையல்பைரவிசிவைசாமுண்டி
ஆரணிவல்லணங்குகோடையையாமளைமுக்கண்ணி. (கஅ)

அலகைவெங்கொடியுயர்த்தாண்மதுபதியாளியூர்தி
உலவியமாயையுற்றயோகினிகாளிநாமம்
வலவைசூர்மகடனோடுமாபவளிடாகினிப்பேர்
இலகுசன்மினிவஞ்சப்பெண்காளிதன்னேவல்செய்வாள். (க௯)

உமையின்பெயர்—அரனிடத்தவள், காமக்கோட்டத்தி, அம்பிகை, மாதா, தருமத்தின்செல்வி, தேவி, சாம்பவி, மலைமடந்தை, பரை, சிவை, கௌரி, பார்ப்பதி, பவானி, சத்தி, நாரி. க௫.

கங்கையின்பெயர்—வரநதி, மந்தாகினி, திரிபதகை, சுரநதி, சானவி, பகீரதி. ௬.

காடுகாள்பெயர்—மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரி, வடுகன்றாய். ௭.

திருமகள்பெயர்—கடற்பிறந்தகோதை, மா, அரிப்பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், பொறி, சீதேவி, அலர்மகள், பொருளின்செல்வி, தாக்கணங்கு, இளையாள், பூமின், இலக்குமி, சலசை, இந்திரை. க௬.

நாமகள்பெயர்—கலைமகள், பனுவலாட்டி, காயத்திரி, ஞானமூர்த்தி, உலகமாதா, பிராமி, வெள்ளைமெய்யாள், வெண்சலசமுற்றாள், பாரதி, இசைமடந்தை, அயன்மனைவி, வாக்காள், வாணி. க௩.

மூதேவியின்பெயர்—சேட்டை, இந்திரைக்குமூத்தாள், சீர்கேடி, சிறப்பிலாதாள், ஏகவேணி, காகத்துவசமுற்றாள், கேட்டை, கெடலணங்கு, கழுதைவாகனி, கலதி, தௌவை, முகடி. க௨.

இந்திரன்மனைவிபெயர்—இந்திராணி, புலோமசை, சசி, அயிராணி. ௪.

இந்திரன்மைந்தன்பெயர்—சயந்தன். க.

அமரர்மாதின்பெயர்—அரமகள், அரம்பை. ௨.

தெய்வமெல்லியர்பொதுப்பெயர்—சூர், அணங்கு. ௨.

காளியின்பெயர்—சூரி, மாலினி, எண்டோளி, சூலி, சண்டிகை, தேவி, வீரி, மாதரி, கங்காளி, வேதாளி, மாதங்கி, தாரகற்செற்றதையல், பைரவி, சிவை, சாமுண்டி, ஆரணி, வல்லணங்கு, ஐயை, யாமளை, முக்கண்ணி. ௨௰.

அலகைக்கொடியுயர்த்தாள், மதுபதி, யாளியூர்தி, மாயை, யோகினி. ௫. (ஆ-௨௫.)

இடாகினியின்பெயர்—வலவை, சூர்மகள், மாயவள். ௩.

காளியேவல்செய்மகளின்பெயர்—சன்மினி, வஞ்சப்பெண். ௨.

அமரியெண்டோளிவெற்றியந்தரியம்பணத்தி
சமரிபாலைக்கிழத்திசயமகள்வீரச்செல்வி
குமரிமாமகிடற்செற்றாள்கொற்றவைசக்கிரபாணி
விமலைவண்கலையானத்திவிசையைநாரணியேவிந்தை. (௩௦)

நீலியேநெடியகாத்தியாயனிமேதிச்சென்னி
மேவிடருறமிதித்தமெல்லியல்கௌரியையை
மாலினுக்கிளையநங்கைபகவதிவாள்கைக்கொண்டாள்
சூலிசண்டிகையேகன்னிசுந்தரிதுர்க்கைநாமம். (௩௧)

அமரர்பண்ணவர்புத்தேளிர்கடவுளரண்டரும்பர்
இமையவர்விபுதர்வானோரிலேகரேபுலவர்விண்ணோர்
அமுதராதித்தர்மேலோரையரேசுரரேதீர்த்தர்
உமிழ்சுடர்மௌலிசூட்டுமுயர்நிலத்தவருந்தேவர். (௩௨)

ஈனமிலணங்குபுத்தேளேற்றசூர்கடவுடேவே
ஆனதெய்வதமேதெய்வமாமெனவுரைப்பர்நூலோர்
தானவரவுணரோடுதைத்தியர்திதியின்மைந்தர்
ஏனையவசுரராகுநிசாசரரென்றுமேற்கும். (௩௩)

நிருதரேபிசிதவூணர்நிசாசரரரக்கர்தீமை
தருமிராக்கதர்பேர்சாலகடங்கடர்தானுமாகும்
விரவுவிஞ்சையர்பேர்வித்தியாதரரேகேசரருமாங்கந்
தருவர்யாழ்வல்லோரேகாந்தருவர்கின்னரருமாமே. (௩௪)

குறள்கிருத்திமமேகூளிபாரிடஞ்சாதகஞ்செந்
நெறியில்பூதப்பேரைந்தாகீள்பிரேதம்வேதாளம்
வெறிமயல்பிசாசம்பாசம்வியந்தரமண்ணைசோகோ
டறிவழிகழுதுகூளியலகைபேய்கடிசாவும்பேர். (௩௫)

அண்டம்வானுலகுமங்குலந்தரமம்பரங்கோக்
குண்டலங்ககனங்காயங்குடிலம்புட்கரமநந்தம்
கண்டிடாவெளியேமீமாகத்தொடாசினிநபங்கம்
விண்டலம்விசும்புவேணிவியோமமாகாயமாமே. (௩௬)

வாதங்கால்வளிமருத்துவாடையேபவனம்வாயுக்
கூதிர்மாருதமால்கோதைகொண்டலேயுலவைகோடை
ஊதைவங்கூழ்சிறந்தவொலிசதாகதியுயிர்ப்புக்
காதரிகந்தவாகன்பிரபஞ்சனன்சலனன்காற்றே. (௩௭)

தூர்க்கையின்பெயர்—அமரி, எண்டோளி, அந்தரி, அம்பணத்தி, சமரி, பாலைக்கிழத்தி, சயமகள், வீரச்செல்வி, குமரி, மகிடற் செற்றாள், கொற்றவை, சக்கிரபாணி, விமலை, கலையானத்தி, விசயை, நாரணி, விந்தை. கள.

நீலி, காத்தியாயனி, மேதிச்சென்னிமிதித்தமெல்லியல், கௌரி, ஐயை, மாலினுக்கிளையநங்கை, பகவதி, வாள்கைக்கொண்டாள், சூலி, சண்டிகை, கன்னி, சுந்தரி. கஉ. (ஆ உக.)

தேவர்பெயர்—அமரர், பண்ணவர், புத்தேளிர், கடவுளர், அண்டர், உம்பர், இமையவர், விபுதர், வானோர், இலேகர், புலவர், விண் ணோர், அமுதர், ஆதித்தர், மேலோர், ஐயர், சுரர், நிர்த்தர், உயர்நிலத்தவர். கசு.

தெய்வத்தின்பெயர்—அணங்கு, புத்தேள், சூர், கடவுள், தே, தெய்வதம். சு.

அசுரர்பெயர்—தானவர், அவுணர், தைத்தியர், திதியின்மைந்தர், நிசாசரர். ரு.

இராக்கதர்பெயர்—நிருதர், பிசிதவூணர், நிசாசரர், அரக்கர், சால கடங்கடர். ரு.

விஞ்சையர்பெயர்—வித்தியாதரர், கேசரர். உ.

கந்தருவர்பெயர்—யாழ்வல்லோர், காந்தருவர், கின்னரர். ந.

பூதத்தின்பெயர்—குறள், கிருத்திமம், கூளி, பாரிடம், சாதகம். ரு.

பேயின்பெயர்—பிரேதம், வேதாளம், வெறி, மயல், பிசாசம், பாசம், வியந்தரம், மண்ணை, சோகு, கழுது, கூளி, அலகை, கடி, சாவு. கச.

ஆகாயத்தின்பெயர்—அண்டம், வானுலகு, மங்குல், அந்தரம், அம்பரம், கோ, குண்டிலம், ககனம், காயம், குடிலம், புட்கரம், அநந்தம், வெளி, மீ, மாகம், ஆசினி, நபம், கம், விண்டலம், விசும்பு, வேணி, வியோமம். உஉ.

காற்றின்பெயர்—வாதம், கால், வளி, மருத்து, வாடை, பவனம், வாயு, கூதிர், மாருதம், மால், கோதை, கொண்டல், உலவை, கோடை, ஊதை, வங்கூழ், ஓலி, சதாகதி, உயிர்ப்பு, அரி, கந்தவாகன், பிரபஞ்சனன், சலனன். உக.

கோடைமேல்காற்றினுமங்கொண்டல்கீழ்காற்றிற்கேற்கும்
வாடையினுமம்வீசும்வடகாற்றுவடந்தையென்ப
கூடியகூதிருதைகுளிர்பனிக்காற்றினுமம்
சாடியசுழல்காற்றின்பேர்சாரிகைசூறையாமே. (௪௮)

வருதென்கால்சிறுகாறென்றிமலயக்கால்வசந்தனென்றல்
அரிவசுத்தகனனங்கியனலயவாகனன்றீ
எரிசுசிசிகியேயாரலியங்குகாற்றின்சகாயன்
கருநெறிகனலியேயங்காரகன்சித்திரபானு. (௪௯)

தழலுதாசனன்சிறந்ததனஞ்சயன்சாதவேதாச்
செழுமையமுளரிதென்கீழ்த்திசையிறைசேர்ந்தார்க்கொல்லி
எழுவிதநாவேவன்னியேற்றபாவகனேதேயு
அழல்சுடர்ஞெகிழியின்னநெருப்பின்பேராறைந்தாமே. (௫0)

வடவைதீத்திரண்மடங்கல்வருவடவாமுகஞ்சூழ்
கடையனலூழித்தீயாங்கனலொழுங்கதுசுவாலை
அடைவில்விண்வீழுங்கொள்ளியுற்கையென்றறையலாமே
வெடிநறைகுய்யிம்மூன்றுமிகுநறும்புகையினுமம். (௫௧)

தாவங்காட்டழலத்தீயைத்தருகோலேஞெலிகோலென்ப
தீவிகைதீபமற்றைத்திகழ்சுடரொளிவிளக்கே
ஆவிதூபந்தூமத்தோடரிபுகைபொறிபுலிங்கம்
பாவகனத்தீத்தெய்வம்பாரியேசுவாகாதேவி. (௫௨)

வாரியாலங்கீலாலமழையலர்கமலங்காண்டம்
நீரம்புட்கரமேசிந்துநெடும்புனல்சலிலம்பாணி
காரறல்புவனநாரங்கனவிரதங்கவந்தம்
மாரியம்புதமேயப்புவருணஞ்சீவனம்வனம்வார். (௫௩

பயமழையுதகந்தோயம்பயசுசம்பரம்பானீயம்
வயமொடுசீவனீயம்வருதீர்த்தங்கீரஞ்சீதம்
அயமளகத்தோடாமமமுதங்கஞ்சலநீராகும்
நயனுறுவருணனிந்தநற்புனல்வேந்தனுமம். (௫௪

பரிதிபாற்கரனுதித்தன்பனிப்பகைசுடர்பதங்கன்
இருள்வலிசவிதாச்சூரனெல்லுமார்த்தாண்டனென்றாழ்
அருணனுதவனேமித்திரனுயிரஞ்சோதியுள்ளோன்
தரணிசெங்கதிரோன்சண்டன்றபனனேயொளியேசான்றோன்.

மேல்காற்றின்பெயர்-கோடை. கீழ்காற்றின்பெயர்-கொண்டல். க.
வாடையின்பெயர்—வடகாற்று, வடந்தை. உ.
பனிக்காற்றின்பெயர்—கூதிர், ஊதை. உ.
சுழல்காற்றின்பெயர்—சாரிகை, சூறை. உ.

தென்றலின்பெயர்—தென்கால், சிறுகால், தென்றி, மலயக்கால், வசந்தன். ரு.

நெருப்பின்பெயர்—அரி, வசு, தகனன், அங்கி, அனல், அயவாகனன், தீ, எரி, சுசி, சிகி, ஆரல், காற்றின்சகாயன், கருநெறி, கனலி, அங்காரகன், சித்திரபானு. கசு.

தழல், உதாசனன், தனஞ்சயன், சாதவேதா, முளரி, தென்கீழ்த்திசையிறை, சேர்ந்தார்க்கொல்லி, எழுநா, வன்னி, பாவகன், தேயு, அழல், சுடர், நெகிழி. கச. (ஆ ௩0.)

ஊழித்தீயின்பெயர்—வடவை, தீத்திரள், மடங்கல், வடவாமுகம், கடையனல். ரு. கனலொழுங்கின்பெயர்—சுவாலை. க.
விண்வீழ்கொள்ளியின்பெயர்—உற்கை. க.
நறும்புகையின்பெயர்—வெடி, நறை, குய். ௩.

காட்டழலின்பெயர்—தாவம். க.
தீக்கடைகோலின்பெயர்—ஞெலிகோல். க.
விளக்கின்பெயர்—தீவிகை, தீபம், சுடர், ஒளி. ச.
புகையின்பெயர்—ஆவி, தூபம், தூமம், அரி. ச.
தீப்பொறியின்பெயர்—புலிங்கம். க.
தீத்தெய்வத்தின்பெயர்—பாவகன். க.
தீத்தெய்வத்தின்பாரியின்பெயர்—சுவாகாதேவி. க.

நீரின்பெயர்—வாரி, ஆலம், கீலாலம், மழையலர், கமலம், காண்டம், நீரம், புட்கரம், சிந்து, புனல், சலிலம், பாணி, கார், அறல், புவனம், நாரம், கனவிரதம், கவந்தம், மாரி, அம்பு, உதம், அப்பு, வருணம், சீவனம், வனம், வார். உசு.

பயம், மழை, உதகம், தோயம், பயசு, சம்பரம், பானீயம், வயம், சீவனீயம், தீர்த்தம், கீரம், சீதம், அயம், அளகம், ஆம், அம், அமுதம், கம், சலம். கக. (ஆ சரு.)
வருணன்பெயர்—புனல்வேந்தன். க.

சூரியன்பெயர்—பரிதி, பாற்கரன், ஆதித்தன், பனிப்பகை, சுடர், பதங்கன், இருள்வலி, சவிதா, சூரன், எல், மார்த்தாண்டன், என்றூழ், அருணன், ஆதவன், மித்திரன், ஆயிரஞ்சோதியுள்ளோன், தரணி, செங்கதிரோன், சண்டன், தபனன், இனி, சான்றோன். உஉ.

அனலியேயரியேபானுவலரியேயண்டயோனி
கனலியேவிகர்த்தனன்வெங்கதிரவன்பகலோன்வெய்யோன்
தினகரன்பகலேசோதிதிவாகரனரியமாவே
இனனுடனுதயன்ஞாயிறெல்லேயேகிரணமாலி. (௫௬)

விரவுமேழ்பரியோன்வேந்தன்விரிச்சிகன்விரோசனன்பேர்
இரவிவிண்மணியருக்கனேமேழுஞ்சூரியன்பேர்
பரிதியின்வட்டந்தானேவிசயமாம்பரிதிவீசுங்
கிரணமேகரமுமற்றைக்கிளர்ந்ததீவிரமுமாகும். (௫௭)

நிலவுசோமன்களங்கனிசாபதிபிறைகுளிர்ந்த
கலேயினனுடுவின்வேந்தன்கலாநிதியொடுகுபேரன்
அலவனேசசியேதிங்களம்புலிநிசாகரன்வான்
உலவிமகிரணன்சாந்தமுற்றதண்ணவன்குரங்கி. (௫௮)

மதியிராக்கதிரேயிந்துமருவுதானவனேயல்லோன்
விதுவொடுகுமுதநண்பன்சுதாகரன்வேந்தனுலோன்
சிதைவிலாமுயலின்கூடுபசுங்கதிர்த்தேவென்றெல்லாம்
புதியசந்திரன்றூவேழுமெட்டுமேபுகன்றநாமம். (௫௯)

கருதியசெந்தீவண்ணன்காட்டுமங்காரகன்சேய்
குருதிவக்கிரனேபௌமன்குசனிலமகனரத்தன்
மருவியவழலோன்மற்றைமங்கலனுடனேயாரல்
விரவியவுதிரனின்னமேவுசெவ்வாயினமம். (௬0)

சிந்தைகூரியன்கணக்கன்றேர்ப்பாகனருளான்சாமன்
வந்ததுதுவனேமாலேமதிமகனறிஞன்பாகன்
அந்தமாம்புலவன்மற்றையனுவழிமேதைபச்சை
புந்திபண்டிதனீரெட்டும்புதன்பெயராகுமன்றே. (௬௧)

தீதிலாத்தெய்வமந்திரிசிகண்டிசனமைச்சன்சீவன்
வேதனுண்டளப்பானுசான்வேந்தன்பொன்வியாழன்பேராம்
ஓதியவகரமந்திரியுசனன்பார்க்கவனேசுங்கன்
கோதில்சுக்கிரன்பளிங்குபுகர்கவிமழைக்கோள்வெள்ளி. (௬௨)

கதிர்மகன்மந்தன்காரிகரியவன்சௌரிமேற்கோள்
முதுமகன்பங்குநீலன்முடவனேமுகன்சனிப்பேர்
மதியுணுமிராகுநாமமற்றதுதமங்கரும்பாம்
அதிகமாங்கேதுச்செம்மைசிகிகதிர்ப்பகையுமாமே. (௬௩)

அனலி, அரி, பானு, அலரி, அண்டயோனி, கனலி, விகர்த்தனன், கதிரவன், பகலோன், வெய்யோன், தினகரன், பகல், சோதி, திவாகரன், அரியமா, இனன், உதயன், ஞாயிறு, எல்லை, கிரணமாலி. உ0.

ஏழ்பரியோன், வேந்தன், விரிச்சிகன், விரோசனன், இரவி, விண்மணி, அருக்கன். எ. (ஆ சக.)
பரிதியின்வட்டத்தின்பெயர்—விசயம். க.
பரிதியின்கிரணத்தின்பெயர்—கரம், தீவிரம். உ.

சந்திரன்பெயர்—நிலவு, சோமன், களங்கன், நிசாபதி, பிறை, கலையினன், உடுவின்வேந்தன், கலாநிதி, குபேரன், அலவன், சசி, திங்கள், அம்புலி, நிசாகரன், இமகிரணன், தண்ணவன், குரங்கி. கஎ.

மதி, இராக்கதிர், இந்து, தானவன், அல்லோன், விது, குமுதநண்பன், சுதாகரன், வேந்தன், ஆலோன், முயலின்கூடு, பசுங்கதிர்த்தே. கஉ. (ஆ உக.)

செவ்வாயின்பெயர்—செந்தீவண்ணன், அங்காரகன், சேய், குருதி, வக்கிரன், பௌமன், குசன், நிலமகன், அரத்தன், அழலோன், மங்கலன், ஆரல், உதிரன். கங.

புதன்பெயர்—சிந்தைகூரியன், கணக்கன், தேர்ப்பாகன், அருணன், சாமன், தூதுவன், மால், மதிமகன், அறிஞன், பாகன், புலவன், அனுவழி, மேதை, பச்சை, புந்தி, பண்டிதன். கச.

வியாழன்பெயர்—தெய்வமந்திரி, சிகண்டிசன், அமைச்சன், சீவன், வேதன், ஆண்டளப்பான், ஆசான், வேந்தன், பொன். கூ.
வெள்ளியின்பெயர்—அசுரமந்திரி, உசனன், பார்க்கவன், சுங்கன், சுக்கிரன், பளிங்கு, புகர், கவி, மழைக்கோள். கூ.

சனியின்பெயர்—கதிர்மகன், மந்தன், காரி, கரியவன், சௌரி, மேற்கோள், முதுமகன், பங்கு, நீலன், முடவன், நோய்முகன். கக.
இராகுவின்பெயர்—தமம், கறுப்பு. உ.
கேதுவின்பெயர்—செம்மை, சிகி, கதிர்ப்பகை. க.

கொண்டலைமைவருடையாடுகொறிமறிமேடமென்ப
குண்டைசேமூரிபுல்லங்கோவிடையிடபமாகும்
தண்டியாழ்விழவிரட்டைசவைமகண்மிதுனந்தானே
நண்டுஞெண்டலவன்சேக்கைநள்ளிகர்க்கடகமாமே. (௬௪)

கொலையரியாளிமாவேகொடும்புலிசிங்கமென்ப
மூலமடந்தையர்பேரெல்லாமொழிந்திடுங்கன்னிதானே
துலைநிறைநிறுப்பான்சீர்கோறூக்குவாணிகன்றுலாப்பேர்
உலைவுறுதெறுக்காறேளேயோதியவிருச்சிகப்பேர். (௬௫)

கொடுமரந்துரோணஞ்சாபங்கொடுஞ்சிலைதனுநாற்பேரே
வடிவின்மான்கலைசுறாவேமகரராசிக்குமுப்பேர்
குடமொடுகீரஞ்சாடிகுடங்கரேகும்பமென்ப
நெடியமீன்மயிலைமற்சஞ்சலசரநேருமீனம். (௬௬)

பரிமருத்துவநாள்வாசிபரவுமைப்பசியாழேறு
டிரலையேமுதனாள்சென்னியென்பதச்சுவினியின்பேர்
பரணியேகிழவன்சோறுபகலவன்றராசுதாழி
தருமனாளடுப்புப்பூதந்தாசிமுக்கூட்டுத்தானே. (௬௭)

எரிபிறந்திடுநாளாரலிறாலறுவாயளக்கர்
கருதுநாவிதனேயங்கிகார்த்திகையளகுமேற்கும்
பிரமனாள்சகடுபண்டிபேசியசதியேவையம்
உருள்விமானந்தேருற்றூலுரோணியேயுரோகிணிப்பேர். (௬௮)

திங்களாண்மதிபேராளன்சேர்ந்தமான்றலையேமாழ்கு
பொங்குமார்கழியேமும்மீன்புகழ்நரிப்புறமேபாலை
இங்கிவையொன்பதென்பமிருகசீரிடத்தினாமம்
செங்கைமூதிரையாதிரையீசன்றினமிவையாதிரைப்பேர். (௬௯)

கருதியவதிதிநாளேகழைபுனர்தங்கரும்பு
பொருவிலாப்புனிதம்பிண்டியாவணம்புனர்பூசப்பேர்
குருவினாள்கொடிறுவண்டுகுறித்தகாற்குளமேபூசம்
அரவினாள்கவ்வைபாம்பேயாயிலாயிலியநாற்பேர். (௭௦)

கொடுநுகம்வேள்விவாய்க்கால்குறித்தவேட்டுவனேமாசி
வடுவறமுதலிற்றோன்றிவருஞ்சனிமகநாளென்ப
இடையெழுஞ்சனியேதூர்க்கையெலியுவ்வதிநாளோடு
கடியநாவிதனேயெய்யுங்கணையிருமூப்பேர்பூரம். (௭௧)

aśvini

bharani

Krittika

Rohiṇi

mṛigaśiras

árdrá

Punarvasu

Pushya

áśleshá

maghá

Purva phalguni

மேடத்தின்பெயர்—மை, வருடை, ஆடு, கொறி, மறி. ரு.
இடபத்தின்பெயர்—குண்டை, சே, மூரி, புல்லம், கோ, விடை. சு.
மிதுனத்தின்பெயர்—தண்டு,யாழ்,விழவு,இரட்டை,சவைமகள். ரு.
கர்க்கடகத்தின்பெயர்-நண்டு,ஞெண்டு,அலவன்,சேக்கை,நள்ளி. ரு.

சிங்கத்தின்பெயர்—அரி, யாளி, மா, கொடும்புலி. ச.
கன்னியின்பெயர்—மடந்தையர்பேரெல்லாம்மொழிந்திடும்.
துலாத்தின்பெயர்—துலை, நிறை, நிறுப்பான், சீர், கோல், தூக்கு, வாணிகன். எ. விருச்சிகத்தின்பெயர்—தெறுக்கால், தேள். உ.

தனுவின்பெயர்—கொடுமரம், துரோணம், சாபம், சிலை. ச.
மகரத்தின்பெயர்—மான், கலை, சுறு. ங.
கும்பத்தின்பெயர்—குடம், கரீரம், சாடி, குடங்கர். ச.
மீனத்தின்பெயர்—மீன், மயிலை, மற்சம், சலசரம். ச.

அச்சுவினியின்பெயர்—பரி, மருத்துவநாள், வாசி, ஐப்பசி, யாழ், ஏறு, இரலை, முதனாள், சென்னி. க.
பரணியின்பெயர்—கிழவன், சோறு, பகலவன், தராசு, தாழி, தருமனாள், அடுப்பு, பூதம், தாசி, முக்கூட்டு. கo.

கார்த்திகையின்பெயர்—எரிநாள்,ஆரல்,இறால், அறுவாய், அளக்கர், நாவிதன், அங்கி, அளகு. அ.
உரோகிணியின்பெயர்—பிரமனாள், சகடு, பண்டி, சதி, வையம், உருள், விமானம், தேர், ஊற்றால், உரோணி. கo.

மிருகசீரிடத்தின்பெயர்—திங்களாள், மதி, பேராளன், மான்றலை, மாழ்கு, மார்கழி, மும்மீன், நரிப்புறம், பாலை. க.
திருவாதிரையின்பெயர்—செங்கை, மூதிரை, யாழ், ஈசன்றினம். ச.

புனர்பூசத்தின்பெயர்—அதிதிநாள், கழை, புனர்தம், கரும்பு, புனிதம், பிண்டி, ஆவணம். எ.
பூசத்தின்பெயர்—குருவினாள், கொடிறு, வண்டு, காற்குளம். ச.
ஆயிலியத்தின்பெயர்—அரவினாள், கௌவை, பாம்பு, ஆயில். ச.

மகத்தின்பெயர்—கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதலில்வருஞ்சனி. சு.
பூரத்தின்பெயர்—இடையெழுஞ்சனி, தூர்க்கை, எலி, பகவதிநாள், நாவிதன், கணை. சு.

பங்குனிகடையில்வந்துபற்றியசனியினோடு
செங்கதிர்பிறந்தநாளுஞ்சிறந்தவுத்தரமென்றாகும்
தங்குகாமரமேயங்கிசார்ந்தநாள்கௌத்துவத்தோ
டங்கைமீன்களிறுநவ்வியையவிரலத்தமேழ்பேர். (௭௨)

அளக்குநெய்பயறுமீனேயறுவையேயாடைதூசு
துளக்கிலாநடுநாடச்சன்றுவட்டாநாள்சித்திரைப்பேர்
விளக்கொடுநிரக்கால்வீழ்க்கைவெறுநுகங்காற்றினாளே
இளத்தியகாற்றுத்தீபங்கேடிலாச்சோதியேழ்பேர். (௭௩)

முற்றில்வைகாசிகாற்றுமுந்துநாண்முறத்துனோடு
வெற்றிசேர்சுளகுசேட்டைவிசாகநாளிருமுப்பேரே
புற்றாளிபெண்ணைதேளேபோந்தைமித்திரநாளாறும்
சொற்றனரனுடமென்றுசோர்விலாநூலோர்தாமே. (௭௪)

சேட்டையிந்திரனாள்வேதிசெந்தழலெரியிவவைந்தும்
கேட்டைவல்லாரையென்றுங்கிளத்துபவளத்தநூலோர்
தேட்கடைகுருகுகொக்குச்சிலையுடனன்றிலானி
ஈட்டியவசுரநாளிவவேழ்பெயர்மூலமென்ப. (௭௫)

உடைகுளமுற்குளங்கீருதித்தநாள்பூராடப்பேர்
கடையினிற்குளமேயாணிகருதுவிச்சுவநாளாடி
மிடையிலுத்தராடமென்பமேவியவோணமாயோன
அடையுநாளுலக்கைமுக்கோல்சிரவணஞ்சோணையாமே. (௭௬)

மருவியகாகப்புள்ளேவசுக்களாள்பறவைபுள்ளு
விரவுமாவணியவிட்டம்விளம்பியநாமமைந்தாம்
பெருகியசெக்குச்சுண்டன்பேசியபோரேகுன்று
வருணனாள்சதயமைந்தும்வகுத்தபேர்தொகுத்ததாமே. (௭௭)

பொருவின்முற்கொழுங்காலுழிபுரட்டையேபூரட்டாதி
முரசுபிற்கொழுங்கான்மன்னனுத்தரட்டாதிமுப்பேர்
இரவிநாள்கலமேதோணியேற்றமாந்தொழுவேநாவாய்
பெருகியகடைநாள்சூலம்பெருநாளெட்டிரேவதிப்பேர். (௭௮)

வடமீனேசாலியென்பமற்றருந்ததியின்பேரே
உடுவேதாரகையேபம்மேயுற்கையேசுக்கைவிண்மீன்
கடிகைநாழிகையாங்கன்னலிருத்தையுமதுவேகாட்டுந்
துடிகலைவிகலைமுப்பேர்சொல்லியகாலநுட்பம். (௭௯)

uttara phalguni

Hasta

chitrá

Svâti

Visakhá

anurádhá

Jyéshthá - oldest

mula = root - beginning

Purva ashádhá

uttara ashádhá

Sravana

'Sravishthá

'Satabhishaj

Purva bhadrápadá    Prosthapada

uttara bhadrapadá

Révati

உத்தரத்தின்பெயர்—பங்குனி, கடையெழுஞ்சனி, செங்கதிர் நாள். ங.
அத்தத்தின்பெயர்—காமரம், அங்கிநாள், கௌத்துவம், கைம்மீன், களிறு, நவ்வி, ஐவிரல். எ.

சித்திரையின்பெயர்—நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டாநாள். கூ.
சோதியின்பெயர்—விளக்கு, மரக்கால், வீழ்க்கை, வெறுநுகம், காற்றின்னாள், காற்று, தீபம். எ.

விசாகத்தின்பெயர்—முற்றில், வைகாசி, காற்றுநாள், முறம், சுளகு, சேட்டை. சு.
அனுடத்தின்பெயர்—புல், தாளி, பெண்ணை, தேள், போந்தை, மித்திரநாள். சு.

கேட்டையின்பெயர்—சேட்டை, இந்திரனாள், வேதி, தழல், எரி, வல்லாரை. சு.
மூலத்தின்பெயர்—தேட்கடை, குருகு, கொக்கு, சிலை, அன்றில், ஆனி, அசுரநாள். எ.

பூராடத்தின்பெயர்—உடைகுளம், முற்குளம், நீர்நாள். ங.
உத்தராடத்தின்பெயர்—கடைக்குளம், ஆனி, விச்சுவநாள், ஆடி. ச.
திருவோணத்தின்பெயர்—மாயோனாள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை. ரு.

அவிட்டத்தின்பெயர்—காகப்புள், வசுக்கனாள், பறவை, புள், ஆவணி. ரு.
சதயத்தின்பெயர்—செக்கு, சுண்டன், போர், குன்று, வருணனாள். ரு.

பூரட்டாதியின்பெயர்—முற்கொழுங்கால், நாழி, புரட்டை. ங.
உத்தரட்டாதியின்பெயர்—முரசு, பிற்கொழுங்கால், மன்னன். ங.
இரேவதியின்பெயர்—இரவிநாள், கலம், தோணி, தொழு, நாவாய், கடைநாள், சூலம், பெருநாள். அ.

அருந்ததியின்பெயர்—வடமீன், சாலி. உ.
விண்மீனின்பெயர்—உடு, தாரகை, பம், உற்கை, சுக்கை. ரு.
நாழிகையின்பெயர்—கடிகை, கன்னல், இருத்தை. ங.
காலநுட்பத்தின்பெயர்—துடி, கலை, விகலை. ங.

வேலையேயமையஞ்செவ்வியேல்வையேபொழுதுபாணி
காலைகொன்பதமேபோழ்துகாலப்பேரீரைந்தாகும்
சாலநீட்டித்தலோடுசார்ந்தபாணித்தறானும்
நீலவுண்கண்ணாய்மற்றுநெடித்தலுநெடும்போழ்தென்ப. (௮௦)

ஒல்லையேயிறையேயுற்றசிறுவரையுடனிலேசும்
வல்லைமாத்திரைகள்காலவிரைவின்பேர்வகுக்கிலாறும்
நல்லநண்பகலேயுச்சிநடுப்பகன்மத்தியானம்
இல்லுடன்பவனமோரையிராசியின்பெயராமென்ப. (௮௧)

அல்லிபாவரியேகங்குலல்கல்யாமினியேநத்தம்
எல்லியோடியாமமாலையிரசனிநிசியிராவாம்
எல்லொடுதிவாப்பகற்பேரேல்வையேதிவசம்வைகல்
அல்கலேதினமேயெல்லையாணியம்பகலேநாளாம். (௮௨)

சருவரியந்தகாரங்கச்சளந்தமந்துவாந்தம்
இருளென்பதிமிரமோடுதுணங்கறலென்றுமேற்கும்
நெருநலுநென்னலுந்தாணிகழ்த்துபமுன்னைநாளைப்
பெருகியபின்றைபிற்றைபின்னையென்றியம்பலாமே. (௮௩)

புலரிவைகறையினும்விடியலும்போற்றுமப்பேர்
நிலவுசந்திரிகைவெய்யினிகழ்ந்தவாதவமேயென்றாழ்
இலகியமாலைசாயஞ்சந்தியாம்யாமஞ்சாமம்
அலைவறுபருவந்தானேயாணியமிருதுவாகும். (௮௪)

திதியொடுபக்கந்தானேயொருகலைதெரிக்குமென்ப
மதியொடுதிங்கள்சொல்லின்மாதமேபேதமில்லை
மதிதெரிகலையிராப்பேர்வருஞ்சினீவாலியாகும்
மதிமறைகலையிராவின்வரும்பெயர்குகூவென்றாமே. (௮௫)

அந்தமாமுவாவேபவ்வம்பூரணையிருபேராகும்
இந்துவோடிரவிகூட்டமமாவாசையையுமென்ப
நந்தைபத்திரையினோடுநாட்டியசயையிருத்தை
முந்துபூரணையாம்பக்கமுதற்றொட்டுமூன்றுவட்டம். (௮௬)

பரவியகாரேகூதிர்முன்பினிற்பனிகளோடு
விரவியவிளையவேனில்விரைந்திடுமுதிர்ந்தவேனில்
மருவுமாவணியேயாதிமற்றிரண்டிரண்டுமாதம்
பருவமூவிரண்டுமொய்ந்துபார்த்திடின்வாய்த்தபேராம். (௮௭)

காலத்தின்பெயர்—வேலை, அமையம், செவ்வி, எல்லை, பொழுது, பாணி, காலை, கொன், பதம், போழ்து. கo.
நெடும்போழ்தின்பெயர்—நீட்டித்தல், பாணித்தல், நெடித்தல். ங.

காலவிரைவின்பெயர்—ஒல்லை, இறை, சிறுவரை, இலேசம்,வல்லை, மாத்திரை. ரு.
மத்தியானத்தின்பெயர்—நண்பகல், உச்சி, நடுப்பகல். ங.
இராசியின்பெயர்—இல், பவனம், ஓரை. ங.

இராவின்பெயர்—அல், விபாவரி, கங்குல்,அல்கல், யாமினி, நத்தம், எல்லி,யாமம்,மாலை,இரசனி,நிசி.கக. பகலின்பெயர்-எல்,திவா.உ.
நாளின்பெயர்—எல்லை, திவசம், வைகல், அல்கல், தினம், எல்லை, ஆனியம், பகல். அ.

இருளின்பெயர்—சருவரி, அந்தகாரம், கச்சளம், தமம், துவாந்தம், திமிரம், துணங்கறல். எ.
முன்னைநாளின்பெயர்—நெருநல், நென்னல். உ.
பின்னைநாளின்பெயர்—பின்றை, பிற்றை. உ.

வைகறையின்பெயர்—புலரி, விடியல். உ. நிலவின்பெயர்—சந்திரிகை. க. வெய்யிலின்பெயர்—ஆதவம், என்றூழ். உ.
மாலையின்பெயர்—சாயம், சந்தி. உ. சாமத்தின்பெயர்—யாமம்.க.
பருவத்தின்பெயர்—ஆனியம், இருது. உ.

ஒருகலையின்பெயர்—திதி, பக்கம். உ.
மாதத்தின்பெயர்—மதி, திங்கள். உ.
மதிதெரிகலையிராவின்பெயர்—சினீவாலி. க.
மதிமறைகலையிராவின்பெயர்—குகு. க.

பூரணையின்பெயர்—உவா, பவ்வம். உ.
அமாவாசையின்பெயர்—இந்துவோடிரவிகூட்டம், அமை. உ.
முதற்பக்கந்தொடங்கி மூன்றுவட்டமாகவருகிற வைந்துபக்கங்களின்பெயர்—நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை, * ரு.

ஆவணிமுதலிரண்டிரண்டுமாதமாகியவறுவகைப்பருவத்தின்பெயர்-கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். ஆவணி புரட்டாதி கார், ஐப்பசி கார்த்திகை கூதிர், மார்கழி தை முன்பனி, மாசி பங்குனி, பின்பனி, சித்திரை வைகாசி இளவேனில், ஆனி ஆடி முதுவேனில்.

---

| | | |
|---|---|---|
| * அவை.க,சு,கக,நந்தை. | ங,அ,கங,சயை. | ரு,கo,கரு,பூரணை. |
| உ,எ,கஉ,பத்திரை. | ச,கூ,கச,இருத்தை | |

இகழ்வில்வற்சரமேயாண்டேசமைமுப்பேர்வருடமென்ப
பகரிலாயனமுமப்பேரயனமேயாண்டிற்பாதி
உகமுடிவுடன்மடங்கலூழியாமாயுள்வாழ்நாள்
மகிழ்வுறுகற்பந்தானேமலரயன்வாழ்நாளென்ப. (௮௮)

சொரிதுளிதிவலைதுவல்சீகரந்தூறன்மாரி
வருடமோடுறையேயாலிவானமுமழைப்பேர்பத்தாம்
பெருமழையென்பதானேபேசிலாசாரமாகும்
விரவியபனித்தல்சோனைவிடாமழையிருபேராமே. (௮௯)

வாலியதிவலைதுவல்வண்சிதர்சீகரத்தோ
டாலியேதளியேமிக்கவுறைதுளியாகவேழ்பேர்
ஆலியேகரகமற்றைக்கனோபலமாலங்கட்டி
மேலினுமந்தானும்பர்மேக்குமாங்கிழக்குக்கீழே. (௯௦)

பயனுறுமங்குல்சீதம்பயோதரந்தாராதாரம்
குயின்மழையெழிலிமஞ்சுகொண்டல்சீமூதங்கொண்மூ
வியன்முகில்விண்விசும்புவிளையுமால்சலதரஞ்செல்
புயல்கனங்கந்தரங்கார்போற்றுமைமாரிமேகம். (௯௧)

வெடியொலியசனிசெல்லுவிண்ணேறுமடங்கலாறே
இடியின்பேருருமுமற்றையனலேறுமிதன்பேரென்ப
ஒடுவித்துத்துத்தடித்துநீள்சம்பைசபலையோடு
கடியசஞ்சலையேமின்னல்கனருசிமின்னினேழ்பேர். (௯௨)

பனியிமந்துகினமும்பேர்பரிவேடமூர்கோள்வட்டம்
தனியிடுவானவில்லேயிந்திரதனுவென்றாகும்
இனையவைதேவரீட்டச்செய்யுணூற்றொன்றிசைத்தான்
புனைகுணபத்திரன்றாள்போற்றுமண்டலவன்றானே. (௯௩)

தெய்வப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ௧௦௧.

வருடத்தின்பெயர்—வற்சரம், ஆண்டு, சமை, ஆயனம். ௪.
ஆண்டிற்பாதியின்பெயர்—அயனம். க.
ஊழிகாலத்தின்பெயர்—உகமுடிவு, மடங்கல். ௨.
வாழ்நாளின்பெயர்—ஆயுள். க.
அயன்வாழ்நாளின்பெயர்—கற்பம். க.

மழையின்பெயர்—துளி, திவலை, தூவல், சீகரம், தூறல், மாரி, வருடம், உறை, ஆலி, வானம். ௧௦.
பெருமழையின்பெயர்—ஆசாரம். க.
விடாமழையின்பெயர்—பனித்தல், சோனை. ௨.

துளியின்பெயர்—திவலை, தூவல், சிதர், சீகரம், ஆலி, தளி, உறை. எ.
ஆலங்கட்டியின்பெயர்—ஆலி, கரகம், கனோபலம். ௩.
மேலின்பெயர்—உம்பர், மேக்கு. ௨.
கீழின்பெயர்—கிழக்கு. க.

மேகத்தின்பெயர்—மங்குல், சீதம், பயோதரம், தாராதாரம், குயின், மழை, எழிலி, மஞ்சு, கொண்டல், சீமூதம், கொண்மூ, முகில், விண், விசும்பு, மால், சலதரம், செல், புயல், கனம், கந்தரம், கார், மை, மாரி. ௨௩.

இடியின்பெயர்—வெடி, ஒலி, அசனி, செல், விண்ணேறு, மடங்கல், உரும், அனலேறு. ௮.
மின்னின்பெயர்—வித்துத்து, தடித்து, சம்பை, சபலை, சஞ்சலை, மின்னல், கனருசி. எ.

பனியின்பெயர்—இமம், துகினம். ௨.
பரிவேடத்தின்பெயர்—ஊர்கோள், வட்டம். ௨.
வானவில்லின்பெயர்—இந்திரதனு. க.

இரண்டாவது

## மக்கட்பெயர்த்தொகுதி.

### காப்பு.

தேனவிழ்த்தளிகளெல்லாஞ்செவ்வழிபாடாநின்ற
பூநகைத்திலங்குகஞ்சப்பொகுட்டின்மீதேயொதுங்கு
நான்முகக்கடவுள்பாதநாவிணைவிற்றியேத்தி
மானவர்க்கியன்றபேரைவகுத்திடுந்தொகுதிசொல்வாம். (க)

துறவர்சார்பில்லோர்நீத்தோர்தூய்த்தவர்முனைவர்மெய்யர்
அறவர்மாதவர்கடிந்தோரந்தணரடிகளையர்
உறுவர்தாபதர்விளங்குமிருடிகளுயர்ந்தோர்யோகர்
அறிஞர்பண்ணவர்சிறந்தவருந்தவர்முனிவராமே. (உ)

தாவில்சௌமியரேயோகர்திகம்பரர்சமணநீத்தோர்
மாவிரதியரேபாசுபதர்காளாமுகர்சைவத்தோர்
மேவுமால்சமயத்தோர்பேர்மிக்கபாகவதராகும்
சீவகர்பௌத்தரோடுதேரர்சாக்கியரேபுத்தர். (ங)

நீரினிற்பூவில்வானினினைத்துழியொதுங்குகின்ற
சாரணரெண்மராவார்சமணரிலிருத்தி * பெற்றோர்
பாரியசடைமுடித்தபடிவர்தாபதரேயென்ப
கூரியகும்பயோனிகுறுமுனியகத்தியன்பேர். (ச)

ஐயர்வேதியரேநூலோராறுதொழிலாளராய்ந்தோர்
மையில்பூசுரரேசெந்தீவளர்ப்பவர்தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரேயாதிவருணர்முப்புரிநூன்மார்பர்
மெய்யர்விப்பிரரேவேதபாரகர்வேள்வியாளர். (ரு)

இருபிறப்பாளர்பார்ப்பாரேற்றமேற்குலருயர்ந்தோர்
வருமறையவர்தம்பேராம்வன்னியேபிரமசாரி
அருமறைக்கொடியோன்வின்னூலாளன்பாரத்துவாசன்
தருநெறிவழாத்துரோணாசாரியன்பேர்மூன்றுமே. (சா)

* இருத்தி—சித்தி.

# பெயர்ப்பிரிவு

இ - ள். அளிகள் எல்லாம் தேன் அவிழ்த்துச் செவ்வழி பாடாநின்ற - வண்டுகளெல்லாம் தேனின்பொருட்டு அலர்த்திச் செவ்வழிப்பண்ணைப் பாடுகின்ற—பூ நகைத்து இலங்கு கஞ்சப் பொகுட்டின் மீது ஒதுங்கு - மற்றமலர்களெல்லாவற்றையும் இகழ்ந்து விளங்காநின்ற தாமரையினது கொட்டையின்மேல் நடந்த—நான்முகக் கடவுள் பாதம் நாவினால் நவிற்றி ஏத்தி - நான்குமுகங்களையுடைய அருகக்கடவுளது திருவடிகளை நாக்கினாற்சொல்லித் துதிசெய்து,—மானவர்க்கு இயன்ற பேரை வகுத்திடும் தொகுதி சொல்வாம் - மக்கட்பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவாம். எ - று.

முனிவர்பெயர்—துறவர், சார்பில்லோர், நீத்தோர், தவர், முனைவர், மெய்யர், அறவர், மாதவர், கடிந்தோர், அந்தணர், அடிகள், ஐயர், உறுவர், தாபதர், இருடிகள், உயர்ந்தோர், யோகர், அறிஞர், பண்ணவர், அருந்தவர். ௨௦.

சமணநீத்தோர்பெயர்—சௌமியர், யோகர், திகம்பரர். ௩.
சைவர்பெயர்—மாவிரதியர், பாசுபதர், காளாமுகர். ௩.
மால்சமயத்தோர்பெயர்—பாகவதர். ௧.
புத்தர்பெயர்—சீவகர், பௌத்தர், தேரர், சாக்கியர். ௪.

சமணரிற்சித்திபெற்றோராவார்—நீரிலும் பூதலத்திலும் வானிலும் நினைத்தவிடங்களிற் சஞ்சரிக்கின்ற சாரணரென்மர்.
சடைமுடித்தபடிவர்பெயர்—தாபதர்.
அகத்தியன்பெயர்—கும்பயோனி, குறுமுனி. ௨.

மறையவர்பெயர்—ஐயர், வேதியர், நூலோர், அறுதொழிலாளர், ஆய்ந்தோர், பூசுரர், இவளர்ப்பவர், தொழுகுலத்தோர், அந்தணர், ஆதிவருணர், முப்புரிநூன்மார்பர், மெய்யர், விப்பிரர், வேதபாரகர், வேள்வியாளர். ௧௫.

இருபிறப்பாளர், பார்ப்பார், மேற்குலர், உயர்ந்தோர். ௪. (ஆ. ௧௯.)
பிரமசாரியின்பெயர்—வன்னி. ௧.
துரோணாசாரியன்பெயர்—மறைக்கொடியோன், வின்னூலாளன், பாரத்துவாசன். ௩.

சான்றவர்மிக்கோர்நல்லோர்தகுதியோர்மேலோராய்ந்தோர்
ஆன்றவருலகமேதாவியரறிஞர்கள்பேராசான்
ஊன்றுதேசிகனேயோசனுபாத்தியாயன்பணிக்கன்
ஏன்றவாசாரியன்பேரேற்றமாணக்கன்கற்போன். (எ)

கலைஞர்மேதையரேமூத்தோர்கற்றவரவைவிற்பன்னர்
தலைமையாங்கவிஞர்சங்கஞ்சாரதிசூரிசாடு
புலவர்பண்டிதர்பேர்போற்றிலறிஞரும்புதருமாகும்
கலைஞரேகவிவல்லோராங்கணக்காயரோத்துரைப்போர். (அ)

குரவனையன்சுவாமிகோமானேயடிகளத்தன்
பரவியவுரவோனீசன்பதியிறைமூத்தோன்பேராம்
குரிசிலோடண்ணலேந்தல்கூறியதோன்றல்செம்மல்
பெருமையிற்சிறந்தோனென்றுபேசினர்மாசிலோர். (கூ)

நாதனேகொழுநன்காந்தனுட்டியபதிகோனீசன்
ஆதிபனதிபன்செம்மலரன்பிரானதிமன்னன்
ஏதிலெப்பொருட்குந்தானேயிறைபெயரிவைபன்மூன்றும்
ஓதுசீருலகமென்பதுயர்ந்தவர்க்கியம்புநாமம். (க0)

சவைசமவாயஞ்சங்கஞ்சமுதாயஞ்சமூகங்கோட்டி
அவைகுழாங்குழுவேகூட்டமடர்திரள்கணங்களீரா
றிவைதிரண்டோர்பேர்பண்ணையெய்தியவோரைபொய்தல்
அவைபெண்கள்கூட்டமாயங்கெடவரலதுவுமாமே. (கக)

புரவலன்பெருமானேந்தல்பூபாலன்வேந்தன்மன்னன்
நரபதிபொருநன்சக்கிரிநகைமுடிநிருபனேடு
குரிசில்பார்த்திவனேகோவேகொற்றவனிறைவனண்ணல்
அரசன்பேரிவையீரெட்டாந்தலைவன்காவலனுமாமே. (கஉ)

தருதெய்வவிரதன்கங்கைதனயன்சந்தனுமுன்பெற்றோன்
கருதியபிரமசாரிகாங்கேயன்வீட்டுமன்பேர்
பரவுபாரதரேமற்றைப்பௌரவரென்னுநாமங்
குருகுலவேந்தர்க்காகுங்கௌரவரென்றுங்கூறும். (கங)

தரமிகுகுவலைத்தாரான்யுதிட்டிரன்பொறையன்சாற்றும்
முரசுயர்கொடியோனீதிமொழியுநல்லறத்தின்சேயே
குருகுலப்பாண்டுமைந்தன்குந்திதன்புதல்வன்மெய்ம்மை
விரதமாக்கொள்வோன்மேன்மைத்தருமன்பேரெட்டுமாமே. (கச)

அறிஞர்பெயர்—சான்றவர், மிக்கோர், நல்லோர், தகுதியோர், மேலோர், ஆய்ந்தோர், ஆன்றவர், உலகம், மேதாவியர். ௯.
ஆசாரியன்பெயர்—ஆசான், தேசிகன், ஓசன், உபாத்தியாயன், பணிக்கன். ௫. மாணாக்கன்பெயர்—கற்போன். ௧.

பண்டிதர்பெயர்—கலைஞர், மேதையர், மூத்தோர், கற்றவர், அவை, விற்பன்னர், கவிஞர், சங்கம், சாரதி, சூரி, சாடு, புலவர், அறிஞர், புதர். ௧௪.
கலைஞர்பெயர்—கவிவல்லோர். ௧.
ஒத்துரைப்போர்பெயர்—கணக்காயர். ௧.

மூத்தோன்பெயர்—குரவன், ஐயன், சுவாமி, கோமான், அடிகள், அத்தன், உரவோன், ஈசன், பதி, இறை. ௧௦.
பெருமையிற்சிறந்தோன்பெயர்—குரிசில், அண்ணல், ஏந்தல், தோன்றல், செம்மல். ௫.

எப்பொருட்குமிறையின்பெயர்—நாதன், கொழுநன், காந்தன், பதி, கோன், ஈசன், ஆதிபன், அதிபன், செம்மல், அரன், பிரான், ஆதி, மன்னன். ௧௩.
உயர்ந்தவர்பெயர்—உலகம். ௧.

திரண்டோர்பெயர்—சவை, சமவாயம், சங்கம், சமுதாயம், சமூகம், கோட்டி, அவை, குழாம், குழு, கூட்டம், திரள், கணம். ௧௨.
பெண்கள்கூட்டத்தின்பெயர்—பண்ணை, ஓரை, பொய்தல், ஆயம், கெடவரல். ௫.

அரசன்பெயர்—புரவலன், பெருமான், ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன். ௧௮.

வீட்டுமன்பெயர்—தெய்வவிரதன், கங்கைதனயன், சந்தனுமுன் பெற்றோன், பிரமசாரி, காங்கேயன். ௫.
குருகுலவேந்தர்பெயர்—பாரதர், பௌரவர், கௌரவர். ௩.

தருமன்பெயர்—குவளைத்தாரான், யுதிட்டிரன், பொறையன், முரசக்கொடியோன், அறத்தின்சேய், பாண்டுமைந்தன், குந்திபுதல்வன், மெய்ம்மைவிரதமாக்கொள்வோன். ௮.

மருவுகாந்தாரிமைந்தனந்தியாவர்த்தத்தாமன்
அரவுயர்த்தவன்வணங்காமுடியினனரசர்மன்னன்
உரைகெழுசுயோதனன்கண்ணோன்றுயில்லாதோனென
திருதராட்டிரன்றன்செல்வன்சீர்த்துரியோதனன்பேர். (௧௫)

கடுங்கதிர்மதலைவிசுங்கவசகுண்டலனேகச்சை
நெடுங்கொடியினன்கானீனனிளங்கர்கோமான்கன்னன்
மடங்கலின்கொடியோன்வெய்யமாருதிவாயுமைந்தன்
இடும்பைதன்கொழுநன்வீமன்கதாயுதனென்றுமேற்கும். (௧௬)

குற்றமில்கிருட்டிணன்பற்குனன்றனஞ்சயன்காண்டீவன்
வெற்றிசேர்சவ்வியசாசிவீபற்சுவிசயன்பார்த்தன்
சொற்றகேசவற்குத்தோழன்சுவேதவாகனன்கிரீடி
அற்றமிலருச்சுனற்கேயமைந்தபேர்பண்ணொன்றுமே. (௧௭)

வில்லவன்கொங்கன்வஞ்சிவேந்தனேபோந்தின்றாரோன்
கொல்லிவெற்பன்குடக்கோக்குட்டுவன்குடகன்கோதை
மல்லல்சேருதியன்வானவரம்பனேமலயமானே
செல்லறீர்பொருநையாற்றோன்சேரலன்சேரன்பேரே. (௧அ)

நேரியன்சென்னிபொன்னித்துறைவனேநேரிவெற்பன்
ஆரின்மாலயனேகிள்ளியபயனேகோழிவேந்தன்
சீரியவளவன்மிக்கசெம்பியன்புலியுயர்த்தோன்
சூரியன்புனனாடன்கோச்சோழன்மாலென்றுஞ்சொல்லும். (௧௯)

செழியனேகூடற்கோமான்றென்னவன்வேம்பின்றாரோன்
வழுதியேகுமரிச்சேர்ப்பன்வைகையந்துறைவன்மாறன்
விழைவுறுபொதியவெற்பன்மீனவன்கைதவன்சொற்
பழையபஞ்சவனேவெய்யகௌரியன்பாண்டியன்பேர். (௨0)

குறும்பரேயரட்டர்வேளிர்குறுநிலமன்னராகுஞ்
செறிந்திடும்புரோசரும்பேர்தேர்ச்சியிற்றுணைவரெண்ணர்
உறைந்திடுநூலோர்சூழ்வோருழையர்மந்திரரேசூதி
அறிந்திடுமுதுவர்முன்னோரமாத்தியரமைச்சர்நாமம். (௨௧)

பெருகியபொருநன்சேனாபதிபடைத்தலைவன்பேரே
வருநிமித்திகன்பேர்சாக்கைவள்ளுவனென்றுமாகுங்
கருதுகாவிதியரென்பகணக்கர்தம்வழியினுள்ளார்
பரவியபரிவாரப்பேர்பரியாளமென்னலாமே. (௨௨)

துரியோதனன்பெயர்—காந்தாரிமைந்தன், நந்தியாவர்த்தத்தாமன், அரவுயர்த்தவன், வணங்காமுடியினன், அரசர்மன்னன்,* சுயோதனன், திருதராட்டிரன்றன்செல்வன். எ.

கன்னன்பெயர்—கதிர்மதலை, கவசகுண்டலன், கச்சைக்கொடியினன், கானீனன், அங்கர்கோமான். ரு.

வீமன்பெயர்—மடங்கற்கொடியோன், மாருதி, வாயுமைந்தன், இடிம்பைகொழுநன், கதாயுதன். ரு.

அருச்சுனன்பெயர்—கிருட்டிணன், பற்குனன், தனஞ்சயன், காண்டீவன், சவ்வியசாசி, வீபற்சு, விசயன், பார்த்தன், கேசவற்குத்தோழன், சுவேதவாகனன், கிரீடி. கக.

சேரன்பெயர்—வில்லவன், கொங்கன், வஞ்சிவேந்தன், போந்தின்றாரோன், கொல்லிவெற்பன், குடக்கோ, குட்டுவன், குடகன், கோதை, உதியன், வானவரம்பன், மலயமான், பொருநையாற்றுறைவன், சேரலன். கசு.

சோழன்பெயர்—நேரியன், சென்னி, பொன்னித்துறைவன், நேரிவெற்பன், ஆரின்மாலையன், கிள்ளி, அபயன், கோழிவேந்தன், வளவன், செம்பியன், புலியுயர்த்தோன், சூரியன், புனனாடன், மால். கசு.

பாண்டியன்பெயர்—செழியன், கூடற்கோமான், தென்னவன், வேம்பின்றாரோன், வழுதி, குமரிச்சேர்ப்பன், வைகையந்துறைவன், மாறன், பொதியவெற்பன், மீனவன், கைதவன், பஞ்சவன், கௌரியன். கந.

குறுநிலமன்னர்பெயர்—குறும்பர், அரட்டர், வேளிர், புரோசர். ச.

அமைச்சர்பெயர்—தேர்ச்சித்துணைவர், எண்ணர், நூலோர், சூழ்வோர், உழையர், மந்திரர், முதுவர், முன்னோர், அமாத்தியர். கூ.

படைத்தலைவன்பெயர்—பொருநன், சேனாபதி. உ.

நிமித்திகன் * பெயர்—சாக்கை, வள்ளுவன். உ.

கணக்கர்வழியினுள்ளார்பெயர்—காவிதியர். க.

பரிவாரத்தின்பெயர்—பரியாளம். க.

---

* நிமித்திகன்—வருங்காரியஞ்சொல்வோன்.

மிக்கசெம்பியனேகாரிவிராடனேநிருதிதானும்
தக்கதுந்துமாரிதானுஞ்சகரனுநளனுந்தாமுன்
அக்குரன்சந்திமானோடந்திமான்சிசுபாலன்னே
வக்கிரன்கன்னன்சந்தனிடைவள்ளல்வகுத்தவாறே. (௨௩)

பாரியாயெழிலிநள்ளிபசுந்தொடைமலயன்பேகன்
ஓரியேகடையிலுற்றோருறுபொருடண்டாதீந்தும்
வாரியிலிரந்தோர்க்கிட்டும்வளர்புகழ்துதிக்கவீந்தும்
பேரியல்வையமெண்ணப்பெற்றனர்முப்பாலாகும். (௨௪)

இளங்கோக்கண்மன்னர்பின்னரிப்பரெட்டியரேநாய்கர்
வளம்பெறுவணிகர்நல்லான்காவலருழவர்மற்றும்
விளங்கியபரதர்மேயவினைஞர்செட்டியர்பன்னொன்றும்
உளங்கெழுவைசியர்பேராமுறுசிரேட்டிகளுமாகும். (௨௫)

மண்மகள்புதல்வர்வாய்ந்தவளமையர்களமரென்றும்
உண்மைசால்சதுர்த்தர்மாறாவுழவர்மேழியர்வேளாளர்
திண்மைகொளேரின்வாழ்நர்காராளர்வினைஞர்செம்மை
நண்ணுபின்னவர்பன்னொன்றுநவின்றசூத்திரர்தம்பேரே. (௨௬)

வெம்பியபிடகராயுள்வேதியர்மருத்துவர்க்காம்
அம்புவிமற்றுமாமாத்திரரென்றுமவர்க்கேகூறும்
கும்பகாரன்குலாலன்குறித்தவேட்கோவன்சக்கிரி
நம்புமட்பகைவனைந்துநாட்டியகுயவனாமம். (௨௭)

சிற்பரோவியரேமோகர்சித்திரகாரர்நாமஞ்
சிற்பியர்துவட்டாவோவர்தபதியர்சிறப்பின்மிக்க
அற்புதர்யவனர்கொல்லரக்கசாலையர்புனைந்தோர்
கற்பில்கம்மியரேகண்ணுள்வினைஞர்கண்ணாளர்நாமம். (௨௮)

கருமரேமனுவர்கொல்லர்காட்டியநாமமாகும்
மரவினையாளன்மற்றைமயனொடுதபதிதச்சன்
புரியும்பொன்செய்யுங்கொல்லர்பொன்வினைமாக்கடட்டார்
உரைகெழுசொன்னகாரரக்கசாலையருமோதும். (௨௯)

தருமுறைதெரிந்தசிற்பாசாரியர்மண்ணீட்டாளர்
பொருளினையுருக்குந்தட்டார்பொன்செய்யும்புலவரென்ப
பெருகியபணித்தட்டார்தம்பேர்கலந்தருநர்தாமே
வருமுறைமுத்தங்கோப்பார்மணிகுயிற்றுநரென்றாமே. (௩௦)

வரைவின்றி யாவர்க்குங்கொடுக்கு முதல்வள்ளலெழுவர்பெயர்—செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன். எ.

இரப்போர்க்குக்கொடுக்கு மிடைவள்ளலெழுவர்பெயர்—அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன். எ.

புகழ்வோர்க்குக்கொடுக்குங்கடைவள்ளலெழுவர்பெயர்—பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி. எ.

வைசியர்பெயர்—இளங்கோக்கள், மன்னர்பின்னர், இப்பர், எட்டியர், நாய்கர், வணிகர், ஆன்காவலர், உழவர், பரதர், வினைஞர், செட்டியர், சிரேட்டிகள். ௧௨.

சூத்திரர்பெயர்—மண்மகள்புதல்வர், வளமையர், களமர், சதுர்த்தர், உழவர், மேழியர், வேளாளர், ஏரின்வாழ்நர், காராளர், வினைஞர், பின்னவர். ௧௧.

மருத்துவர் * பெயர்—பிடகர், ஆயுள்வேதியர், மாமாத்திரர். ௩.

குயவன்பெயர்—கும்பகாரன், குலாலன், வேட்கோவன், சக்கிரி, மட்பகைவன். ௫.

சித்திரகாரர்பெயர்—சிற்பர், ஓவியர், மோகர். ௩.

கண்ணாளர்பெயர்—சிற்பியர், துவட்டா, ஓவர், தபதியர், அற்புதர், யவனர், கொல்லர், அக்கசாலையர், புனைந்தோர், கம்மியர், கண்ணுள்வினைஞர். ௧௧.

கொல்லர்பெயர்—கருமர், மனுவர். ௨.

தச்சன்பெயர்—மரவினையாளன், மயன், தபதி. ௩.

தட்டார்பெயர்—பொன்செய்யுங்கொல்லர், பொன்வினைமாக்கள், சொன்னகாரர், அக்கசாலையர். ௪.

சிற்பாசாரியர்பெயர்—மண்ணீட்டாளர். ௧.

பொருளினையுருக்குந்தட்டார்பெயர்—பொன்செய்யும்புலவர். ௧.

பணித்தட்டார்பெயர்—கலந்தருநர். ௧.

முத்தங்கோப்பார்பெயர்—மணிகுயிற்றுநர். ௧.

---

* மருத்துவர்—வைத்தியர்.

கலத்தைச்செய்கஞ்சகாரர்கன்னுவர்கன்னாராகும்
மிலைச்சரேயநாரியர்க்காமிலேச்சரும்விதித்தபேரே
தலைப்படும்யவனரென்பசோனகருவச்சரும்பேர்
மலைப்பிலாவுமணருப்புவாணிகர்காணுங்காலே. (௩௧)

இருந்தகாழியரேதூசரீரங்கோலியரேவண்ணார்
வரும்பெருமஞ்சிகன்சீமங்கலிமாசுதீர்த்துத்
திருந்துமேனாதிமூன்றுஞ்சிறந்தநாவிதன்பேராகும்
பொருந்தரேவேதகாரர்போற்றுங்காருகர்நெய்வார்பேர். (௩௨)

பொல்லரேதுன்னரென்பபுகன்றதோற்றுன்னர்செம்மார்
உல்லியர்கூவநூலோரொளிவலைபோழ்நர்தாமே
மெல்லியசங்கறுப்போர்குனரூன்விற்போரென்ப
சொல்லியபறம்பர்தாமேதோல்வினைமாக்கணாமம். (௩௩)

கொலைஞரேகளைஞர்வங்கர்குணுங்கர்மாதங்கரோடு
புலைஞரேயிழிஞரேழ்பேர்பொருந்துசண்டாளர்நாமம்
உலவுசென்னியரேபண்டரோவர்வந்தித்துநிற்போர்
பலர்புகழ்மதங்கர்சூதர்பண்ணவர்பாணராமே. (௩௪)

சக்கிரிகந்திசெக்கான்றன்பெயராகுமென்ப
தொக்ககள்விற்போர்நாமஞ்சௌண்டிகர்துவசரோடு
தக்கதோர்பிழியர்மற்றும்படுவருஞ்சாற்றுமன்றே
மிக்கமீகாமனாமமீகான்மாலுமிநீகானாம். (௩௫)

மாவலர்வதுவரோடுவாதுவர்பண்ணுவார்பேர்
சோர்விலாப்பாகரோடாதோரணர்யானைப்பாகர்
காவலர்மெய்காப்பாளர்கஞ்சுகியென்றுங்காட்டும்
மேவுகாரோடரென்பவுறைகாரர்விதித்தபேரே. (௩௬)

தூயதேர்ப்பாகன்சூதன்வலவன்சாரதியுஞ்சொல்லும்
வேயர்சாரணரேயொற்றர்விதித்தபேர்மடையர்நாமம்
ஏயவாலுவரேமிக்ககூவியரென்றுநூலை
ஆயும்பானசிகரென்றும்பாசகரென்றுமாமே. (௩௭)

நாடகர்கண்ணுளாளர்நடர்வயிரியர்நிருத்தர்
கோடியர்பொருநர்கூத்தரவினயரென்றுங்கூறும்
நீடியவாயிலோரேநெடுந்தமிழ்க்கூத்தரென்பர்
ஆடும்வேழம்பரென்பகழாயருக்கடைத்தநாமம். (௩௮)

கன்னார்பெயர்—கஞ்சகாரர், கன்னுவர். ௨.
அநாரியர்பெயர்—மிலேச்சர், மிலேச்சர். ௨.
சோனகர்பெயர்—யவனர், உவச்சர். ௨.
உப்புவாணிகர்பெயர்—உமணர். ௧.

வண்ணார்பெயர்—காழியர், தூசர், ஈரங்கோலியர். ௩.
நாவிதன்பெயர்—பெருமஞ்சிகன், சிமங்கலி, ஏனாதி. ௩.
வேதகாரர்பெயர் * —பொருந்தர். ௧.
நெய்வார்பெயர்—காருகர். ௧.

துன்னர் † பெயர்-பொல்லர். ௧. தோற்றுன்னர்பெயர்-செம்மார். ௧.
கூவநூலோர்()பெயர்—உல்லியர். ௧. சங்கறுப்போர்பெயர்—வளை
போழ்நர். ௧. ஊன்விற்போர்பெயர்—சூனர். ௧.
தோல்வினைமாக்கள்பெயர்—பறம்பர். ௧.

சண்டாளர்பெயர்—கொலைஞர், கழைஞர், வங்கர், குனுங்கர், மாத
ங்கர், புலைஞர், இழிஞர். ௭.
பாணர்பெயர்—சென்னியர், பண்டர், ஓவர், வந்தித்துநிற்போர்,
மதங்கர், சூதர், பண்ணவர். ௭.

செக்கான்பெயர்—சக்கிரி, நந்தி. ௨.
கள்விற்போர்பெயர்—சௌண்டிகர், துவசர், பிழியர், படுவர். ௪.
மீகாமன்பெயர்—மீகான், மாலுமி, நீகான். ௩.

பண்ணுவார் ¶ பெயர்—மாவலர், வதுவர், வாதுவர். ௩.
யானைப்பாகர்பெயர்—பாகர், ஆதோரணர். ௨.
மெய்காப்பாளர்பெயர்—காவலர், கஞ்சுகி. ௨.
உறைகாரர்பெயர்—காரோடர். ௧.

தேர்ப்பாகன்பெயர்—சூதன், வலவன், சாரதி. ௩.
ஒற்றர்பெயர்—வேயர், சாரணர். ௨.
மடையர்பெயர்—வாலுவர்[வல்லவர்,]கூவியர்,பானசிகர்,பாசகர்.௪

கூத்தர்பெயர்—நாடகர், கண்ணுளாளர், நடர், வயிரியர், நிருத்தர்,
கோடியர், பொருநர், அவினயர். ௮.
தமிழ்க்கூத்தர்பெயர்—வாயிலோர். ௧.
கழாயர்பெயர் o —வேழம்பர். ௧.

---

* வேதகாரர்—கூடைமுதலியவைபின்னுவோர்.
† துன்னர்—தையற்காரர். () கூவநூல்-கீழ்நீர்க்குறியநிசாத்திரம்.
¶ பண்ணுவார்—குதிரைப்பாகர். o கழாயர்—கழைக்கூத்தர்.

குயிலுவர்நரம்பினையகருவியைக்கொளுத்துமாக்கள்
இயலுந்தோற்கருவியாளரியவராம்வெறியாட்டாளன்
சயமுறுதேவராளன்சாலினிதேவராட்டி
அயலவர்நொதுமலாளர்வம்பலரென்றுமாமே. (௩௯)

புதியவர்விருந்தோரென்பவதிதிவம்பலரும்போற்றும்
பதிகனேவழிச்செல்வோனும்வியவனேயேவுவான்பேர்
முதுவர்மூதுணர்ந்தோர்நாமங்கிழவரேயுரியோர்பேராம்
அதிகமாங்குறிக்கொள்வோர்பாராயணரென்பதாமே. (௪௦)

வித்தகர்வினையுரைப்போர்விதியுளிவழியுரைப்போர்
உத்தமமானபண்புற்றுரைப்பவர்தூதராகும்
தொத்தொடுகிணைகர்தாசர்தொழும்பொடுதொறுவிருத்தி
அத்தகுதொண்டுசேடராளிவையடிமையாமே. (௪௧)

சிலதனேநண்பன்பாங்கன்சேடனேதுணைவன்றோழன்
எலுவனுமாமிவன்முன்னிலைப்பெயரேடாவென்ப
சிலதியேசகியேபாங்கிசேடியேயிகுளைதோழி
நலமுறுமுன்னிலைப்பேர்நாடின்மற்றேடியெல்லா. (௪௨)

அந்தகன்சிதடனென்பகுருடனுங்கோணல்கூன்பேர்
சிந்துவாமனமேகுஞ்சங்குறள்வதிர்செவிடென்றாகும்
முந்தியமுடமேபங்குகுணியூமைமூகைமூங்கை
தந்தபெண்டகனேபேடிநபுஞ்சகனலியேசண்டன். (௪௩)

காதகன்சாருகன்றான்கடுங்கொலையாளிநாமம்
வேதனைசெய்வோன்பேரேயருந்துதன்விளம்பலாகும்
பீதனேசகிதனோடுபீருவுமச்சமுள்ளோன்
ஓதியசவனன்வேகியுற்றவஞ்சகனிசாதன். (௪௪)

படிறர்பல்லவர்பரத்தர்பகரிடங்கழியரோடு
விடருங்காமுகருந்தூர்த்தர்மிக்கநாகரிகரென்ப
கடிநகர்ப்பதிவாழ்கின்றசதுரர்காமுகரென்றும்பேர்
அடைவுளகிராமமுற்றோன்கிராமியனாகுமன்றே. (௪௫)

நரப்புக்கருவியாளர்பெயர்—குயிலுவர். க.
தோற்கருவியாளர்பெயர்—இயவர். க.
வெறியாட்டாளன்பெயர் —தேவராளன். க.
தேவராட்டியின்பெயர்—சாலினி. க.
அயலவர்பெயர்—நொதுமலாளர், வம்பலர். உ.

புதியவர்பெயர்—விருந்தோர், அதிதி, வம்பலர். ௩.
வழிச்செல்வோன்பெயர்—பதிகன். க.
ஏவுவான்பெயர்—வியவன். க. முதுணர்ந்தோர்பெயர்—முதுவர். க.
உரியோர்பெயர்-கிழவர்.க. குறிக்கொள்வோர்பெயர்-பாராயணர். க.

தூதர்பெயர்—வித்தகர், வினையுரைப்போர், வழியுரைப்போர், பண்புரைப்பவர். ச.
அடிமையின்பெயர்—தொத்து, இணைகர், தாசர், தொழும்பு, தொறு, விருத்தி, தொண்டு, சேடர், ஆள். கூ.

தோழன்பெயர்—சிலதன், நண்பன், பாங்கன், சேடன், துணைவன், எலுவன். சா.
தோழன்முன்னிலைப்பெயர்—ஏடா. க.
தோழிபெயர்—சிலதி, சகி, பாங்கி, சேடி, இருளை. ரு.
தோழிமுன்னிலைப்பெயர்—ஏடி, எல்லா. உ.

குருடன்பெயர்-அந்தகன்,சிதடன், உ. கூனின்பெயர்-கோணல். க.
குறளின்பெயர்—சிந்து, வாமனம், குஞ்சம். ரு.
செவிட்டின்பெயர்—வதிர். க. முடத்தின்பெயர்—பங்கு, குணி. உ.
ஊமையின்பெயர்—மூகை, மூங்கை. உ.
அலியின்பெயர்—பெண்டகன், பேடி, நபுஞ்சகன், சண்டன். ச.

கொலையாளியின்பெயர்—காதகன், சாருகன். உ.
வேதனைசெய்வோன்பெயர்—அருந்துதன். க.
அச்சமுள்ளோன்பெயர்—பீதன், சகிதன், பீரு. ரு.
வேகியின்பெயர்—சவனன். க. வஞ்சகன்பெயர்—நிசாதன். க.

தூர்த்தர்பெயர்—படிறர், பல்லவர், பரத்தர், இடங்கழியர், விடர், காமுகர். சா.
நாகரிகர்பெயர்—சதுரர், காமுகர். உ.
கிராமமுற்றோன்பெயர்—கிராமியன். க.

வலணைவல்லுநனேவல்லோன்மாட்டார்பேர்வல்லாரென்ப
குலமுளோன்குலீனனாகுங்கரியவன்குறித்தகள்வன்
உலவுநோயுற்றொழிந்தோனுல்லாகன்பதாதிகாலாள்
அலைவில்சந்நத்தனென்பதாயத்தமானோன்பேரே. (௪௬)

மந்தனேகூர்மையில்லோனக்கனிர்வாணிநாமம்
வெந்திறலியவுளென்பமிகுபுகழாளன்பேரே
உந்தியவருளோனேகாருண்ணியனென்பரெட்டர்
வந்திகள்கவிகள்கற்றோர்வண்டரேகடிகைமாக்கள். (௪௭)

புரவலனீகையாளன்போற்றும்வேளாளன்றியாகி
உரைகெழுவேள்வியாளனுபகாரிகொடையுளோனும்
வரைவறக்கொடுத்தளிப்போன்வள்ளியோனென்றுகூறும்
இரவலன்பரிசிலாளன்யாசகன்றீனனேற்போன். (௪௮)

கரவடர்சோரர்தேனர்பட்டிகர்புரையோர்கள்வர்
திருடராந்தரித்திரன்பேரகிஞ்சனன்றீனன்பேதை
மருவுநல்கூர்ந்தோனில்லோன்வறியனாதுலனேயேழை
விரவியவுறுகணாளனிலம்பாட்டோன்மிடியனாமே. (௪௯)

வயவனேதிறலோன்மற்றைவண்டனேமிண்டன்மள்ளன்
வியவனேவிறலோன்மீளிவீரனேதிண்ணியன்பேர்
நயமில்கூளியரேறாளர்நாட்டும்வாளுழவர்மள்ளர்
சயமிகுமறவர்தானைத்தலைவராம்படருமாமே. (௫௦)

அரிகளேசெறுநர்சேராரமராருள்ளாரேநள்ளார்
மருவலர்தெவ்வர்மாணார்மாற்றலர்மன்னாரொன்னார்
தரியலரொட்டார்வட்கார்சார்பிலார்பற்றார்செற்றார்
பரரொடுகேளாரொல்லார்பகைவர்பேரெழுமூன்றாமே. (௫௧)

ஒல்லுநர்தொடர்ந்தார்சேர்ந்தாரொட்டுநர்பெட்டார்வேட்டார்
புல்லுநர்பசைந்தார்மித்திரர்புரிந்தாரார்வலர்விழைந்தார்
நல்லவர்காதலித்தார்நள்ளுநர்நயந்தார்கூட்டம்
மெல்லவொன்றுநர்மூவாறுமேவினர்நாமமாமே. (௫௨)

உற்றவரிகுளைநட்டோருறவொக்கல்கிளையேசார்ந்தோர்
பற்றினர்சிறந்தோர்நட்புப்பந்தமேபரிசனங்கேள்
குற்றமினண்புகூளிகுடும்பமேகடும்புநள்ளி
சுற்றமூவாறுபேருஞ்சூழ்ந்தபாசனமுஞ்சொல்லும். (௫௩)

வல்லோன்பெயர்—வலவை, வல்லுநன். உ.
மாட்டார்பெயர்—வல்லார். க. குலமுளோன்பெயர்—குலீனன். க.
கரியவன்பெயர்—கள்வன். க.
நோயுற்றொழிந்தோன்பெயர்—உல்லாகன். க.
காலாளின்பெயர்—பதாதி. க. ஆயத்தமானோன்பெயர்-சந்நத்தன். க.

கூர்மையில்லோன்பெயர்—மந்தன். க.
நிர்வாணியின்பெயர்-நக்கன். க. மிகுபுகழாளன்பெயர்-இயவுள். க.
அருளோன்பெயர்-காருண்ணியன். க. கடிகைமாக்கள் * பெயர்—
எட்டர், வந்திகள், கவிகள், கற்றோர், வண்டர். ரு.

கொடையுளோன்பெயர்—புரவலன், ஈகையாளன், வேளாளன், தியாகி, வேள்வியாளன், உபகாரி. சா.
வரைவறக்கொடுத்தளிப்போன்பெயர்—வள்ளியோன். க.
ஏற்போன்பெயர்—இரவலன், பரிசிலாளன், யாசகன், தீனன். ச.

திருடர்பெயர்—கரவடர், சோரர், தேனர், பட்டிகர், புரையோர், கள்வர். சா.
தரித்திரன்பெயர்—அகிஞ்சனன், தீனன், பேதை, நல்கூர்ந்தோன், இல்லோன், வறியன், ஆதுலன், ஏழை, உறுகணாளன், இலம்பாட்டோன், மிடியன். கO.

திண்ணியன்பெயர்—வயவன், திறலோன், வண்டன், மிண்டன், மள்ளன், வியவன், விறலோன், மீளி, வீரன். கூ.
தானைத்தலைவர்பெயர்—கூளியர், ஏனாதியர், வாளுழவர், மள்ளர், மறவர், படர். சா.

பகைவர்பெயர்—அரிகள், செறுநர், சேரார், அமரார், உள்ளார், நள்ளார், மருவலர், தெவ்வர், மாறோர், மாற்றலர், மன்னார், ஒன்னார், தரியலர், ஒட்டார், வட்கார், சார்பிலார், பற்றார், செற்றார், பரர், கேளார், ஒல்லார். உக.

மேவினர்பெயர்—ஒல்லுநர், தொடர்ந்தார், சேர்ந்தார், ஒட்டுநர், பெட்டார், வேட்டார், புல்லுநர், பசைந்தார், மித்திரர், புரிந்தார், ஆர்வலர், விழைந்தனர், நல்லவர், காதலித்தார், நள்ளுநர், நயந்தார், கூட்டம், ஒன்றுநர். கஅ.

சுற்றத்தின்பெயர்—உற்றவர், இருளை, நட்டோர், உறவு, ஒக்கல், கிளை, சார்ந்தோர், பற்றினர், சிறந்தோர், நட்பு, பந்தம், பரிசனம், கேள், நண்பு, கூளி, குடும்பம், கடும்பு, கள்ளி, பாசனம். கசு.

* கடிகைமாக்கள்—மங்கலப்பாடகர்.

பொறியிலார்கயவர்கீசர்புள்ளுவர்புல்லர்தீயோர்
சிறியசிந்தையர்கனிட்டர்தீக்குணர்தீம்பர்தேரார்
முறையிலார்முசுண்டர்மூர்க்கர்முசுடர்பல்லவரேகையர்
மறைவிலாக்கலர்மூவாறுமன்னுபூரியருங்கீழோர். (௫௪

மூழுமகன்சிதடன்பேதைமூடனேமண்ணையஞ்ஞை
இழுதையேமடனேயாதனேழையேயறிவிலான்பேர்
தொழுவர்கம்மியரேமற்றைதொழில்செய்வோர்நாமமாகும்
வழுவிலாவாயிலாளர்வாயில்காப்போர்தம்பேரே. (௫௫)

அரிவையங்கனைமடந்தையாடவளாட்டிமாயோள்
சுரிகுழன்மகடூஉக்காந்தைசுந்தரிவனிதைமாது
தெரிவைமாணினியேநல்லாள்சிறுமியேதையனாரி
பிரியைகாரிகையணங்குபிணாப்பெண்டுபேதைபெண்பே . (௫௬)

ஆடவன்மைந்தன்காளையாடூஉவேமகன்புமானே
நீடியகுமரனேழுநிருமித்தபுருடனுமம்
நாடியநம்பியோடுநங்கையென்றிரண்டாண்பெண்ணைத
தேடியகவிகளெல்லாஞ்சிறப்பிக்குநாமமாமே. (௫௭)

பேதையேபெதும்பைமங்கைபெருகியமடந்தையோடு
தீதிலாவரிவைமற்றைத்தெரிவைபேரிளம்பெண்ணெனப
ஏதமில்பருவமாண்டேழெய்துபன்னொன்றுபன்மூன்
றேழுதுபத்தொன்பானையந்துடன்முப்பத்தொன்றெண்ணைந்தே. ()

முன்னியகைம்மைபெற்றோன்மொழிந்தகோளகனேயாகும்
பின்னைவேற்றோற்குப்பெற்றபிள்ளைகுண்டகனேயென்ப
பன்னிவாழ்க்கைப்படாமுன்படர்ந்தொருகளவினாலே
கன்னியேபெற்றபிள்ளைகானீனனென்றேயோதும். (௫௯)

உயர்ந்தநாற்குலத்திலாண்பெண்ணுயர்பிழிவிரண்டுங்கூடி
இயங்கியபிள்ளைப்பேரேயநுலோமனென்றுகூறும்
நயந்தவப்பெண்ணுமாணுநண்ணியவுயர்வுதாழ்வில்
வியந்திடும்பிள்ளைப்பேரேவிறற்பிரதிலோமனாமே. (௬௦)

பெருத்தவவ்வநுலோமன்னேபிரதிலோமனென்றபேரில்
உரைத்தவாண்பெண்ணில்வந்தேயுற்றவனந்தராளன்
நிரைத்தவர்மாறிக்கூடிப்பிறந்தவனீண்டபேரே
விரித்ததுவினவிக்கேட்கில்விராத்தியனென்னுநூலே. (௬௧)

கீழோர்பெயர்—பொறியிலார், கயவர், நீசர், புள்ளுவர், புல்லர், தீயோர், கிறியசிந்தையர், கனிட்டர், தீக்குணர், தீம்பர், தேரார், முறையிலார், முசுண்டர், மூர்க்கர், முசுடர், பல்லவர், கையர், கலர், பூரியர். கஎ.

அறிவிலான்பெயர்—மூழுமகன், சிதடன், பேதை, மூடன், மண்ணை, அஞ்ஞன், இழுதை, மடன், ஆதன், ஏழை. கO.
தொழில்செய்வோர்பெயர்—தொழுவர், கம்மியர். உ.
வாயில்காப்போர்பெயர்—வாயிலாளர். க.

பெண்பெயர்—அரிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், ஆட்டி, மாயோள், சுரிகுழல், மகடூ, காந்தை, சுந்தரி, வனிதை, மாது, தெரிவை, மானினி, நல்லாள், சிறுமி, தையல், நாரி, பிரியை, காரிகை, அணங்கு, பிணா, பெண்டு, பேதை. உச.

புருடன்பெயர்—ஆடவன், மைந்தன், காளை, ஆடூ, மகன், புமான், குமரன். எ.
ஆணைச்சிறப்பிக்கும்பெயர்—நம்பி. க.
பெண்ணைச்சிறப்பிக்கும்பெயர்—நங்கை. க.

பெண்பாற்குரியபருவமாவன—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். முறையே இவற்றினுண்டாவன, எ, கக, கங, கசு, உரு, ௩க, சO.

கைம்மைபெற்றோன்பெயர்—கோளகன். க.
வேற்றோற்குப்பெற்றபிள்ளையின்பெயர்—குண்டகன். க.
கன்னிபெற்றபிள்ளையின்பெயர்—கானீனன். க.

நாற்குலத்துள் உயர்குலத்தானு மிழிகுலப்பெண்ணுங்கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர்—அநுலோமன். க.
உயர்குலப்பெண்ணு மிழிகுலத்தானுங்கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர்—பிரதிலோமன். க.

அநுலோமத்தானும் பிரதிலோமப்பெண்ணுங்கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர்—அந்தராளன். க.
அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தானுங்கூடிப் பெற்றபிள்ளையின்பெயர்—விராத்தியன். க.

முந்தியசூரத்தியத்தைமுதல்விகோமாட்டியாசாள்
தந்திடுமிறைவியையைசாமியேதலைவிநாமம்
நந்தியபிண்டிவாமனன்னெறிவழாதுநோற்பாள்
கந்தியேயௌவையம்மைகன்னியேகௌந்தியென்ப. (௬௨)

கைம்மையேகைணிபூண்டகலன்கழிமடந்தையேங்கி
விம்மியவிதவைநான்கேயமங்கலைவிளங்குநாமம்
மைம்மையேவந்தியென்பமலடிக்குவகுத்தபேராம்
செம்மையாங்கோலஞ்செய்வாடிகழ்வண்ணமகளேயென்ப. (௬௩)

பரத்தையேகணிகைசூளைபயணிலாள்வரைவின்மாது
பொருட்பெண்டுபெறுவகொள்வாள்விலைமகள்போற்றும்வேசை
விருத்தையேமூத்தாளென்பமின்னிடைக்குமரிகன்னி
நிருத்தஞ்செய்மாதுகூத்திநாடகக்கணிகைநீள்பேர். (௬௪)

குட்டினிதொழுத்தைகூளிகுறளியேபடுவிகுண்டம்
துட்டையேயசதியாகுஞ்சூழ்ந்திடும்புவதியேயீ
ரெட்டாண்டிற்பெண்மதங்கியெய்தியவிறலியென்ப
திட்டமாம்பாடுவிச்சிதம்பதியிரட்டையாண்பெண். (௬௫)

குறவர்கானவரேமள்ளர்குன்றவர்புனவரோடும்
இறவுளர்குறிஞ்சிதன்னின்புறுமாக்கள்பேரே
குறியறிகுறத்திமற்றைக்கொடிச்சிபெண்ணிறைவன்றானே
திறன்மிகுமலையன்வெற்பன்சிலம்பன்கானகநாடன்பேர். (௬௬)

கோளுறுமறவரோடுமெயினரேகுறித்தபாலை
யாளர்புள்ளுவரிறுக்கரனைத்துமாமவரோடாடும்
வாள்விழியெயிற்றிவன்கட்பிணாவொடுமறத்திபெண்பேர்
மீளியேகாளையென்னவிடலையுந்தலைவனாமம். (௬௭)

குறவர்மாகுலவர்வெய்யகுன்றவர்கிராதர்மற்றை
மறவர்கானவரேதீயவனசரர்சவரர்சொல்லும்
முறையழிகொலைஞர்பாவமூர்த்திகண்முருடர்சற்றும்
பொறையிலாரெயினர்வேடர்புளிஞரீரேழ்பொதுப்பேர். (௬௮)

முல்லையர்பொதுவரண்டர்முந்துகோவிந்தரேயான்
வல்லவர்குடவர்பாலர்மதித்தகோவலர்கோபாலர்
சொல்லியவமுதராயர்தொறுவரேயிடையரென்ப
முல்லையின்மாக்கள்பேர்தாமுநான்குமொன்றுமாமே. (௬௯)

தலைவியின்பெயர்—குரத்தி, அத்தை, முதல்வி, கோமாட்டி, ஆசாள், இறைவி, ஐயை, சாமி. அ.
நோற்பாள்பெயர்—கந்தி, ஔவை, அம்மை, கன்னி, கௌந்தி. ரு.

அமங்கலையின்பெயர்—கைம்மை, கைணி, கலன்கழிமடந்தை, விதவை. ச.
மலடியின்பெயர்—மைம்மை, வந்தி. உ.
கோலஞ்செய்வாள்பெயர்—வண்ணமகள். க.

வேசையின்பெயர்—பரத்தை, கணிகை, சூளை, பயனிலாள், வரைவின்மாது, பொருட்பெண்டு, பெறுவகொள்வாள், விலைமகள். அ.
மூத்தாள்பெயர்—விருத்தை. க. குமரியின்பெயர்—கன்னி. க.
நாடகக்கணிகையர்பெயர்—நிருத்தமாது, கூத்தி. உ.

அசதியின்பெயர்—குட்டினி, தொழுத்தை, கூளி, குறளி, படுவி, குண்டம், துட்டை. எ.
பதினாறாண்டிற்பெண்பெயர்—யுவதி. க.
பாடுவிச்சிபெயர்—மதங்கி, விறலி. உ.
தம்பதியின்பெயர்—இரட்டை, ஆண்பெண். உ.

குறிஞ்சிநிலமாக்கள்பெயர்—குறவர், கானவர், மள்ளர், குன்றவர், புனவர், பூறவுளர். சு.
குறிஞ்சிநிலப்பெண்பெயர்—குறத்தி, கொடிச்சி. உ.
குறிஞ்சிநிலத்திறைவன்பெயர்—மலையன், வெற்பன், சிலம்பன், கானகநாடன். ச.

பாலைநிலமாக்கள்பெயர்—மறவர், எயினர், புள்ளுவர், இறுக்கர். ச.
பாலைநிலப்பெண்பெயர்—எயிற்றி, வன்கட்பிணா, மறத்தி. ௩.
பாலைநிலத்தலைவன்பெயர்—மீளி, காளை, விடலை. ௩.

புளிஞர்பொதுப்பெயர்—குறவர், மாகுலவர், குன்றவர், கிராதர், மறவர், கானவர், வனசரர், சவரர், கொலைஞர், பாவமூர்த்திகள், முருடர், பொறையிலார், எயினர், வேடர். கச.

முல்லைநிலமாக்கள்பெயர்—முல்லையர், பொதுவர், அண்டர், கோவிந்தர், ஆன்வல்லவர், குடவர், பாலர், கோவலர், கோபாலர், அமுதர், ஆயர், தொறுவர், இடையர். க௩.

தொறுவியேபொதுவியாய்ச்சிசூழ்ந்திடுங்குடத்திமற்றை
நிறைபுணரிடைச்சிமுல்லைநிலத்திற்பெண்ணுமமைந்தாம்
குறைவறுகானநாடன்குறும்பொறைநாடனோடு
முறைசெயுமண்ணலோன்றன்முல்லையிற்றலைவனுமம். (எ0)

களமரேதொழுவர்மள்ளர்கம்பளருழவரோடு
விளைஞரேகடைஞரேழ்பேர்விளைவுறுமருதமாக்கள்
அளவறுகடைச்சிமற்றையாற்றுக்காலாட்டிபெண்பேர்
உளமகிழ்மகிழ்நனூரன்கிழவனுந்தலைவனுமே. (எக)

பரதவர்நுளையரோடுபஃறியர்திமிலர்சாலர்
கருதியகடலர்கோலக்கழியரேநெய்தன்மாக்கள்
விரவியபரத்திமேவுநுளைச்சியேயளத்திநீண்டு
பெருகியகடற்பிணாவேநெய்தலிற்பெண்ணினுமம். (எஉ)

கொண்கனேதுறைவனோடுகுறித்தமெல்லம்புலம்பன்
தண்கடற்சேர்ப்பனெய்தற்றலைவனைச்சாற்றுநாமம்
பண்படுமளவர்தாமேபகர்ந்திடுமந்நிலத்தில்
உண்படுமுப்பமைப்போருமணரும்விதித்தபேரே. (எங)

அணியினிற்பண்பினுற்றவுவமையின்மகடூஉவாடூஉத்
தணிவின்முன்னிலைப்பேர்வேறுசாற்றியதோற்றமாக
உணருமைந்திணைப்பாற்பட்டகருப்பொருளுரைத்தாமீப்பாற்
கணிதமின்முறைப்பேர்காட்டிக்காயத்தின்பேருஞ்சொல்வாம். ()

தாதைதன்றுதையேமூதாதையேபாட்டனுமம்
பேதமொன்றில்லாமற்றும்பிதாமகனென்றுமாகும்
தாதையேயப்பனையன்றந்தையேயம்மானத்தன்
ஏதமில்பிதாவென்றேழுமீன்றவனுமமாமே. (எரு)

அவ்வையம்மனைபயந்தாளம்மையேயாயேயன்னை
எவ்வமிலாயிமோய்தாயீன்றவளுமபொன்பான்
செவ்விதின்வளர்த்ததாதிசெவிலிகோடாய்கைத்தாயாம்
தவ்வைமுன்பிறந்தாள்சேட்டைதங்கையேபின்னைதானே. (எசு)

ஞாதியர்தாயத்தாரேநாட்டுந்தங்குடியிற்சுற்றம்
மாதுலனம்மான்மாமன்சகலனோர்குடியிற்கொண்டோன்
மூதுணர்சேட்டன்றம்முன்முன்னவனண்ணன்மூத்தோன்
பேதமிலிளவல்பின்னையநுசனேகனிட்டன்பின்னோன். (எஎ)

முல்லைநிலப்பெண்பெயர்—தொறுவி, பொதுவி, ஆய்ச்சி, குடத்தி, இடைச்சி. ரு.
முல்லைநிலத்தலைவன்பெயர்—கானநாடன், குறும்பொறைநாடன், அண்ணல், தோன்றல். ச.

மருதநிலமாக்கள்பெயர்—களமர், தொழுவர், மள்ளர், கம்பளர், உழவர், விளைஞர், கடைஞர். எ.
மருதநிலப்பெண்பெயர்—கடைச்சி, ஆற்றுக்காலாட்டி. உ.
மருதநிலத்தலைவன்பெயர்—மகிழ்நன், ஊரன், கிழவன். ந.

நெய்தனிலமாக்கள்பெயர்—பரதவர், நுளையர், பஃறியர், திமிலர், சாலர், கடலர், கழியர். எ.
நெய்தனிலப்பெண்பெயர்—பரத்தி, நுளைச்சி, அளத்தி, கடற்பிணா. ச.

நெய்தனிலத்தலைவன்பெயர்—கொண்கன், துறைவன், மெல்லம்புலம்பன், கடற்சேர்ப்பன். [illegible]
உப்பமைப்போர்பெயர்—அளவர், உமணர். உ.

அணியும் பண்பும் உவமையும், அடுத்து வந்த ஆடூஉ மகடூஉப் பெயர்களும், முன்னிலைப்பெயர்களும் ஐந்திணைக்கருப்பொருட் பெயர்களுஞ்சொன்னோம், இனி முறைப்பெயர்களும் காயத்தின்பெயர்களுஞ்சொல்வாம்.

பாட்டன்பெயர்—தாதைதன்றாதை, மூதாதை, பிதாமகன். ந.
ஈன்றவன்பெயர்—தாதை, அப்பன், ஐயன், தந்தை, அம்மான், அத்தன், பிதா. எ.

ஈன்றவள்பெயர்—அவ்வை, அம்மனை, பயந்தாள், அம்மை, யாய், அன்னை, ஆயி, மோய், தாய். கூ.
வளர்த்ததாதியின்பெயர்—செவிலி, கோடாய், கைத்தாய். ந.
முன்பிறந்தாள்பெயர்—தௌவை, சேட்டை. உ.
தங்கையின்பெயர்—பின்னை. க.

ஞாதியர்பெயர்—தாயத்தார், தங்குடிச்சுற்றம். உ.
மாமன்பெயர்—மாதுலன், அம்மான். உ.
ஓர்குடியிற்கொண்டோன்பெயர்—சகலன். க.
மூத்தோன்பெயர்—சேட்டன், தம்முன், முன்னவன், அண்ணன். ச.
பின்னோன்பெயர்—இ[illegible]ல், பின்னை, அநுசன், கனிட்டன். ச.

கணவனேகொழுநன்வேட்டோன்கண்டன்வல்லவனேபத்தாத்
துணைவனேதலைவன்கொண்கன்சூழ்ந்திருந்தவனேகாந்தன்
மணமகனுரியோனன்பன்மணவாளன்பதியேகேள்வன்
அணையுங்காதலன்பேர்பன்னேழன்றிநாயகனுமாமே. (எஅ)

இல்லவளுரிமைபன்னிகுடும்பினியில்லேயில்லாள்
வல்லவைகளமேதாரமனையாட்டிமனைவிருந்தம்
சொல்லியபாரிவாழ்க்கைத்துணைகளத்திரமேகாந்தை
நல்லகாதலிவிரும்புநாயகிதேவிநாமம். (எகூ)

சந்ததிமதலைசூனுத்தனயன்காதலனேமெய்யன்
நந்தனன்சிறுவன்றோன்றல்குட்டனேநாட்டுஞ்செம்மல்
மூந்தியமருமான்பிள்ளைமுளைசுதன்புதல்வன்புத்திரன்
மைந்தன்கால்பொருள்சேயெச்சம்வழிபிறங்கடைமகன்பேர். (அ0)

சிறுவிபுத்திரியினோடுசிறந்திடுந்தனயையையை
மறுவில்பந்தனைமதிப்பாமகள்சுதைபுதல்வியேழ்பேர்
இறையாகுமெச்சந்தானிவ்விருபாற்குமேற்குமென்ப
குறுமக்கண்மகார்சிறாரைக்கூறுபவிவர்தம்பன்மை. (அக)

தானையேபதாதிவெய்யதந்திரந்தளமேதண்டம்
வானியேககனம்யூகம்வாகினியனீகம்பாடி
சேனையேகவனங்கூடிச்செறிபலம்பரிகலந்தான்
ஊனமில்படைமூவைந்தாமுறுபதாகினியுமப்பேர். (அஉ)

அணியுண்டையொட்டேயூகமாயவைபடைவகுப்பாம்
அணிநெற்றிகையேதூசியடுபடையுறுப்பின்பேராம்
அணிபின்னிற்கூழையாந்தார்கொடிப்படையாகுமென்ப
பணியக்கீழறுதலோடேயறைபோதல்படையறற்பேர். (அங)

மக்களேநரரேமாக்கண்மானவர்மாந்தர்மண்ணோர்
தக்கவாண்டையரேமைந்தர்சாற்றியமனுடரின்பம்
தொக்கமானுடரீரைந்துஞ்சொல்லியமனிதர்பேராம்
மக்கடம்பரப்பிற்குப்பேர்மன்பதைபைஞ்ஞீலென்ப. (அச)

உடலுறுப்பங்கம்யாக்கையுயிர்நிலைதேகங்காயம்
சடலமேமூர்த்தமெய்யேதாவரந்தனுவாதாரம்
கடமொடுபுதைபுணர்ப்புக்காத்திரம்பூட்சியாகம்
புடைகொள்பூதிகஞ்சரீரம்புற்கலமுடம்பி[illegible]பேரே. (அரு)

காதலன்பெயர்—கணவன், கொழுநன், வேட்டோன், கண்டன், வல்லவன், பத்தா, துணைவன், தலைவன், கொண்கன், தவன், காந்தன், மணமகன், உரியோன், அன்பன், மணவாளன், பதி, கேள்வன், நாயகன். கஅ.

தேவிபெயர்—இல்லவள், உரிமை, பன்னி, குடும்பினி, இல், இல்லாள், வல்லவை, களம், தாரம், மனையாட்டி, மனை, விருந்தம், பாரி, வாழ்க்கைத்துணை, களத்திரம், காந்தை, காதலி, நாயகி. கஅ.

மகன்பெயர்—சந்ததி, மதலை, சூனு, தனயன், காதலன், மெய்யன், நந்தனன், சிறுவன், தோன்றல், குட்டன், செம்மல், மருமான், பிள்ளை, மூனை, சுதன், புதல்வன், புத்திரன், மைந்தன், கால், பொருள், சேய், எச்சம், வழி, பிறங்கடை. உச.

புதல்விபெயர்—சிறுவி, புத்திரி, தனயை, ஐயை, பந்தனை, மகள், சுதை. எ.

மகன் மகள் என்னுமிருபாற்கும் பொதுப்பெயர்—எச்சம். க.

பிள்ளைப்பன்மையின்பெயர்—குறுமக்கள், மகார், சிறார். ௩.

படையின்பெயர்—தானை, பதாதி, தந்திரம், தளம், தண்டம், வாணி, ககனம், யூகம், வாகினி, அனீகம், பாடி, சேனை, கவனம், பலம், பரிகலம், பதாகினி. கசு.

படைவகுப்பின்பெயர்—அணி, உண்டை, ஒட்டு, யூகம். ச.

படையுறுப்பின்பெயர்—அணி, நெற்றி, கை, தூசி. ச.

பின்னணியின்பெயர்—கூழை. க.

கொடிப்படையின்பெயர்—தார். க.

படையறற்பெயர்—கீழறுதல், அறைபோதல். உ.

மனிதர்பெயர்—மக்கள், நரர், மாக்கள், மானவர், மாந்தர், மண்ணோர், ஆண்டையார், மைந்தர், மனுடர், மானுடர். க0.

மக்கட்பரப்பிற்குப்பெயர்—மன்பதை, பைஞ்ஞீல். உ.

உடம்பின்பெயர்—உடல், உறுப்பு, அங்கம், யாக்கை, உயிர்நிலை, தேகம், காயம், சடலம், மூர்த்தம், மெய், தாவரம், தனு, அசரீரம், கடம், புதை, புணர்ப்பு, காத்திரம், பூட்சி, ஆகம், [illegible], சரீரம், புற்கலம். உஉ.

வடிவமோடுருவமேனிசட்டகம்வடிவின்பேராம்
கடியுநீள்பிரேதம்வேறுகாட்டியசவம்பிணப்பேர்
அடையுமற்றப்பேர்தானேகளேவரமழனமென்றாம்
உடலினிற்குறைகவந்தமட்டையூபமுமுரைக்கும். (௮௬)

சரணமேபதமேமற்றைத்தாளொடங்கிரியோபாதம்
கருதியசலனமற்றைக்கழலுடனடியுங்காலாம்
பரடென்பகரட்டினுமம்பற்றியகணைக்கால்சங்கம்
தருமுழந்தாண்முழந்துசானுவுமதன்பேர்தானே. (௮௭)

நெடியவூருக்குறங்குநீள்வாமங்கவான்றொடைப்பேர்
கடிதடநிதம்பமென்பகவின்றிகழல்குலின்பேர்
நடுநுசுப்பொடுமருங்குநாட்டுமத்திமமேயுக்கம்
இடையின்பேர்மருங்கின்பக்கமொக்கலையென்பதாமே. (௮௮)

உதரமோடகடுகுக்கியுடன்பண்டிவயிற்றின்பேராம்
இதலையேபொறியேதுத்திதேமலாஞ்சுணங்குமாமே
இதலையேயுந்திநாபியிலஞ்சியேபோகில்கொப்பூழ்
புதியவாண்குறியேகோசம்பூப்பகம்பெண்ணின்சின்னம். (௮௯)

அகலமேமருமநெஞ்சேயாகமேயுரமேமார்பாம்
நகிலமேகொம்மைகொங்கைநறுங்குயந்தனங்குருக்கண்
பகர்பயோதரஞ்சுவர்க்கம்பறம்பிலைமுலையின்பல்பேர்
திகழ்முலைக்கண்ணினுமஞ்சிலீமுகஞ்சூசுகங்கள். (௯0)

கரமத்தம்பாணிதோளேகைத்தலநாற்பேராங்கூர்ப்
பரமுழங்கைகிலுத்தம்பணித்திடுமணிக்கட்டென்ப
உரவியவகங்கையங்கைகுடங்கையேயுள்ளங்கைப்பேர்
விரல்களங்குலியென்றாகுமிகுமுகிர்நகமதாமே. (௯௧)

விறன்மிகுபுயமுமொய்ம்புமேவியவாகுவுந்தோள்
கறையில்கந்தரங்கிரீவங்களங்கண்டங்கழுத்தினுமம்
புறம்வெரிநபரம்வெந்நேபோற்றியமுதுகுநாற்பேர்
சிறுபுறங்கயிலெருத்தஞ்சுவல்பிடர்நிகலந்தோண்மேல். (௯௨)

வதனமானனமேதுண்டம்வத்திரமுகமென்றாகும்
இதழுதடதரமேபாலிகைமுத்தமென்றும்பேர்மே
ஊதடேயோட்டமாங்கீழுதட்டின்பேரதரமென்றாம்
விதமுறுமெயிறுதந்தமேவியதசனம்பல்லே. (௯௩)

வடிவின்பெயர்—வடிவம், உருவம், மேனி, சட்டகம். ச.
பிணத்தின்பெயர்—பிரேதம், சவம், களேவரம், அழனம். ச.
உடற்குறையின்பெயர்—கவந்தம், மட்டை, யூபம். ந.

காலின்பெயர்—சரணம், பதம், தாள், அங்கிரி, பாதம், சலனம், கழல், அடி. அ.
கரட்டின்பெயர்—பரடு. க. கணைக்காலின்பெயர்—சங்கம். க.
முழந்தாளின்பெயர்—முழந்து, சானு. உ.

தொடையின்பெயர்—ஊரு, குறங்கு, வாமம், கவான். ச.
அல்குலின்பெயர்—கடிதடம், நிதம்பம். உ.
இடையின்பெயர்—நடு, நுசுப்பு, மருங்கு, மத்திமம், உக்கம். ரு.
மருங்கின்பக்கத்தின்பெயர்—ஒக்கலை. க.

வயிற்றின்பெயர்—உதரம், மோடு, அகடு, குக்கி, பண்டி. ரு.
தேமலின்பெயர்—திதலை, பொறி, துத்தி, சுணங்கு. ச.
கொப்பூழின்பெயர்—இதலை, உந்தி, நாபி, இலஞ்சி, போகில். ரு.
ஆண்குறியின்பெயர்—கோசம். க. பெண்குறியின்பெயர்-பகம். க.

மார்பின்பெயர்—அகலம், மருமம், நெஞ்சு, ஆகம், உரம். ரு.
முலையின்பெயர்—நகிலம், கொம்மை, கொங்கை, குயம், தனம், குருக்கண், பயோதரம், சுவர்க்கம், பறம்பு. கூ.
முலைக்கண்ணின்பெயர்—சிலீமுகம், சூசுகம். உ.

கைத்தலத்தின்பெயர்—கரம், அத்தம், பாணி, தோள். ச.
முழங்கையின்பெயர்-கூர்ப்பரம்.க.மணிக்கட்டின்பெயர்-கிலுத்தம்.க.
உள்ளங்கையின்பெயர்—அகங்கை, அங்கை, குடங்கை. ௩.
விரலின்பெயர்—அங்குலி. க. நகத்தின்பெயர்—உகிர். க.

தோளின்பெயர்—புயம், மொய்ம்பு, வாகு. ௩.
கழுத்தின்பெயர்—கந்தரம், கிரீவம், களம், கண்டம். ச.
முதுகின்பெயர்—புறம், வெரிந், அபரம், வெந். ச.
பிடரின்பெயர்—சிறுபுறம், கயில், எருத்தம், சுவல். ச.
தோண்மேலின்பெயர்—நிகலம். க.

முகத்தின்பெயர்—வதனம், ஆனனம், துண்டம், வத்திரம். ச.
உதட்டின்பெயர்—இதழ், அதரம், பாலிகை, முத்தம். ச.
மேலுதட்டின்பெயர்—ஓட்டம். க. கீழுதட்டின்பெயர்—அதரம்.க.
பல்லின்பெயர்—எயிறு, தந்தம், தசனம். ௩.

பன்னியமுறுவன்மூரல்பல்லுமாநகையுமாகும்
முன்னியதாடிகட்டஞ்சுவுகமோவாயின்பேராம்
மன்னுநாச்சிகுலைதாரைமற்றைத்தாலுவுநாக்காகும்
கன்னமேயள்ளுக்கேள்விகாதின்பேர்செவியுமாமே. (௯௪)

அணன்மிடறுருமற்றையண்ணமேயுண்ணாக்கின்பேர்
அணரியேயணலேயண்ணமானமேல்வாய்ப்புறப்பேர்
குணமுறுகவுள்கபோலங்கொடிறனுகதுப்பின்கூற்றாம்
துணைசெயாக்கிராணங்கோணந்துண்டமேநாசிமூக்காம். (௯௫)

நயனநேத்திரமேயக்கநாட்டங்கோநோக்கஞ்சக்கு
வியனுறும்பார்வைதாரைவிலோசனம்விழியேயக்கி
செயமுறுதிருக்குத்திட்டிதிருட்டியம்பகமேகண்ணும்
மயமுறுதாரைகண்ணின்மணிவிளிம்பிமையினுமம். (௯௬)

பிருகுடிநுதலேநீண்டபீருவேபுரூரம்பூருப்
புருவமாம்புகுடியும்பேர்புடைபடுநிடலத்தோடு
திருநுதல்குளமிலாடஞ்சேர்ந்தமத்தகமேநெற்றி
மருவியபாலமுண்டமளிகமும்வகுக்கலாமே. (௯௭)

உரவியதலையேமூர்த்தமுவ்வியோடுத்தமாங்கம்
சிரமுடிசென்னிமுண்டஞ்சிகரமத்தகமுமாகும்
திருமுடிசிமிலிசிக்கஞ்சிகையிவைகுடுமிநாற்பேர்
விரவியசுடிகைசூழிமேவியநவிரமுச்சி. (௯௮)

உளைநவிர்குடுமிபித்தையோசியேகுழல்கார்குஞ்சி
தளைசிகைதொங்கல்பங்கிதாணீராறாண்மயிர்ப்பேர்
வளர்குழல்கதுப்புக்கேசமருவியசுரியனுன்கும்
இளையமைந்தர்க்குமற்றையிளங்கொடியார்க்குமேற்கும். (௯௯)

குருள்குழல்விலோதமோதிகூழைகுந்தளமராட்டம்
குரலைம்பாலளகம்பத்தும்பெண்மயிர்கூந்தலும்பேர்
பெருகியகொப்புமுச்சிபின்னகங்கொண்டைபந்தம்
திருமிகுதம்மில்லம்பொற்சிகழிகைமயிர்முடிப்பேர். (௧00)

ஓரியேகேசம்பங்கியுளையுரோமம்மராட்டம்
நேருமிப்பேர்களாறும்பிறமயிர்நிகழ்த்துமென்ப
சேருமவ்வுரோமமற்றைச்சிரோந்தமுஞ்செறிமயிர்ப்பேர்
வாருங்குந்தளம்விலோதமயிர்க்குழற்சிப்பேர்வைக்கும். (௧0௧)

பல்லுக்கும் நகைக்கும் பொதுப்பெயர்—முறுவல், மூரல். உ.
மோவாயின்பெயர்—தாடி, கட்டம், சுவுகம். ௩.
நாக்கின்பெயர்—நா, சிகுவை, தாரை, தாலு. ௪.
காதின்பெயர்—கன்னம், அள், கேள்வி, செவி. ௪.

மிடற்றின்பெயர்—அரல். க. உண்ணாக்கின்பெயர்—அண்ணம். க.
மேல்வாய்ப்புறத்தின்பெயர்—அணரி, அணல், அண்ணம். ௩.
கதுப்பின்பெயர்—கவுள், கபோலம், கொடிறு, அனு. ௪.
மூக்கின்பெயர்—ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி. ௪.

கண்ணின்பெயர்—நயனம், நேத்திரம், அக்கம், நாட்டம், கோ, நோக்கம், சக்கு, பார்வை, தாரை, விலோசனம், விழி, அக்கி, திருக்கு, திட்டி, திருட்டி, அம்பகம். கரு.
கண்மணியின்பெயர்—தாரை. க.
கண்ணிமையின்பெயர்—விளிம்பு. க.

புருவத்தின்பெயர்—பிருகுடி, நுதல், பீரு, புரூரம், பூரு, புகுடி. சு.
நெற்றியின்பெயர்—நிடலம், நுதல், குளம், இலாடம், மத்தகம், பாலம், முண்டம், அளிகம். அ.

தலையின்பெயர்—மூர்த்தம், உவ்வி, உத்தமாங்கம், சிரம், முடி, சென்னி, மூண்டம், சிகரம், மத்தகம். கூ.
குடுமியின்பெயர்—முடி, சிமிலி, சிக்கம், சிகை. ௪.
உச்சியின்பெயர்—சுடிகை, சூழி, நவிரம். ௩.

ஆண்மயிரின்பெயர்—உளை, நவிர், குமெி, பித்தை, ஓரி, குழல், கார், குஞ்சி, தளை, சிகை, தொங்கல், பங்கி. கஉ.
ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும் பொதுப்பெயர்—குழல், கதுப்பு, கேசம், சுரியல். ௪.

பெண்மயிரின்பெயர்—குருள், குழல், விலோதம், ஓதி, கூழை, குந்தளம், மராட்டம், குரல், ஐம்பால், அளகம், கூந்தல். கக.
மயிர்முடியின்பெயர்—கொப்பு, முச்சி, பின்னகம், கொண்டை, பந்தம், தம்மில்லம், சிகழிகை. எ.

பிறமயிரின்பெயர்—ஓரி, கேசம், பங்கி, உளை, உரோமம், மராட்டம். சு.
செறிமயிரின்பெயர்—உரோமம், சிரோந்தம். உ.
மயிர்க்குழற்சியின்பெயர்—குந்தளம், விலோதம். உ.

## இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி.

குடிலமேவேணிநீண்டகோடீரம்பின்னலோடு
சடிலமென்றைந்துபேருஞ்சடையெனவடைவேசாற்றும்
நெடியகாத்திரமுறுப்புநீளங்கமவயவப்பேர்
கடியமூட்டுங்கொளுத்துங்கந்துஞ்சந்தாகுமன்றே. (௧௦௨)

சிரையேசங்கனனாடிதிருந்தியநரம்புமுப்பேர்
அரலையேகழலைகோழையையொடுகாசமாகும்
மருவுமங்கிதமேசேக்கைவசிவடுவுடற்றழும்பாம்
தருபொறிவரையிறைப்பேர்சரைநரைபலிதமும்பேர். (௧௦௩)

அழிதலையோட்டினுமங்கபாலமேயத்தியென்பு
கழிவுறுமெலும்பினுமங்களேவரமென்றுங்காட்டும்
கழியுடன்முழுவெலும்புகங்காளமென்பர்நூலோர்
விழைபொறிகரணங்கந்தமேவுமிந்திரியமுப்பேர். (௧௦௪)

தருசுவையொளியூறோசைசாற்றியநாற்றமோருங்
கருவிநாக்கண்ணேமெய்யேகாதொடுமூக்குமாகும்
தெரிதருமுயிரேயாதன்சேதனன்பசுவேசீவன்
அரியபுற்கலனேகூத்தனணுவியமானனென்மா. (௧௦௫)

இருபதோடிருபான்முப்பானிருபானீரைந்துமேலும்
மருவியவாறுசெய்யுண்மக்கடம்பெயர்க்குச்செய்தான்
குருநறுங்குன்றைவேந்தன்குணபத்திரன்றந்தநோன்மை
தருநெறிநோற்கும்வீரைதழைத்தமண்டலவன்றானே. (௧௦௬)

மக்கட்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ௨௦௭.

சடையின்பெயர்—குடிலம், வேணி, கோடீரம், பின்னல், சடிலம். ௫.

அவயவத்தின்பெயர்—காத்திரம், உறுப்பு, அங்கம். ௩.

சந்தின்பெயர்—மூட்டு, கொளுத்து, கந்து. ௩.

நரம்பின்பெயர்—சிரை, சங்கனனம், நாடி. ௩.

கழலையின்பெயர்—அரலை. ௧. கோழையின்பெயர்—ஐ, காசம். ௨.

உடற்றழும்பின்பெயர்—அங்கிதம், சேக்கை, வசி, வடு. ௪.

இறையின்பெயர்—பொறி, வரை. ௨.

நரையின்பெயர்—சரை, பலிதம். ௨.

தலையோட்டின்பெயர்—கபாலம். ௧.

எலும்பின்பெயர்—அத்தி, என்பு, களேவரம். ௩.

கழியுடலின்முழுவெலும்பின்பெயர்—கங்காளம். ௧.

இந்திரியத்தின்பெயர்—பொறி, கரணம், கந்தம். ௩.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், இவற்றை, முறையேயோருங் கருவியாவன: நா, கண், மெய், காது, மூக்கு.

உயிரின்பெயர்—ஆதன், சேதனன், பசு, சீவன், புற்கலன், கூத்தன், அணு, இயமானன், ஆன்மா. ௯.

மூன்றாவது

# விலங்கின்பெயர்த்தொகுதி.

## காப்பு.

துலங்குமுக்குடைநிழற்றத்துந்துபிமுழங்கத்தேவர்
நலம்பெறுகவரிவீசநன்மலர்மாரிதூவ
அலங்குளையரியணைக்கீழமர்ந்தநான்முகனைப்போற்றி
விலங்கின்பேர்த்தொகுதிதன்னைமேதினிவியப்பச்சொல்வாம். (௧)

அரிவயப்போத்துச்சீயமறுகுகேசரியேபூட்கை
மருவியமிருகராசன்வயமாவேமடங்கலோடு
பரவுகண்டீரவம்பஞ்சானனஞ்சிங்கப்பல்பேர்
பெருகியயானையாளிப்பேர்யாளியறுகுபூட்கை. (௨)

வல்லியம்வயமாவோடுசித்திரகாயமற்றும்
வெல்லுமாவுழுவைபாய்மாவியாக்கிரந்தரக்குவேங்கை
கொல்லவேயெழுந்துசீறுங்குயவரிகொடுஞ்சார்த்தூலம்
புல்லொடுபுண்டரீகங்கொடுவரிபுலியினாமம். (௩)

தும்பிமாதங்கந்தூங்கறோல்கறையடியெறும்பி
உம்பல்வாரணம்புழைக்கையொருத்தல்வல்விலங்குநாகம்
கும்பிநால்வாயேபூட்கைகுஞ்சரங்கரேணுவத்தி
கம்பவேழம்முவாவேகரிகயங்களிறுகைம்மா. (௪)

சிந்துரம்வயமாவேகஞ்செறியிபம்புகர்முகங்கள்
தந்தியேமதாவளந்தந்தாவளம்வழுவைபாம்பல்
மந்தமாமருண்மாமற்றைமதகயம்போதகத்தோ
டுந்துமேமைழந்துமேலுமிரண்டுமெற்றுயர்ந்தயானை. (௫)

உதவிசெய்இனத்தைக்காக்குமும்பலேயூதநாதன்
மதகயமதோற்கடம்பின்வாலின்பேர்தாலவட்டம்
அதனுனிவேசகந்தானாமுதுகின்பேர்மஞ்சாம்
மதகமுங்கும்பந்தானுமத்தகமென்றுகூறும். (௬)

# பெயர்ப்பிரிவு

இ - ள். துலங்கும் முக்குடை நிழற்ற - விளங்காநின்ற மூன்று குடைகளும் நிழலைச்செய்யவும்,—துந்துபி முழங்க - துந்துபியானது ஒலிக்கவும்,—தேவர் நலம் பெறு கவரி வீச - தேவர்கள் நன்மைபெற்ற சாமரத்தை வீசவும்,—நல் மலர் மாரி தூவ - நல்ல புட்பமழையைச் சொரியவும்,—அலங்கு உளை அரி அணைக்கீழ் அமர்ந்த நான்முகனைப் போற்றி - பிரகாசிக்கின்ற பிடர்மயிரையுடைய சிங்கத்தினாலே தாங்கப்படுகின்ற ஆசனத்தின்கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளைத் துதித்து,—விலங்கின்பேர்த் தொகுதிதன்னை மேதினிவியப்பச் சொல்வாம் - விலங்கின்பெயர்த்தொகுதியைப் பூமியிலுள்ளோர் அதிசயிக்கும்படியாக (யாம்) கூறுவாம். எ - று.

சிங்கத்தின்பெயர்—அரி, வயப்போத்து, சீயம், அறுகு, கேசரி, பூட்கை, மிருகராசன், வயமா, மடங்கல், கண்டீரவம், பஞ்சாননம். ௧௧.

யானையாளியின்பெயர்—யாளி, அறுகு, பூட்கை. ௩.

புலியின்பெயர்—வல்லியம், வயமா, சித்திரகாயம், வெல்லுமா, உழுவை, பாய்மா, வியாக்கிரம், தரக்கு, வேங்கை, குயவரி, சார்த்தூலம், புல், புண்டரீகம், கொடுவரி. ௧௪.

யானையின்பெயர்—தும்பி, மாதங்கம், தூங்கல், தோல், கறையடி, எறும்பி, உம்பல், வாரணம், புழைக்கை, ஒருத்தல், வல்விலங்கு, நாகம், கும்பி, நால்வாய், பூட்கை, குஞ்சரம், கரேணு, அத்தி, வேழம், உவா, கரி, கயம், களிறு, கைம்மா. ௨௪.

சிந்துரம், வயமா, இபம், புகர்முகம், தந்தி, மதாவளம், தந்தாவளம், வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா, மதகயம், போதகம். ௧௩. (ஆ ௩௭.)

யானைக்கூட்டத்துத்தலையானையின்பெயர்—யூதநாதன். ௧.

மதகயத்தின்பெயர்—மதோற்கடம். ௧.

யானைவாலின்பெயர்—தாலவட்டம். ௧.

யானைவாலுணியின்பெயர்—வேசகம். ௧.

யானைமுதுகின்பெயர்—மஞ்சு. ௧.

யானைமத்தகத்தின்பெயர்—மதகம், கும்பம். ௨.

கரடமேமதம்பாய்கின்றசுவடுகைந்நுதிகளேபுட்
கரமதாமதத்தினுமங்கடங்கடாந்தானமாகும்
பெருகியபிரதிமானம்பேசுகொம்பின்னடுப்பேர்
கருதுகோடெயிறுதந்தகிரியாணங்கடைக்கணுமே. (௭)

கண்டிடுஞ்செவியடிப்பேர்சூளிகைகவுள்கடப்பாம்
விண்டகையுமிழுநீரேவிலாழிபல்லடிகரீரம்
கொண்டகாத்திரமேமுன்கால்கூறியவபரம்பின்கால்
தொண்டைதொண்டலந்துதிக்கைசுண்டையுமப்பேராமே. (௮)

வடவையத்தினியிரண்டும்பிடிகளாங்கரிணியும்பேர்
கடகம்யானைத்திரட்பேர்கயந்தலைபோதகங்கள்
துடியடிகளபமோடுகயமுனியானைக்கன்றும்
படுகுழிபயம்பாமென்பபாகலம்யானைநோயே. (௯)

பரிதுரகஞ்சிறந்தபாடலங்கிள்ளைபாய்மாத்
துரகதம்வாசியுன்னிதூசிகந்தருவங்கற்கி
அரியயமிவுளிமாவேயச்சுவம்புரவிகோரம்
குரகதங்கோணங்கொக்குக்கொய்யுளைசடிலங்கோடை. (௧0)

கந்துகங்கனவட்டம்போர்காட்டும்பத்திரிதுரங்கம்
குந்தமத்திரியாறைந்துங்குதிரையினுமமாகும்
வந்தமேசகத்தினோடுசுவல்குசைமயிர்குளம்பு
வந்தபேர்குரங்குரச்சைமாதிகமதுபோமார்க்கம். (௧௧)

குலவியபசுப்பேர்கூலங்கோக்குடஞ்சுரபியாவே
இலகியநிரையேதேனுப்பெற்றமிவ்வெட்டுமாகும்
பலமுறுகபிலைதேனுப்பரவுதெய்வப்பசுப்பேர்
மலடுதான்வசையாமீற்றுவற்சலைகன்றுவற்சம். (௧௨)

பரவுமோரீற்றுக்கிட்டிபத்திரைநற்பசுப்பேர்
சுரைமுலையாகுமற்றைச்சுதையுதைகாற்பசுப்பேர்
திருமுலைமடியினுமஞ்செருத்தலாபீனமென்ப
நிரைதொறுக்காலிகோட்டநீண்டகாலேயங்கூட்டம். (௧௩)

பாறல்சேப்பெற்றம்பூணிபாண்டில்கொட்டியமிறலே
ஏறுமேழரிபுல்லமெருத்தின்பேரிமின்முரிப்பாம்
பாறல்பேரெருத்தினும்பகடுந்தூர்வகமுமாகும்
ஏறுக்கநரையேநந்தியிடபமாங்கூளியும்பேர். (௧௪)

யானைமதம்பாய்சுவட்டின்பெயர்—கரடம். க. யானைக்கைந்நுதி யின்பெயர்—புட்கரம். க. யானைமதத்தின்பெயர்—கடம், கடாம், தானம். ௩. யானைக்கொம்பின்பெயர்—பிரதிமானம். க.
யானைத்தந்தத்தின்பெயர்—கோடு, எயிறு. உ.
யானைக்கடைக்கண்ணின்பெயர்—நிரியாணம். க.

யானைச்செவியடியின்பெயர்—சூளிகை. க. யானைக்கவுளின்பெயர்-கதுப்பு. க. யானைத்துதிக்கையுமிழ்நீரின்பெயர்—விலாழி.க. யானைப்பல்லடியின்பெயர்—கரீரம். க. யானைமுன்காலின்பெயர்-காத்திரம். க. யானைப்பின்காலின்பெயர்—அபரம்.க. யானைத்துதிக்கையின்பெயர்—தொண்டை, தொண்டலம், சுண்டை.௩.

யானைப்பிடியின்பெயர்—வடவை, அத்தினி, கரிணி. ௩.
யானைத்திரளின்பெயர்—கடகம். க. யானைக்கன்றின்பெயர்—கயந்தலை, போதகம், துடியடி, களபம், கயமுனி. ரு.
யானைபடுகுழியின்பெயர்-அயம்பு.க.யானைநோயின்பெயர்-பாகலம்.க

குதிரையின்பெயர்—பரி, துரகம், பாடலம், இவுளி, பாய்மா, துரகதம், வாசி, உன்னி, தூசி, கந்தருவம், கற்கி, அரி, அயம், இவுளி, மா, அச்சுவம், புரவி, கோரம், குரகதம், கோணம், கொக்கு, கொய்யுளை, சடிலம், கோடை. உச.

கந்துகம், கனவட்டம், பத்திரி, துரங்கம், குந்தம், அத்திரி. சு. ஆ ௩0.
குதிரைமயிரின்பெயர்—மேசகம், சுவல், குசை. ௩.
குதிரைக்குளம்பின்பெயர்—குரம், குரச்சை. உ.
குதிரைபோமார்க்கத்தின்பெயர்—மாதிகம். க.

பசுவின்பெயர்—கூலம், கோ, குடம், சுரபி, ஆ, நிரை, தேனு, பெற்றம். அ
தெய்வப்பசுவின்பெயர்—கபிலை, தேனு. உ.
மலட்டுப்பசுவின்பெயர்—வசை. க.
ஈன்றபசுவின்பெயர்-வற்சலை. க. பசுவின்கன்றின்பெயர்-வற்சம்.க.

ஓரீற்றுப்பசுவின்பெயர்—கிட்டி.க. நற்பசுவின்பெயர்—பத்திரை. க.
பசுவின்முலைப்பெயர்—சுரை. க. உதைகாற்பசுவின்பெயர்-சுதை. க.
முலைமடியின்பெயர்—செருத்தல், ஆபீனம். உ.
பசுக்கூட்டத்தின்பெயர்-நிரை, தொறு, காலி, கோட்டம், காலேயம். ரு.

எருத்தின்பெயர்—பாறல், சே, பெற்றம், பூணி, பாண்டில், கொட்டியம், இறால், ஏறு, மூரி, புல்லம். ௧0. எருத்தின்முரிப்பின்பெயர்-இமில். க.
பேரெருத்தின்பெயர்—பாறல், பகடு, தூர்வகம். ௩.
இடபத்தின்பெயர்—ஏறு, உக்கம், நரை, நந்தி, கூளி. ரு.

தூர்வகந்தூரியமென்பபோதியெருதெருமையின்பேர்
காரானைவடவைமேதிசைரிபங்கவரிகாரா
மூரியேமகிடமெட்டுமொழியுமற்றாண்பொதுப்பேர்
பாரியகடாவினோடுபகடாமைமலட்டினாமம். (௧௫)

அருணஞ்செம்மறியேமோத்தையசமுதளுடுவேகொச்சை
துருவையேழகம்வற்காலிதுள்ளலேபள்ளைவெள்ளை
வருடைமேடங்கடாமைமறிவெறிகொறியேசாகம்
புருவையேதகர்மூவேழுமிரண்டுமாட்டின்பொதுப்பேர். (௧௬)

துருவைமைகொறிமுப்பேருந்தோற்றுஞ்செம்மறியாட்டின்பேர்
செருமலிதகர்கடாவேதிண்ணகமேழகங்கள்
பரவுகம்பளமென்றைந்தும்பற்றுமவ்வாணின்பல்பேர்
மருவியகுட்டன்சேரன்மறிபறழ்குட்டியாமே. (௧௭)

வெள்ளைவற்காலிகொச்சைவெள்ளாட்டினாமமாகும்
வெள்ளையேயதன்மறிப்பேர்மேவியசெச்சைசாகம்
தள்ளியமோத்தைமுப்பேர்சாற்றுமேயிவற்றினாண்பேர்
வள்ளியசரபத்தோடுவருடையும்வரையாடாமே. (௧௮)

கேழலேயரிகுரோடங்கிரிகிடிகிருட்டியேனம்
மோழலேயிருளிமுந்துவல்லுளிகளிறுமைம்மா
போழ்முகக்கோட்டுமாவேபோத்திரிவராகங்கோலம்
சூழுமீரெட்டும்பன்றிசூகரமெறுழியும்பேர். (௧௯)

சல்லியமுளவுமாவெய்சல்லகமுட்பன்றிப்பேர்
சொல்லுமிப்பன்றிமுள்ளுச்சூழ்சலஞ்சலமென்ப
பல்லுகமுளியமெண்குபல்லூகமெலுவினோடு
பல்லமேகரடிநாமம்பகர்குடாவடியுமாமே. (௨௦)

சவரிசீகரமேவீசுஞ்சாமரங்கவரியும்பேர்
கவரிமாபடகம்பட்டமானமாவெகினுங்காட்டும்
கவயமாவாமாகாட்டாகாத்திரிநகுலமென்று
இவையிருபேருமன்றித்தீர்வையுங்கீரியாமே. (௨௧)

அரிணஞ்சாரங்கநவ்வியடலுழைபிணையேகுனம்
மிருகமேமறிகுரங்கமேவுமானேணமும்பேர்
இரலைவச்சயமேபுல்வாய்கலைகருமானுமேற்கும்
இரலைபுல்வாய்க்கும்பேராமென்றனர்நன்னூலோர். (௨௨

ஒான் - இர. நாடு - 121

ஓகம - சில நாடு - 5

எகிலாக்கலரி - சில. நாடு - 5

மாண் - இல. நாடு - 78

பொதியெருத்தின்பெயர்—தூர்வகம், தூரியம். ௨.
எருமையின்பெயர்—காரான், வடலவை, மேதி, சைரிபம், கவரி, காரா, சூரி, மகிடம். ௮.
எருமையாண்பெயர்—கடா, பகடு. ௨.
மலட்டெருமையின்பெயர்—மை. ௧.

ஆட்டின்பொதுப்பெயர்—அருணம், செம்மறி, மோத்தை, அசம், உதள், உடு, கொச்சை, துருவை, ஏழகம், வற்காலி, துள்ளல், பள்ளை, வெள்ளை, வருடை, மேடம், கடா, மை, மறி, வெறி, கொறி, சாகம், புருவை, தகர். ௨௩.

செம்மறியாட்டின்பெயர்—துருவை, மை, கொறி. ௩.
செம்மறியாட்டாணின்பெயர்—தகர், கடா, திண்ணகம், ஏழகம், கம்பளம். ௫.
ஆட்டுக்குட்டியின்பெயர்—குட்டன், சோரன், மறி, பறழ். ௪.

வெள்ளாட்டின்பெயர்—வெள்ளை, வற்காலி, கொச்சை. ௩.
வெள்ளாட்டுக்குட்டியின்பெயர்—வெள்ளை. ௧.
வெள்ளாட்டாணின்பெயர்—செச்சை, சாகம், மோத்தை. ௩.
வரையாட்டின்பெயர்—சரபம், வருடை. ௨.

பன்றியின்பெயர்—கேழல், அரி, குரோடம், கரி, கிடி, கிருட்டி, ஏனம், மோழல், இருளி, வல்லுளி, களிறு, மைம்மா, கோட்டுமா, போத்திரி, வராகம், கோலம், சூகரம், எறுழி. ௧௮.

முட்பன்றியின்பெயர்—சல்லியம், முளவுமா, எய், சல்லகம். ௪.
முட்பன்றிமுள்ளின்பெயர்—சலம், சலலம். ௨.
கரடியின்பெயர்—பல்லுகம், உளியம், எண்கு, பல்லூகம், எலு, பல்லம், குடாவடி. ௭.

சாமரத்தின்பெயர்—சவரி, சீகரம், கவரி. ௩.
கவரிமாவின்பெயர்—படகம், பட்டம், மானமா, எகின். ௪.
காட்டாவின்பெயர்—கவயமா, ஆமா. ௨.
கீரியின்பெயர்—காத்திரி, நகுலம், தீர்வை. ௩.

மானின்பெயர்—அரிணம், சாரங்கம், நவ்வி, உழை, பிணை, குணம், மிருகம், மறி, குரங்கம், ஏணம். ௧௦.
கலையின்பெயர்—இரலை, வச்சயம், புல்வாய், கருமான். ௪.
புல்வாயின்பெயர்—இரலை. ௧.

கழுதையின்பேர்வாலேயங்கர்த்தபங்காளவாயே
அழகிலத்திரியேகோகுவேசரிகரமுமாகும்
குழைவுறுவேசரிப்பேர்கோவேறுகழுதைக்கூற்றும்
அழிவிலொட்டகந்தாசேரமத்திரிநெடுங்கழுத்தல். (௨௩)

ஓரிகோமாயுவூளனொண்டனேயிகலன்சம்பு
பூரிமாயன்குரோட்டாச்சிருகாலனரியேபோற்றும்
ஓரியேகோலாங்கூலமுற்றமைம்முகனேகள்வன்
சீரியகலையோடைந்துமுசுவெனச்செப்பலாமே. (௨௪)

சூரனேமுடுவல்பாசிபுரோகதிசுனகன்குக்கல்
கூரனேயெகினனக்கன்குரைமுகன்ஞமலிஞாளி
சாரமேயன்சுணங்கன்சுவாவேநாய்தானைம்முப்பேர்
வீரியமுடுவல்பெண்ணாய்விருகங்கொக்கிரண்டுஞ்செந்நாய். (௨௫)

வெருகுடனலவனோதிவிடாரகம்விலாளம்பூசை
பொருதுமார்ச்சாலம்பாக்கனிற்புலிபூனையொன்பான்
மருமிகுதுருக்கநானமான்மதநரந்தநான்கும்
கருதுகத்தூரியின்பேர்காட்டியமறுவிநாவி. (௨௬)

வலிமுகங்கடுவன்பாயும்வானரமரியேமந்தி
பிலவங்கங்கோகிலங்கான்பெயர்ந்தகோடரமேயூகம்
கலகமர்க்கடமேநாகங்கவிகுரங்கிவையீராறும்
குலவுகாருகமேயூகங்கூறியகருங்குரங்கே. (௨௭)

சாய்ந்தசாயானதங்கள்சரடமேகாமரூபி
ஏய்ந்ததண்டோமானோதியிசைகோம்பிமுசலியோத்தி
ஓந்தியாஞ்சுவவுசுண்டனுறுசுசுந்தரிமூஞ்சூறே
ஆய்ந்திடுசிகரியாகோடிரும்பனுமகழெலிப்பேர். (௨௮)

கருப்பைகாரெலியினுமங்களதந்துந்துளமேயாகுப்
பெருச்சாளிமூடிகத்தோடுந்துருவென்றும்பேராம்
வரிப்புறம்வெளிலணிற்பேர்வருந்தடிமுசலிகோதாத்
தரித்தெழுமும்பினுமஞ்சசமுயலென்னலாமே. (௨௯)

விலங்கினாண்மரபு.

கடுவன்மாவொருத்தல்போத்துக்கலைதகர்களிறுசேவி
னொடுபகடும்பலேறோடோரியீராறுமாண்பேர்
வடுவறுகுரங்குபூனைமற்றிவைகடுவனுமே
அடுதிறல்யானைபன்றியாடல்வெம்புரவிமாவாம். (௩௦)

முதுநகரி - இல. நாடு. 232

கழுதையின்பெயர்—வாலேயம், கர்த்தபம், காளவாய், அத்திரி, கோகு, வேசரி, கரம். எ.
கோவேறுகழுதையின்பெயர்—வேசரி. க.
ஒட்டகத்தின்பெயர்—தாசேரம், அத்திரி, நெடுங்கழுத்தல். ௩.

நரியின்பெயர்—ஓரி, கோமாயு, ஊளன், ஒண்டன், இகலன், சம்பு, [சம்புகம்.] பூரிமாயன், குரோட்டா, சிருகாலன். கூ.
முசுவின்பெயர்—ஓரி,கோலாங்கூலம், மைம்முகன்,கள்வன்,கலை.ரு.

நாயின்பெயர்—சூரன், ஞமலி, பாசி, புரோகதி, சுனகன், குக்கல், கூரன், எகினன், அக்கன், குரைமுகன், ஞமலி, ஞாளி, சாரமேயன், சுணங்கன், சுவா. கரு.
பெண்ணாயின்பெயர்—முடுவல். க.
செந்நாயின்பெயர்—விருகம், கொக்கு. உ.

பூனையின்பெயர்—வெருகு, அலவன், ஓதி, விடாரகம், விலாளம், பூசை, மார்ச்சாலம், பாக்கன், இற்புலி. கூ.
கத்தூரியின்பெயர்—துருக்கம், நானம், மான்மதம், நரந்தம். ச.
நாவியின்பெயர்—மறுவி. க.

குரங்கின்பெயர்—வலிமுகம், கடுவன், வானரம், அரி, மந்தி, பிலவங்கம், கோகிலம், கோடரம், யூகம், மர்க்கடம், நாகம், கவி.கஉ.
கருங்குரங்கின்பெயர்—காருகம், யூகம். உ.

ஓந்தியின்பெயர்—சாயானதம், சரடம், காமரூபி, தண்டு, ஓமான், ஓதி, கோம்பி, முசலி, ஓத்தி. கூ.
மூஞ்சூற்றின்பெயர்—சுவவு, சுண்டன், சுசுந்தரி. ௩.
எலியின்பெயர்—சிகரி, ஆகு, இரும்பன். ௩.

காரெலியின்பெயர்—கருப்பை. க. பெருச்சாளியின்பெயர்—களதம், துர்க்களம், ஆகு, மூடிகம், உந்துரு. ரு.
அணிலின்பெயர்—வரிப்புறமி, வெளில். உ.
உடும்பின்பெயர்—த்டி,முசலி,கோதா. ௩. முயலின்பெயர்—சசம்.க.

## விலங்கினுண்மரபு.

விலங்கினாண்பெயர்—கடுவன், மா, ஒருத்தல், போத்து, கலை, தகர், களிறு, சே, பகடு, உம்பல், ஏறு, ஓரி. கஉ.
கடுவனென்னும்பெயர்—குரங்கு, பூனை, இரண்டிற்குமாம்.
மாவென்னும்பெயர்—யானை, பன்றி, புரவி. ௩ ம்.

கரடிபுல்வாய்மான்யானைகவரியோடெருமைபன்றி
பொருபுலிமரையென்றொன்பான்புகன்றிடுமொருத்தலாகும்
மரைபசுப்புலியேபூனைமற்றைப்புல்வாயும்போத்தாம்
கருதியமுசுவுமானுங்கலையெனக்காட்டலாமே. (௧௧)

துருவாடுவேழம்யாளிசுறாத்தகரென்றேசொல்லும்
கரியொடுசுறவுபன்றிகளிறெனக்காட்டலாமே
செருமலிகுதிரைபெற்றம்புல்வாயேசேவென்றாகும்
எருமையோடியானைபெற்றம்பகடிபமும்பலாமே. (௧௨)

ஆணுடனெருமைபன்றியாய்மயிர்க்கவரிசங்கு
மானொடுமரைபுல்வாயுமாறுகொள்சுறவுமேறாம்
ஊனுகர்நரியினோடுமுசுவிவையோரியாகும்
மானநூல்விலங்கினாணின்மரபெனவடைத்தவாறே. (௧௩)

விலங்கின்பெண்மரபு.

பிடிபிணைபெட்டைமந்திபிணாவோடாநாகுபாட்டி
கொடுவிலங்கின்பெண்பாலாங்குஞ்சரங்கவரியோடு
நெடியவொட்டகமிம்மூன்றுநெடும்பிடிநிகழ்த்துநாயம்
வடிவுளவுழைபுல்வாய்நாய்வராகமேபிணையின்வைக்கும். (௧௪)

ஓட்டகங்கழுதைவாசியுறுசிங்கமரையிவ்வைந்தும்
பெட்டையாமுசவோடேகம்பேசியகுரங்குமந்தி
பட்டபுல்வாய்நாய்பன்றிபகர்ந்திடும்பிணாவெனும்பேர்
கட்டியவெருமைபெற்றங்காட்டுளமரையேயானாம். (௧௫)

எருமையேமரையேபெற்றமேற்றநீர்ச்சாதிநாகாம்
நரிபன்றிநாயிம்மூன்றுநாட்டியபாட்டியாகும்
பெருகுபெண்பால்பிணாப்பெண்பேணுமானவையுமானாம்
பொருவினாலுணர்ந்துசொன்னபுலவர்தம்வாக்குத்தானே. (௧௬)

விலங்கின்பிள்ளைமரபு.

பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பொடுகுருளைகன்று
மறியேபோதகமிவ்வொன்பான்வல்விலங்கின்பிள்ளைப்பேர்
பறழொடுகுருளைகுட்டிபற்றியமூன்றுபேரும்
உறுபுலிமுயல்வராகமோதியநரிநாயாமே. (௧௭)

முறுகுநாயன்றிமற்றைமொழிந்திடும்பிள்ளையென்ப
மறியென்பதாடழுங்குமானொடுகுதிரைவைக்கும்
பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பெனவைந்துபேரும்
குறியுளகுரங்கேயாதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை. (௧௮)

ஒருத்தலென்னும்பெயர்—கரடி, புல்வாய், மான், யானை, கவரி, எருமை, பன்றி, புலி, மரை. கூ ம்.
போத்தென்னும்பெயர்—மரை, பசு, புலி, பூனை, புல்வாய். ரு ம்.
கலையென்னும்பெயர்—முசு, மான். உ ம்.

தகரென்னும்பெயர்—துருவாடு, வேழம், யாளி, சுறா. ச ம்.
களிறென்னும்பெயர்—கரி, சுறவு, பன்றி. ங ம்.
சேவென்னும்பெயர்—குதிரை, பெற்றம், புல்வாய். ங ம்.
பகடென்னும்பெயர்—எருமை, யானை, பெற்றம். ங ம்.
உம்பலென்னும்பெயர்—இபம். க ம்.

ஏறென்னும்பெயர்—ஆன், எருமை, பன்றி, கவரி, சங்கு, மான், மரை, புல்வாய், சுறவு. கூ ம்.
ஓரியென்னும்பெயர்—நரி, முசு. உ ம்.

## விலங்கின்பெண்மரபு.

விலங்கின்பெண்பாற்பெயர்—பிடி, பிணை, பெட்டை, மந்தி, பிணா, ஆன், நாகு, பாட்டி. அ.
பிடியென்னும்பெயர்—குஞ்சரம், கவரி, ஒட்டகம். ங ம்.
பிணையென்னும்பெயர்—உழை, புல்வாய், நாய், வராகம். ச ம்.

பெட்டையென்னும்பெயர்—ஒட்டகம், கழுதை, வாசி, சிங்கம், மரை. ரு ம்.
மந்தியென்னும்பெயர்—முசு, ஊகம், குரங்கு. ங ம்.
பிணாவென்னும்பெயர்—புல்வாய், நாய், பன்றி. ங ம்.
ஆனென்னும்பெயர்—எருமை, பெற்றம், மரை. ங ம்.

நாகென்னும்பெயர்—எருமை, மரை, பெற்றம், நீர்ச்சாதி. ச ம்.
பாட்டியென்னும்பெயர்—நரி, பன்றி, நாய். ங ம்.
பிணாப்பெண்ணெனன்னும்பெயர்கள்—பெண்பாலெவற்றிற்குமாம்.
ஆணெனன்னும்பெயர்—ஆண்பாலெவற்றிற்குமாம்.

## விலங்கின்பிள்ளைமரபு.

விலங்கின்பிள்ளைப்பெயர்—பறழ், பிள்ளை, குழவி, குட்டி, பார்ப்பு, குருளை, கன்று, மறி, போதகம். கூ.
பறழ்குருளைகுட்டியென்னும்பெயர்கள்—புலி, முயல், வராகம், நரி, நாய். ரு ம்.

பிள்ளையென்னும்பெயர்—நாயொழிந்தவற்றிற்காம்.
மறியென்னும்பெயர்—ஆடு, அழுங்கு, மான், குதிரை. ச ம்.
பறழ் பிள்ளை குழவி குட்டி பார்ப்பென்னும்பெயர்கள்—குரங்கு முதன்மரக்கோட்டில்வாழ்விலங்கின்பிள்ளைகட்காம்.

கடமைமானெருமைபெற்றங்கவயமொட்டகமேயானை
விடுபரிமரைகராமேமேவியகவரிகன்றாம்
கடமைமானெருமையானைகாட்டியகுழவியாகும்
அடுபுலிசிங்கம்யானையானபோதகமென்றாமே. (௩௯)

முறுகியகீரிபூனைமுயலணிலென்பநான்கும்
பறழொடுகுட்டிபிள்ளைபன்னியமூன்றுமாகும்
பறழொடுகுட்டிதானேபாக்கனுமணிலுமென்ப
பறழ்பிள்ளையிரண்டுஞ்சொல்லிற்பார்ப்பொடுதவழ்சாதிப்பேர். (௪0)

குருளையுங்கன்றுமானிற்கொள்ளுபகுழவியோடு
குருளையும்யாளிகொள்ளுங்குழவியேமுசவினுகும்
குருளையுமுசவின்கூற்றாங்கூறியமாவேமானே
மிருகமேகுரங்கோநான்கும்விலங்கினிற்பொதுப்பேராமே. (௪௧)

சாலமேவியூகம்யூதஞ்சாற்றியகுலம்விருந்தம்
கோலமார்கணம்விலங்கின்கூட்டமாம்பிறவுமேற்கும்
கூலம்வேசகமேதோகைகுறித்திடுமிலாங்கூலம்வால்
வாலதியென்றும்பேராம்வாலின்கீழ்வெருகமாமே. (௪௨)

மருப்பொடுசிருங்கங்கோடுமற்றையவுலவைகொம்பாம்
குருத்திடும்விடாணமும்பேர்குமரங்கொம்பிலாவிலங்காம்
கிருத்தியேபுறணிபோர்வைகிளரதளொலியரூக்குத்
துருத்தியேசருமம்பச்சைதுவக்குரிவடகந்தோலாம். (௪௩)

தசைபுலால்புலவுபுண்ணேதடியொடுபுளிதந்தூவே
பிசிதம்வள்ளூரம்விடக்குப்பேசிலூனின்பேர்பத்தாம்
பொசிதருமுடையேயூழ்த்தல்பூதியேதசைபுலாலாம்
பசுவினதிறைச்சிதானேபகர்ந்தவள்ளூரமதாமே. (௪௪)

எருவையேநெய்த்தோர்சோரியியம்பிடுமுதிரம்புண்ணீர்
குருதிசெம்பால்புலாநீர்குறித்தசோணிதமேசெந்நீர்
கருதியசுடுவென்மற்றைக்கறையீராறிரத்தத்தின்பேர்
விரவியநிணங்கொழுப்புவிளரொடுவிழுக்குமாமே. (௪௫)

கருவொடுசினைபீள்சூலேகருப்பமேவயாவுமாகும்
மருவியவழும்பினுமம்வழுக்கென்பவீருளீரல்
கருதியமுடையினுமங்காட்டியபுலவோடேத்தை
உருவியமலமேமாசேயுபமலமுன்னின்மாசாம். (௪௬)

கன்றென்னும்பெயர்—கடமை, மான், எருமை, பெற்றம், கவயம், ஒட்டகம், யானை, பரி, மரை, கராம், கவரி. ௧௧ ம்.
குழவியென்னும்பெயர்—கடமை, மான், எருமை, யானை. ௪ ம்.
போதகமென்னும்பெயர்—புலி, சிங்கம், யானை. ௩ ம்.

பறழ்குட்டிபிள்ளையென்னும்பெயர்கள்—கீரி, பூனை, முயல, அணில். ௪ ம்.
பறழ்குட்டியென்னும்பெயர்கள்—பாக்கன், அணில். ௨ ம்.
பறழ்பிள்ளையென்னும்பெயர்கள்—பார்ப்பு, தவழ்சாதி. ௨ ம்.

குருளைகன்றென்னும்பெயர்கள்—மான். ௧ ம்.
குழவிகுருளையென்னும்பெயர்கள்—யாளி. ௧ ம்.
குழவிகுருளையென்னும்பெயர்கள்—முசு. ௧ ம்.

மரபு முற்றிற்று.

விலங்கின்பொதுப்பெயர்—மா, மான், மிருகம், குரங்கு. ௪.

விலங்கின்கூட்டத்தின்பெயர்—சாலம், வியூகம், யூதம், குலம், விருந்தம், கணம். ௬.
விலங்கின்வாலின்பெயர்—கூலம், வேசகம், தோகை,இலாங்கூலம், வாலதி. ௫.
வெருகம். ௧.

விலங்கின்கொம்பின்பெயர்—மருப்பு, சிருங்கம், கோடு, உலவை, விடாணம். ௫. கொம்பிலாவிலங்கின்பெயர்—குமரம். ௧.
தோலின்பெயர்—இருத்தி, புறணி, போர்வை, அதள், ஒலியல், தொக்கு, துருத்தி, சருமம், பச்சை, துவக்கு, உரி, வடகம். ௧௨.

ஊனின்பெயர்—தசை, புலால், புலவு, புண், தடி, புளிதம், தூ, பிசிதம், வள்ளூரம், விடக்கு. ௧௦.
புலாலின்பெயர்—முடை, ஊழ்த்தல், பூதி, தசை. ௪.
பசுவினிறைச்சியின்பெயர்—வள்ளூரம். ௧.

இரத்தத்தின்பெயர்—எருவை, செய்த்தோர், சோரி, உதிரம், புண்ணீர், குருதி, செம்பால், புலானீர், சோணிதம், செந்நீர், கூவென், கறை. ௧௨.
கொழுப்பின்பெயர்—நிணம், விளர், விழுக்கு. ௩.
கருப்பத்தின்பெயர்—கரு, சினை, பீள், சூல், வயாவு. ௫.
வழும்பின்பெயர்—வழுக்கு. ௧. ஈரலின்பெயர்—ஈருள். ௧.
முடையின்பெயர்—புலவு, ஊத்தை. ௨. மாசின்பெயர்—மலம். ௧.
உண்மாசின்பெயர்—உபமலம். ௧.

அரவுகட்செவியேபோகியகியரிவியாளஞ்சர்ப்பம்
உரகம்பன்னகமேநாகமுற்றமாசுணமேசக்கிரி
பரவியபுயங்கம்பாந்தளங்கதம்பணிபாம்பின்பேர்
இரைகொளுந்துண்டஞ்சாரையிராசிலமென்பதும்பேர். (௪௭)

விடமுமிழ்மண்டலிக்குமேவுகோளகமேநாமம்
கொடியமாலுதானனேகண்குத்திப்பாம்பென்றுகூறும்
நெடியமாசுணமேபாந்தணீள்பெரும்பாம்பினுமம்
முடியவேயெழுந்துசீறுமூர்க்கனேநாகமென்ப. (௪௮)

வருகருவழலையின்பேரிராசமாநாகமாகும்
குரவியபவைநாகங்குக்குடசர்ப்பமென்ப
பரவியபடம்பணம்பைபடப்பொறியுத்திதுத்தி
கருதியதட்டநஞ்சுகாலும்பல்லதட்டங்காற்றும். (௪௯)

எகினமோதிமமராளம்விகங்கம்வக்கிராங்கமன்னம்
சிகியொடுஞமலிதோகைசிகாவளஞ்சிகண்டிமஞ்ஞை
ஒகரமேமயூரமற்றுமுறுபிணிமுகங்கலாபி
மகிழ்வுறுநவிரம்பீலிகேகயமயில்பன்மூப்பேர். (௫௦)

சரணமேசிகண்டங்கூந்தல்சந்திரகங்கலாபங்கூழை
பெருகியதோகைதொங்கல்பீலியாந்தூவியும்பேர்
மருவியவகவலாலன்மயிற்குரலேங்கலும்பேர்
வருமுருந்திறகின்முள்ளாமற்றன்னச்சிறகுதூவி. (௫௧)

மன்னியகலுழன்மற்றைவைனனேவைனதேயன்
பன்னகவைரியோடுதார்க்கியன்பறவைவேந்தன்
உன்னியகருடனுமழுவணமுமதற்கேகூறும்
சொன்னசாதகப்புட்டானேசூழ்ந்தசாரங்கமென்ப. (௫௨)

சிம்புள்வாருண்டமற்றைச்செப்பியவருடையோடு
சம்பரந்துரோணம்வெய்யசரபமெண்காற்புட்பேராம்
வெம்பியநேமிப்புள்ளுவிரும்புசக்கரவாகப்புட்
கொம்பியகோகம்யானைக்குருகென்றுகூறலாமே. (௫௩)

இருந்தபுண்டரமேகங்கமெருவையேபவணையோடு
கருஞ்சிறையுவணமைந்துங்கழுகென்பசகுந்தமும்பேர்
திருந்தியசேனம்பாரசிகைபாறுசேருங்கங்கம்
பருந்தின்பேரசுணமாவேபகரிற்கேகயமென்றோதும். (௫௪)

chakravaka = anas Casarca.

பாம்பின்பெயர்—அரவு, கட்செவி, போகி, அகி, அரி, வியாளம், சர்ப்பம், உரகம், பன்னகம், நாகம், மாசுணம், சக்கிரி, புயங்கம், பாந்தள், அங்கதம், பணி. கரு.
சாரைப்பாம்பின்பெயர்—துண்டம், இராசிலம். உ.

மண்டலிப்பாம்பின்பெயர்—கோளகம். க.
கண்குத்திப்பாம்பின்பெயர்—மாலுதானனன். க.
பெரும்பாம்பின்பெயர்—மாசுணம், பாந்தள். உ.
நாகத்தின்பெயர்—மூர்க்கன். க.

கருவழலைப்பாம்பின்பெயர்—இராசமாநாகம். க.
பறவைநாகத்தின்பெயர்—குக்குடசர்ப்பம். க.
பாம்பின்படத்தின்பெயர் —பணம், பை. உ. படப்பொறியின் பெயர்—உத்தி, துத்தி. உ. பாம்பினச்சுப்பல்லின்பெயர்—தட்டம். க. பாம்புயிர்ப்பின்பெயர்—அதட்டம். க.

அன்னத்தின்பெயர்—எகினம், ஓதிமம், மராளம், விகங்கம், வக்கிராங்கம். ரு.
மயிலின்பெயர்—சிகி,ஞமலி,தோகை,சிகாவளம்,சிகண்டி, மஞ்ஞை, ஒகரம், மயூரம், பிணிமுகம், கலாபி, நவிரம், பீலி, கேகயம். கந.

மயிற்பீலியின்பெயர்—சரணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், கலாபம், கூழை, தோகை, தொங்கல், தூவி. கூ.
மயிற்குரலின்பெயர்—அகவல், ஆலல், ஏங்கல். ந.
இறகின்முள்ளின்பெயர்-முருந்து.க.அன்னச்சிறகின்பெயர்-தூவி. க.

கருடன்பெயர்—கலுழன், வைனன், வைனதேயன்,பன்னகவைரி, தார்க்கியன், பறவைவேந்தன், உவணம். எ.
சாதகப்புள்ளின்பெயர்—சாரங்கம். க.

எண்காற்புள்ளின்பெயர்—சிம்புள், வாருண்டம், வருடை, சம்பரம், துரோணம், சரபம். சு.
சக்கரவாகப்புள்ளின்பெயர்—நேமிப்புள்,கோகம்,யானைக்குருகு. ந.

கழுகின்பெயர்—புண்டரம், கங்கம், எருவை, பவணை, உவணம், சகுந்தம். சு.
பருந்தின்பெயர்—சேனம், பாரசிகை, பாறு, கங்கம். ச.
அசுணமாவின்பெயர்—கேகயம். க.

சாருவேயரியேவன்னிதத்தையேசுகமேகிள்ளை
கீரமேஃவாகதந்தான்கிளியவந்திகையுமாகும்
கீரமுங்கிள்ளைதானுங்கிளர்கருங்கிளியினமம்
சாரமாகிலாமுகிப்பேர்சகோரஞ்செம்போத்துக்குக்கில். (௫௫)

கோகிலங்களகண்டம்மேகோரகைகுயிலினபேர்தான்
ஆகுமேபிகத்திறேடுபரபுட்டந்தானுமப்பேர்
கூகையுமுலூகமும்போர்க்குடிஞையுங்குராலுங்கோட்டான்
நாகணவாய்ப்புட்பூவைநவிற்றுஞ்சாரிகையுமாமே. (௫௬)

கஞ்சனங்கிகிணியோடுவயவனேகஞ்சரீடம்
விஞ்சுபாரத்துவாசம்வலியனைவிதித்தபேரே
வஞ்சுளன்வயவன்மற்றைவயானெனன்பகாரிப்பிள்ளை
கஞ்சனங்கயவாயென்பகரிக்குருவிப்பேர்தானே. (௫௭)

சிரல்கவுதம்பொன்வாய்ப்புட்டித்திரிசிச்சிலிப்பேர்
கருதியபெரும்புள்ளோடுகௌசிகமுமன்கூகை
குருகுகாலாயுதம்போர்க்குக்குடமாண்டலைப்புட்
பெருகுவாரணமென்றைந்தும்பேசியகோழியாமே. (௫௮)

குலிங்கமேசடகமேயூர்க்குருவியாம்புலிங்கமும்பேர்
நிலங்குபூழாங்காதம்பநெடியகானங்கோழிப்பேர்
கலிங்கமேகம்புள்வானம்பாடியாங்குறும்பூழ்காடை
இலங்குகோரசமேபுல்லோடிதல்சிவலிவைமுப்பேரே. (௫௯)

சிரவமேகௌதாரிப்பேர்சில்லையேடகண்டையாகும்
மருவியசலாங்குதானேவாய்த்தபொய்யாப்புள்ளாமே
கரடம்வாயசமரிட்டங்கரும்பிள்ளைகொடியேகாகம்
இருடிபிங்கலையேயாந்தைகின்னரமென்பதும்பேர். (௬௦)

கரும்புறாவின்பேர்பாராவதமென்பகபோதமும்பேர்
பொருந்துதூதுணங்கபோதங்களரவம்புறாப்பொதுப்பேர்
பரிந்துகான்மேயுங்காளபதமேமாடப்புறாவாம்
திருந்தியவுள்ளானுள்ளான்சிதகந்தூக்கணங்குரீஇயே. (௬௧)

கரும் கெடுதி - இடை. நிலை - 116.

உள் - இடைநிலை 117

கிளியின்பெயர்—சாரு, அரி, வன்னி, தத்தை, சுகம், கிள்ளை, கீரம், சுவாகதம், அவந்திகை. கூ.
கருங்கிளியின்பெயர்—கீரம், கிள்ளை. உ.
நிலாமுகியின்பெயர்-சகோரம். க. செம்போத்தின்பெயர்-குக்கில்.க.

குயிலின்பெயர்—கோகிலம், களகண்டம், கோரகை, பிகம், பரபுட்டம். ரு.
கோட்டான்பெயர்—கூகை, உலூகம், குடிஞை, குரால். ச.
நாகணவாய்ப்புள்ளின்பெயர்—பூவை, சாரிகை. உ.

வலியன்பெயர்—கஞ்சனம், கிகிணி, வயவன், கஞ்சரீடம், பாரத்துவாசம். ரு.
காரிப்பிள்ளையின்பெயர்—வஞ்சுளன், வயவன், வயான். ந.
கரிக்குருவியின்பெயர்—கஞ்சனம், கயவாய். உ.

சிச்சிலியின்பெயர்—சிரல், கவுதம், பொன்வாய்ப்புள், தித்திரி. ச.
கூகையின்பெயர்—பெரும்புள், கௌசிகம், ஊமன். ந.
கோழியின்பெயர்—குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப்புள், வாரணம். ரு.

ஊர்க்குருவியின்பெயர்—குலிங்கம், சடகம், புலிங்கம். ந.
கிலங்கின்பெயர்—பூழ். க. கானங்கோழியின்பெயர்—காதம்பம். க.
வானம்பாடியின்பெயர்—கலிங்கம், கம்புள். உ.
காடையின்பெயர்—குறும்பூழ். க.
சிவலின்பெயர்—கோரசம், புல், இதல். ந.

கவுதாரியின்பெயர்—சிரவம். க.
பகண்டையின்பெயர்—சில்லை. க.
பொய்யாப்புள்ளின்பெயர்—சலாங்கு. க.
காகத்தின்பெயர்-கரடம்,வாயசம்,அரிட்டம்,கரும்பிள்ளை,கொடி. ரு.
ஆந்தையின்பெயர்—இருடி, பிங்கலை, கின்னரம். ந.

கரும்புறாவின்பெயர்—பாராவதம், கபோதம். உ.
புறாப்பொதுவின்பெயர்—தூதுணம், கபோதம், களரவம். ந.
மாடப்புறாவின்பெயர்—காளபதம். க.
உள்ளான்பெயர்—உள்ளல். க.
தூக்கணங்குருவியின்பெயர்—சிதகம். க.

கருதியகம்புள்சம்பங்கோழியாங்கவுஞ்சமன்றில்
குருகுவண்டானமென்பகொய்யடிநாரையின்பேர்
பெருகியபுதாவேபோதாப்பெருநாரைசிகரியொன்றே
கருநிறநாரைவெள்ளைநாரைசாரசமென்றுமே. (சுஉ)

மன்னுநீர்க்காக்கையர்க்கமற்றுங்காரண்டமும்பேர்
பன்னியகுரண்டங்கொக்காம்வலாகமும்பகமுமப்பேர்
உன்னமேகிராமமற்றையுற்குரோசத்தினோடு
கின்னரமின்னநீரிற்கிளர்ந்தெழுபறவையாமே. (சுங)

அரியளிஞிமிறுமந்தியறுபதஞ்சிலீமுகஞ்சஞ்
சரிகமேசரகமேசஞ்சாளிகஞ்சுரும்புகீடம்
பிரமரமாவேகீதம்பிருங்கமேபிரசம்புள்ளு
வரிகொள்புண்டரீகந்தும்பிமதுபநாலைந்தும்வண்டாம். (சுச)

கரும்புளேகேசவந்தேன்கண்டபெண்வண்டிஞமம்
சுரும்பொடுமதுகரங்கள்சொற்றிடுந்தும்பியாண்பேர்
துருஞ்சிலாலாலமென்பசோர்விலஞ்சலிகைவாவல்
தருங்கோபமீயன்மூதாச்சரகமேபிரசந்தேனீ. (சுரு)

சிதடிசில்லிகையேசில்லைசிள்வீடுசிமிலியும்பேர்
பதமுறுசலபம்விட்டிற்பறவையாம்பதங்கமும்பேர்
விதமுறுநுளம்புதானேநிலத்திமின்மினிகச்சோதம்
கொதுகின்பேர்மசகந்துள்ளல்கூறின்மற்றசவலும்பேர். (சுசு)

பறவையாண் பெண்மரபு.

மயிலெழாலல்லாப்புள்ளின்வகுத்தவாண்சேவலென்ப
மயிலெழாலெனுமிரண்டில்வாய்த்தவாண்போத்ததாகும்
அயர்வுறுகோழிகூகையல்லாப்பெண்ணளகென் * றோதார்
பெயர்பெறுமெல்லாப்புள்ளின்பெண்பெடைபெட்டைபேடை. ()

விகங்கமாசுகியேவீயேவிகிரமேகுடிஞைபக்கி
சகுந்தம்பத்திரிபதங்கந்தாழ்பிணிமுகத்தினோடு
பகர்ந்திடுங்ககமேகோலப்பறவையேபதகம்போகில்
புகழ்ந்திடுகுரீஇமூவைந்தும்புட்பொதுவயானமும்பேர். (சுஅ)

---

* "கோழிகூகையல்லாப்பெண்ணளகென்றோதும்" என்றுபாடஞ்சொல்வாருமுளர். அது தொல்காப்பியப் பொருளதிகாரத்து மரபியலின் "கோழிகூகையாயிரண்டல்லவை, சூழுங்காலையளகெனலமையா" என்னும், ருசு ஞ் சூத்திரத்திற்கு மாறுபடுதலிற் பொருந்தாதென்க. மயிலின்பெண்ணும் அளகெனப்படும், அது "அப்பெயர்க்கிளவி மயிற்குமுரித்தே" என்னும், ருள ஞ் சூத்திரத்தாலறிக.

[illegible] - [illegible] - 114

[illegible] - 117

[illegible] - 116

[illegible] - அப்பர் - [illegible]

சம்பங்கோழியின்பெயர்—கம்புள். க
அன்றிலின்பெயர்—கவுஞ்சம். க.
கொய்யடிநாரையின்பெயர்—குருகு, வண்டானம். உ.
பெருநாரையின்பெயர்—பிதா, போதா. உ.
கருநாரையின்பெயர்—சிகரி. க.
வெள்ளைநாரையின்பெயர்—சாரசம். க.

நீர்க்காக்கையின்பெயர்—அர்க்கம், காரண்டம். உ.
கொக்கின்பெயர்—குரண்டம், வலாகம், பகம். ங.
நீர்வாழ்பறவையின்பெயர்—உன்னம், கிராமம், உற்குரோசம், கின்னரம். ச.

வண்டின்பெயர்—அரி, அளி, குமிறு, மந்தி, அறுபதம், சிலீமுகம், சஞ்சரிகம், சரகம், சஞ்சாளிகம், சுரும்பு, கீடம், பிரமரம், மா, கீதம், பிருங்கம், பிரசம், புள், புண்டரீகம், தும்பி, மதுபம். உ0.

பெண்வண்டின்பெயர்—கரும்புள், கேசவம், தேன். ங.
ஆண்வண்டின்பெயர்—சுரும்பு, மதுகரம், தும்பி. ங.
தருஞ்சிலின்பெயர்-ஆலாலம். க. வாவலின்பெயர்-அஞ்சலிகை. க.
இந்திரகோபத்தின்பெயர்—ஈயல், மூதா. உ.
தேனீயின்பெயர்—சரகம், பிரசம். உ.

சிள்வீட்டின்பெயர்—சிதடி, சில்லிகை, சில்லை, சிமிலி. ச.
விட்டிற்பறவையின்பெயர்—சலபம், பதங்கம். உ.
நுளம்பின்பெயர்—நிலத்தி. க.
மின்மினியின்பெயர்—கச்சோதம். க.
கொதுகின்பெயர்—மசகம், துள்ளல், அசவல். ங.

## பறவையாண் பெண்மரபு.

மயிலும் எழாலுமல்லனவாகிய புள்ளினாண்பெயர்—சேவல். க.
மயில் எழாலென்னுமிரண்டினாண்பெயர்—போத்து. க.
கோழிகூகைகளின்பெண்பெயர்—அளகு. க.
பறவைப்பெண்ணின்பெயர்—பெடை, பெட்டை, பேடை. ங.

புட்பொதுவின்பெயர்—விகங்கம், ஆசுகி, வீ, விகிரம், குடிஞை, பக்கி, சகுந்தம், பத்திரி, பதங்கம், பிணிமுகம், ககம், பறவை, பதகம், போகில், குரீஇ, வயானம். கசு.

சிறகொடுசேதனம்வாசஞ்சிறைபிஞ்சஞ்சங்கூரல்பக்கம்
பறைசிதந்துவிஞ்சோகைபத்திரங்குரலேகூழை
இறையெனவுரைத்தமூவைந்தேற்றதுயிறகின்பேரே
அறைதருமரிட்டங்கோசமண்டமேசினையேமுட்டை. (௬௯)

பிள்ளையும்பார்ப்புங்குஞ்சின்பேர்சுச்சுச்சவ்வுதுண்டம்
ஒள்ளியவலகுமூக்காமோசனிக்கின்றதென்ப
புள்ளெழுச்சிறகடித்துப்புடைத்தலினுமமாகும்
துள்ளுபுள்ளீட்டத்தோகைதழுனியாந்தொழுதிகூட்டம். (௭0)

கலைசுறாமீனேறென்பகாட்டியமகரமாகும்
செலமுறுயானைமீனேதிமிபெருமீனிஞமம்
அலைவுறுதிமிங்கிலப்பேரானையைவிழுங்குமீனும்
மலைதிமிங்கிலகிலந்தான்மற்றதைவிழுங்குமீனே. (௭௧)

நலந்தருநந்துசுத்திநாகொடுவளைகம்புக்கோ
டிலங்கியவாரணம்வண்டிடம்புரிவெள்ளைசங்காம்
வலம்புரிகாமர்தானேவைத்தகொக்கரையென்றோதும்
சலஞ்சலம்பணிலமென்றுசாற்றினரேற்றநூலோர். (௭௨)

இப்பியாயிரமேசூழ்ந்தஇடம்புரியென்றுகூறும்
ஒப்பில்சங்காயிரஞ்சூழுறுவலம்புரியென்றோதும்
அப்படியதுவுஞ்சூழ்ந்தசலஞ்சலமாகுமற்றைத்
தப்பிலாச்சலஞ்சலங்கள்சார்ந்ததுபாஞ்சசன்னியம். (௭௩)

இடங்கர்சிஞ்சுமாரம்வன்மீனெழிற்கராமுதலையின்பேர்
கொடுந்திறற்கராமற்றாண்பேர்கூர்மமேயுறுப்படக்கி
ஒடுங்குகச்சபமேயாமைகமடமுமுரைக்கற்பாற்றும்
மடங்கியதுளிபெண்ணாமைமலங்கின்பேர்நுறையென்ப. (௭௪)

ஏரலோடெருந்தேயூரல்கிளிஞ்சிலாமிறவிறான்மீன்
ஆரலேயாராலின்பேர்கெண்டைமீன்சபரஞ்சேலாம்
ஊர்தருநந்தாநத்தைநாகுமாமுருவேயட்டை
நீருறுமயிலைமற்சநெடும்புழன்மீன்பொதுப்பேர். (௭௫)

இறகின்பெயர்—சிறகு, சதனம், வாசம், சிறை, பிஞ்சம், கூரல், பக்கம், பறை, சதம், தூவி, தோகை, பத்திரம், குரல், கூழை, இறை. ௧௫.
முட்டையின்பெயர்—அரிட்டம், கோசம், அண்டம், சினை. ௪.

பறவைக்குஞ்சின்பெயர்—பிள்ளை, பார்ப்பு. ௨.
பறவைமூக்கின்பெயர்—சுச்சு, சுவவு, துண்டம், அலகு. ௪.
புட்சிறகடித்துப்புடைத்தலின்பெயர்—ஓசனித்தல். ௧.
புள்ளீட்டத்தினோசையின்பெயர்—துழனி. ௧.
பறவைக்கூட்டத்தின்பெயர்—தொழுதி. ௧.

மகரமீனின்பெயர்—கலை, சுறா, மீனேறு. ௩.
பெருமீனின்பெயர்—யானைமீன், திமி. ௨.
யானைமீனைவிழுங்குமீனின்பெயர்—திமிங்கிலம். ௧.
அம்மீனைவிழுங்குமீனின்பெயர்—திமிங்கிலகிலம். ௧.

சங்கின்பெயர்—நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், வண்டு, இடம்புரி, வெள்ளை. ௧௦.
வலம்புரிச்சங்கின்பெயர்—கோக்கரை. ௧.
சலஞ்சலத்தின்பெயர்—பணிலம். ௧.

இடம்புரி—இப்பியாயிரஞ்சூழ்ந்தது.
வலம்புரி—இடம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது.
சலஞ்சலம்—வலம்புரியாயிரஞ்சூழ்ந்தது.
பாஞ்சசன்னியம்—சலஞ்சலங்களாயிரஞ்சூழ்ந்தது.

முதலையின்பெயர்—இடங்கர், சிஞ்சுமாரம், வன்மீன், கராம். ௪.
ஆண்முதலையின்பெயர்—கரிமீ. ௧.
ஆமையின்பெயர்—கூர்மம், உறுப்படக்கி, கச்சபம், கமடம். ௪.
பெண்ணாமையின்பெயர்—துளி. ௧.
மலங்கின்பெயர்—ஞாறை. ௧.

கிளிஞ்சிலின்பெயர்—ஏரல், எருந்து, ஊரல். ௩. இறான்மீனின் பெயர்—இறவு. ௧. ஆரான்மீனின்பெயர்—ஆரல். ௧.
கெண்டைமீனின்பெயர்—சபரம், சேல். ௨.
நத்தையின்பெயர்—நந்து, நாகு. ௨. அட்டையின்பெயர்—உரு. ௧.
மீன்பொதுப்பெயர்—மயிலை, மற்சம், புழல். ௩.

புள்ளியேகெவுளிபல்லிபோற்றுங்கோகிலமுமப்பேர்
நொள்ளைநாகரவண்டின்பெருநூலதையேகோன்சிலம்பி
ஒள்ளியபிலஞ்சுலோபம்பிபீலிகையூரெறும்பாம்
தெள்ளுநாங்கூழ்பூநாகஞ்சிதலையேகறையான்செல்லே. (எக)

நளிவிடந்தெறுக்காறுட்டனுட்டியவிருச்சிகந்தேள்
களவனேகுளிரநள்ளிகவைத்தாள்கர்க்கடகஞெண்டே
உருவுசுவாகுமென்பவுற்றமண்டூகந்தேரை
தளரரிநுணலேகந்தவளையாம்பேகமும்பேர். (எஉ)

கிருமியேபுழுப்பொட்டும்பேர்கீடங்கோற்புழுவலண்டாம்
பிரசங்கோற்றேனிறாலேபேசியதேனின்கூடாம்
விரவியவிலங்கினீட்டம்விருத்தமோரெழுபத்தெட்டும்
வருமுறையுரைத்தான்வீரைமன்னன்மண்டலவன்றானே. (எங)

விலங்கின்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - உஅரு.

## நான்காவது

# மரப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

திருக்கிளர்தேவர்கோமானேவலிற்குபேரன்செய்த
விருப்புறுபொன்னெயிற்குள்விளங்கெண்ணெழுத்திரண்டும்
பரப்பியவாதிமூர்த்திபங்கயப்பாதம்போற்றி
மரப்பெயர்த்தொகுதிதன்னைவருமுறைகூறலுற்றாம். (க)

சந்தானம்வேண்டிற்றெல்லாந்தருமரிசந்தனம்பூ
மந்தாரம்பாரிசாதங்கற்பகமற்றோரைந்தாம்
சந்தாரஞ்சாந்துசாந்தஞ்சந்திரதிலகத்தோடு
வந்தேறுபடீரம்பூசுமலயசஞ்சந்தனப்பேர். (உ)

பல்லியின்பெயர்—புள்ளி, கௌளி, கோகிலம். ௩.
நாகரவண்டின்பெயர்—சொன்னை. ௧.
சிலம்பியின்பெயர்—உலூதை. ௧.
எறும்பின்பெயர்—பிலஞ்சலோபம், பிபீலிகை. ௨.
நாங்கூழின்பெயர்-பூநாகம். ௧. செல்லின்பெயர்-சிதலை, கறையான். ௨.

தேளின்பெயர்—நளிவிடம், தெறுக்கால், துட்டன், விருச்சிகம். ௪.
ஞெண்டின்பெயர்—களவன், குளிரம், கள்ளி, கவைத்தாள், கர்க்கடகம். ௫. உளுவின்பெயர்—உக. ௧.
தவளையின்பெயர்—மண்டூகம், தேரை, அரி, நுணலை, ரேகம், பேகம். ௬.

புழுவின்பெயர்—கிருமி, பொட்டு. ௨.
உலண்டின்பெயர்—கீடம், கோற்புழு. ௨.
கோற்றேனின்பெயர்—பிரசம். ௧.
தேன்கூட்டின்பெயர்—இறால். ௧.

## பெயர்ப்பிரிவு

இ - ள். திருக் கிளர் தேவர் கோமான் ஏவலில் குபேரன் செய்த விருப்பு உறு பொன் எயிற்குள் - அழகு மிகைத்த தேவர்க்கரசனாகிய இந்திரனது ஏவலினாலே குபேரன் இயற்றிய விருப்பம் பொருந்திய பொன்மதிற்குள் (எழுந்தருளியிருந்துகொண்டு)—எண் எழுத்து இரண்டும் விளங்கப் பரப்பிய - கணிதமும் இலக்கணமுமாகிய இரண்டையும் விளங்கும்படி பரப்பிய—ஆதிமூர்த்தி பங்கயப் பாதம் போற்றி - அருகக்கடவுளுடைய செந்தாமரைமலர்போலும் திருவடிகளைத் துதித்து,—மரப்பெயர்த் தொகுதிதன்னை வரும் முறை கூறலுற்றும் - மரப்பெயர்த்தொகுதியை வருமுறையே (யாம்) சொல்லலுற்றும். எ - று.

ஐந்தருவாவன—சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். ௫.
சந்தனமரத்தின்பெயர்—சந்து, ஆரம், சாந்து, சாந்தம், சந்திரதிலகம், படீரம், மலயசம். ௭.

மகிழுமக்கற்பகத்தில்வளர்கொடிகாமவல்லி
அகருவேகாகதுண்டமகிலென்பவூழிலும்பேர்
பகரும்புன்காலியோடுபாடலம்பாதிரிப்பேர்
வகுளமேயிலஞ்சியென்பமகிழாங்கேசரமுமாமே. (௩)

மன்னியகோங்கினுமம்வருந்துருமோற்பலம்பூங்
கன்னிகாரமுமாமென்பசம்பகஞ்சண்பகப்பேர்
புன்னைபுன்னாகநாகம்வழைசுரபுன்னைப்பேரே
நன்னிறநரந்தநாரநாரங்கநாரத்தைப்பேர். (௪)

குருகுநாகரிவாசந்திமாதவிகுருக்கத்திப்பேர்
தருசிறுசண்பகப்பேர்சாதிமாலதியுமாகும்
கருமுகைபித்திகைப்பேர்திலகமஞ்சாடிகாட்டும்
மருகுதான்மகரவாழைவனமல்லிகைப்பேர்மௌவல். (௫)

மல்லிகையேயூருண்டிமாலதியனங்கமும்பேர்
அல்லிபுன்காலிகாசையஞ்சனிபூவைகாயாக்
குல்லையேசெச்சைவெட்சிகொந்தார்சிந்தூரமும்பே
குல்லைபூந்துளவிநேழாய்வனந்துளசிகூறும். (௬)

செங்கோடவேஞ்சரந்தான்செருந்தியேபொருந்திகிற்கும்
அங்கோலஞ்சேவழிஞ்சில்சேமரமென்றுமாகும்
கொங்காருந்துருக்கமென்பகுங்குமமரவமும்பேர்
அங்கானவணிச்சந்தானேயருப்பலநறவஞ்சள்ளி. (௭)

கரவீரங்கவீரமற்றைக்கணவீரமலரியின்பேர்
விரைமேவுதமனகந்தான்மேவியமருக்கொழுந்தே
இருவேலிமூலகந்தம்வேரிபீதகமுமேற்கும்
மருமேவுமிருவாட்சிக்குமயிலையுமனங்கமும்பேர். (௮)

முண்டகமுடங்கல்கைதைமுசலியேமடியேதாழை
கண்டல்கேதகையுமப்பேர்பரிலைபட்டிகையேகாட்டும்
வண்ணோர்வலம்புரிப்பேர்நந்தியாவர்த்தமென்ப
விண்டபூஞ்செவ்வரத்தமேவுமந்தாரமாமே. (௯)

தாலமேபெண்ணைபுல்லுத்தாளிபுற்பதிபனைப்பேர்
தாலமேடந்தற்பூகந்தருகந்திபூகம்பூக்கம்
சால்கின்கமுகுமப்பேர்சாற்றிடேந்துவர்க்காய்பாகு
கோலமென்றிந்தமூன்றுங்குறித்தபாக்கிற்குநாமம். (௰)

[illegible] - Rottleria Tinctoria

Karnikara = Pterospermum Acerifolium

[illegible] is the creeper Gaertnera Racemosa is called also Atimuktā.

கற்பகதருவிற்படர்கொடியின்பெயர்—காமவல்லி. ௧.
அகிலின்பெயர்—அகரு, காகதுண்டம், பூழில். ௩.
பாதிரிமரத்தின்பெயர்—புன்காலி, பாடலம். ௨.
மகிழமரத்தின்பெயர்—வகுளம், இலஞ்சி, கேசரம். ௩.

கோங்குமரத்தின்பெயர்—துருமோற்பலம், கன்னிகாரம். ௨.
சண்பகமரத்தின்பெயர்—சம்பகம். ௧.
புன்னைமரத்தின்பெயர்—புன்னாகம், நாகம். ௨.
சுரபுன்னையின்பெயர்—வழை. ௧.
நாரத்தையின்பெயர்—நரந்தம், நாரம், நாரங்கம். ௩.

குருக்கத்தியின்பெயர்—குருகு, நாகரி, வாசந்தி, மாதவி. ௪.
சிறுசண்பகத்தின்பெயர்—சாதி, மாலதி. ௨.
பித்திகையின்பெயர்—கருமுகை. ௧. மஞ்சாடியின்பெயர்-திலகம்.௧.
மகரவாழையின்பெயர்-மருகு.௧.வனமல்லிகையின்பெயர்-மௌவல்

மல்லிகையின்பெயர்—பூருண்டி, மாலதி, அனங்கம். ௩.
காயாவின்பெயர்—அல்லி, புன்காலி, காசை, அஞ்சனி, பூவை. ௫.
வெட்சியின்பெயர்—குல்லை, செச்சை, சிந்துரம். ௩.
துளசியின்பெயர்—குல்லை, துளவு, துழாய், வனம். ௪.

செருந்திமரத்தின்பெயர்—செங்கோடு, பஞ்சரம். ௨.
அழிஞ்சிலின்பெயர்—அங்கோலம், சே, சேமரம். ௩.
குங்குமமரத்தின்பெயர்—துருக்கம், மரவம். ௨.
அனிச்சமரத்தின்பெயர்—அருப்பலம், நறவம், சுள்ளி. ௩.

அலரியின்பெயர்—கரவீரம், கவீரம், கணவீரம். ௩.
மருக்கொழுந்தின்பெயர்—தமனகம். ௧.
இருவேலியின்பெயர்—மூலகந்தம், வேரி, பீதகம். ௩.
இருவாட்சியின்பெயர்—மயிலை, அனங்கம். ௨.

தாழையின்பெயர்—முண்டகம், முடங்கல், கைதை, முசலி, மடி, கண்டல், கேத்கை. ௭. பட்டிகையின்பெயர்—பறிவை. ௧.
நந்தியாவர்த்தத்தின்பெயர்—வலம்புரி. ௧.
செவ்வரத்தத்தின்பெயர்—மந்தாரம். ௧.

பனையின்பெயர்—தாலம், பெண்ணை, புல், தாளி, புற்பதி. ௫.
கூந்தற்பூகத்தின்பெயர்—தாலம். ௧.
கமுகின்பெயர்—கந்தி, பூகம், பூக்கம். ௩.
பாக்கின்பெயர்—துவர்க்காய், பாகு, கோலம். ௩.

பனசமேவருக்கைபாகல்பலவிலைவுபலாவின்பேரே
அனையவீரப்பலாவேயாசினியென்பதாகும்
வினவியமாந்திருதமேவுமாமிரமேகொக்கே
சினைபடுமொழைமாவாஞ்சேதாரக்தேமாவின்பேர். (கக)

தாழைதென்னாளிகேரமிலாங்கலிதாக்தெங்கின்பேர்
சூழுநெய்யரிபன்னாடைசொல்லியநாரியும்பேர்
வாழையேகதலியாகுமற்றரம்பையுமதன்பேர்
வேழமேகன்னலிக்குமென்கழைகரும்புநாற்பேர். (கஉ)

காம்புபாதிரிமுடங்கல்கழைபணைவிண்டுநேமி
தூம்புவேய்தட்டைமுந்தூழ்துளைகிளைமுளையேவேணு
ஆம்பல்கீசகம்வேல்வேரலரியமைதிகிரிவேழம்
மேம்படுவரைமூவெட்டுமூங்கிலாம்வெதிருமப்பேர். (கங)

வடமுடணியக்குரோதமற்றைக்கான்மரம்வானோங்கிப்
படருந்தொன்மரமேகோளிபழுமரமாலின்பேரே
குடசம்வெட்பாலையென்பகிரிமல்லிகையுமேகூறும்
உடையென்பகுடைவேலாகுமுறுகரஞ்சகமேபுன்கு. (கச)

விரைசெறிசெயலைபிண்டிமேவுகாகோளிமூன்றும்
அருகனெம்மானிருந்தேயறம்பகரசோகின்பேராம்
அரசின்பேர்சுவலைகுஞ்சராசனமச்சுவத்தம்
திருமரம்பணையேபோதிகணவம்பிப்பலமுஞ்செப்பும். (கரு)

சிந்தகமாமிலஞ்சிந்தூரமேயெகின்புளிப்பேர்
திந்திடகமுமப்பேரேதேக்கின்பேர்சாகஞ்சாதி
வக்தெழுமிதழிதாமமதலையேகடுக்கைகொன்றை
முந்துகிஞ்சுகத்தினோடுகேவிருமுண்முருக்கினாமம். (கசு)

சம்புகேரேநொவல்சாதேவங்குழிநாவற்பேர்
நிம்பமேவேம்பினாமகீள்பிசமந்தமும்பேர்
சம்பீரமுருகினோடுசெதாபலமெலுமிச்சைப்பேர்
அம்புவியிலிகுசத்தோடருணஞ்சம்பளமுகாட்டும். (கஎ)

அதவுடனுதும்பரங்கள்கோளியேயதமேயத்தி
இதமுறுமாழைசிஞ்சமெகின்மூன்றும்புளிமாவின்பேர்
வதரிகோற்கொடியிலந்தைவளர்கோலிகுவலியும்பேர்
விதமுறுகோலங்கோண்டைவினவிலக்கணிமின்பேரே. (கஅ)

[illegible]

புதிர் – [illegible]

அசோகு is the Jonesia Asoka Roxb.

[illegible] ஜில. கோடு. 83.

[illegible] - ஜில கோடு. 83.
[illegible] - ஜில கோடு 80

[illegible]
[illegible] - [illegible] - 93
[illegible] - ஜில. கோடு - 11

பலாமரத்தின்பெயர்—பனசம், வருக்கை, பாகல், பலவு. ச.
ஈரப்பலாவின்பெயர்—ஆசினி. க.
மாமரத்தின்பெயர்—மாந்தி, சூதம், ஆமிரம், கொக்கு, மாழை. ரு.
தேமாவின்பெயர்—சேதாரம். [சகாரம்] க.

தெங்கின்பெயர்—தாழை, தென், நாளிகேரம், இலாங்கலி. ச.
பன்னாடையின்பெயர்—செய்யரி, நாரி. உ.
வாழையின்பெயர்—கதலி, அரம்பை. உ.
கரும்பின்பெயர்—வேழம், கன்னல், இக்கு, கழை. ச.

மூங்கிலின்பெயர்—காம்பு, பாதிரி, முடங்கல், கழை, பணை, விண்டு, நேமி, தூம்பு, வேய், தட்டை, மூந்தூழ், துளை, கிளை, மூளை, வேணு, ஆம்பல், கீசகம், வேல், வேரல், அரி, அமை, திகிரி, வேழம், வரை, வெதிர். உரு.

ஆலமரத்தின்பெயர்—வடம், நியக்குரோதம், கான்மரம், தொன்மரம், கோளி, பழுமரம். சு.
வெட்பாலையின்பெயர்—குடசம், கிரிமல்லிகை. உ.
குடைவேலின்பெயர்—உடை. க. புன்கமரத்தின்பெயர்-கரஞ்சகம்.

அசோகமரத்தின்பெயர்—செயலை, பிண்டி, காகோளி. ரு.
அரசமரத்தின்பெயர்—கவலை, குஞ்சராசனம், அச்சுவத்தம், திருமரம், பணை, போதி, கணவம், பிப்பலம். அ.

புளியமரத்தின்பெயர்—சிந்தகம், ஆமிலம், சிந்தூரம், எகின், திந்திடகம். ரு. தேக்கின்பெயர்—சாகம், சாதி. உ.
கொன்றையின்பெயர்—இதழி, தாமம், மதலை, கடுக்கை. ச.
முண்முருக்கினபெயர்—கிஞ்சுகம், கவிர். உ.

நாவலின்பெயர்-சம்பு,நேரேடு.உ. குழிநாவலின்பெயர்-சாதேவம்.க.
வேம்பின்பெயர்—நிம்பம், பிசுமந்தம். உ.
எலுமிச்சையின்பெயர்—சம்பீரம், முருகு, சதாபலம், இலிகுசம், அருணம், சம்பளம். சு.

அத்திமரத்தின்பெயர்—அதவு, உதும்பரம், கோளி, அதம். ச.
புளிமாவின்பெயர்—மாழை, சிஞ்சம், எகின். ந.
இலந்தையின்பெயர்—வதரி, கோற்கொடி, கோலி, குவலி. ச.
இலந்தைக்கனியின்பெயர்—கோலம், கோண்டை. உ.

மாதுளமாதுளுங்கங்கழுமுளேமாதுளைப்பேர்
தாதுமாதுளையினுமந்தாடிமமென்றேசாற்றும்
சாதிவேத்திரமேசூரல்சாற்றியபிரம்புமுப்பேர்
தாதகியாத்தியாரேசல்லகியெல்லாமொன்றும். (௧௯)

சில்லமேயில்லந்தேற்றாஞ்சிரீடமேபாண்டில்வாகை
வில்லமாலூரமேகூவிளமிவைவில்வப்பேரே
புல்லியபசுநாவிட்டில்புக்கிவைபராயின்பேரே
பல்லிணர்க்கிலுகிலுப்பைபகன்றையாமுலவையோடை. (௨௦)

குரவகமென்பவாடாக்குறிஞ்சியாங்குரண்டகந்தான்
பெருகியகுறிஞ்சியாகும்பேரீந்தின்பேர்கர்ச்சூரங்
குரவமேகோட்டமென்பமழைவண்ணக்குறிஞ்சிபாணம்
தருகரமஞ்சரிப்பேர்சாற்றுநாயுருவியாமே. (௨௧)

தளவுமாகதியேமௌவல்யூதிகைமுல்லைசாற்றும்
களவென்பகளாவினுமங்கதிரமேகருங்காலிப்பேர்
விளவொடுகபித்தம்வெள்ளில்விளாக்கடிப்பகையினோடு
விளையுமையவிசித்தார்த்தம்வெண்சிறுகடுகிம்முப்பேர். (௨௨)

மருதுபூதவத்தினோடுமேற்றருச்சுனமுமேற்கும்
பெருகியகணியும்பீதசாலமுந்திமிசும்வேங்கை
திருமிகுமதுரசங்கோத்தனியேமுந்திரிகையாகும்
வருமதிமதுரம்யட்டிமதுகமேயதிங்கமென்ப. (௨௩)

காந்தள்செங்காந்தள்பற்றையிலாங்கலிதோன்றியும்பேர்
காந்துகங்கோடல்கோடைகருதுவெண்காந்தளாகும்
பூந்துணர்ப்பூலாசுதானேபுனமுருக்கின்பேரென்ப
சாய்ந்தெழுசமியேவன்னிநுணாவின்பேர்தணக்குத்தானே. (௨௪)

குந்தமேகுருந்தமென்பகுமிழ்கூம்பல்குஞ்சங்குன்றி
இத்துளமராகதம்பமியைக்தநீபங்கடம்பாம்
சிந்துவாரந்நிர்க்குண்டிசெப்பில்வெண்ணொச்சியாகும்
தந்தசத்திக்கொடிப்பேர்தாடிமஞ்சந்தானுமே. (௨௫)

அரிதகிபத்தியங்கள்கடுவேயாமலகநெல்லி
கருநி[illegible]தான்றிதானேகலித்துருமந்தானுகும்
பரவுமாகலிகாமன்றிப்பலியென்பகலினியும்பேர்
உருளரிசிப்பேர்கொத்துமலியெனவுரைக்கலாமே. (௨௬)

Kuruvaka is the crimson amaranth.

Nipa is Nauclea Cadamba

[illegible] = [illegible] - இல. [illegible] - 76

[illegible] - இல. [illegible] - 207

[illegible] - இல. [illegible] - 207.

கட்டு.
[illegible] - இல. [illegible] - 76
[illegible] - இல. [illegible] - 207

மாதுளையின்பெயர்—மாதுளம், மாதுளுங்கம், கழுமுள். ௩.
தாதுமாதுளையின்பெயர்—தாடிமம். க.
பிரம்பின்பெயர்—சாதி, வேத்திரம், சூரல். ௩.
ஆத்தியின்பெயர்—தாதகி, ஆர், சல்லகி. ௩.

தேற்றுமரத்தின்பெயர்—சில்லம், இல்லம். உ.
வாகைமரத்தின்பெயர்—சிரீடம், பாண்டில். உ.
வில்வமரத்தின்பெயர்—வில்லம், மாலூரம், கூவிளம். ௩.
பராய்மரத்தின்பெயர்—பசுகா, விட்டில், புக்கு. ௩.
இலுகிலுப்பையின்பெயர்—பகன்றை. க. ஓடையின்பெயர்-உலவை.

வாடாக்குறிஞ்சியின்பெயர்—குரவகம். க.
குறிஞ்சியின்பெயர்—குரண்டகம். க.
பேரீந்தின்பெயர்-கர்ச்சூரம். க. கோட்டத்தின்பெயர்—குரவம். க.
மழைவண்ணக்குறிஞ்சியின்பெயர்—பாணம். க.
நாயுருவியின்பெயர்—கரமஞ்சரி. க.

முல்லையின்பெயர்—தளவு, மாகதி, மௌவல், யூதிகை. ௪.
களாவின்பெயர்—களவு. க. கருங்காலியின்பெயர்—கதிரம். க.
விளாவின்பெயர்—விளவு, கபித்தம், வெள்ளில். ௩.
வெண்கடுகின்பெயர்—கடிப்பகை, ஐயவி, சித்தார்த்தம். ௩.

மருதமரத்தின்பெயர்—பூதவம், அருச்சுனம். உ.
வேங்கைமரத்தின்பெயர்—கணி, பீதசாலம், திமிசு. ௩.
முந்திரிகையின்பெயர்—மதுரசம், கோத்தனி. உ.
அதிமதுரத்தின்பெயர்—யட்டி, மதுகம், அதிங்கம். ௩.

செங்காந்தளின்பெயர்—காந்தள், பற்றை, இலாங்கலி, தோன்றி. ௪.
வெண்காந்தளின்பெயர்—காந்துகம், கோடல், கோடை. ௩.
புனமுருக்கின்பெயர்—பலாசு. க.
வன்னியின்பெயர்—சமி. க. நுணாவின்பெயர்—தணக்கு. க.

குருந்தமரத்தின்பெயர்—குந்தம். க.
குமிழின்பெயர்—கூம்பல். க. குன்றியின்பெயர்—குஞ்சம். க.
கடம்பின்பெயர்—இந்துளம், மரா, கதம்பம், நீபம். ௪.
வெண்ணொச்சியின்பெயர்—சிந்துவாரம், நிர்க்குண்டி. உ.
அத்திக்கொடியின்பெயர்—தாடிமஞ்சம். க.

கடுமரத்தின்பெயர்—அரிதகி, பத்தியம். உ.
நெல்லியின்பெயர்-ஆமலகம். க. தான்றியின்பெயர்-கலித்துருமம். க.
திப்பிலியின்பெயர்—மாகதி, காமன், கலினி. ௩.
கோத்துமலியின்பெயர்—உருளரிசி. க.

கன்னிகாக்கணமிரண்டுங்கருவிளைகிகிணியும்பேர்
மூன்னமேதுரிஞ்சிலின்பேர்மொழிந்தசீக்கிரியுமாகும்
மன்னியவாடாதோடைவாசையென்றறையலாமே
பன்னல்கார்ப்பாசமின்னபருத்தியின்பெருத்தநாமம். (௨௭)

இத்தியேசுவியிரத்தியிரத்திரியிறலியாகும்
சித்திரகம்மேரண்டஞ்சிறந்தவாமணக்கினமம்
வைத்திடுமிருப்பைதானேமதுகமாங்குலிகமும்பேர்
கைத்தகோடரமேகாளங்காஞ்சிரைமுட்டியெட்டி. (௨௮)

செங்கருங்காலிநாமஞ்சிறுமாரோடந்தானாகும்
தங்கியசாலஞ்சுள்ளிமராமரமாவேயாச்சா
பொங்கர்சான்மலியிலேடுபூரணியிலவமும்பேர்
வங்கமேவழுதலைப்பேர்வழுதுணையென்றுமாமே. (௨௯)

கழலினுமங்கர்ச்சூரங்கழற்காயேகழங்குமற்று
மூழலுமாநகற்றாழைப்பேர்முதிர்விலாக்குமரிகன்னி
இழைவுறுபுலிதொடக்கியிண்டுவாமீங்கையிங்கை
உழிஞையேசிறுபூளைப்பேருன்மத்தமூமத்தைப்போ. (௩௦)

அச்சமேமுனிகரீரமகத்தியாமெருக்கருக்கம்
பச்சிலைமரந்தமாலம்பசும்பிடியென்றுமபேரே
சுச்சுவேசுண்டியென்பசமங்கையேவறட்சுண்டிப்போ
வச்சிராங்கங்கள்ளூர்வம்வச்சிரஞ்சதுரக்கள்ளி. (௩௧)

பல்லிணர்க்குளவிதானேமலைப்பச்சைபலினிஞாழல்
சில்லியேமேகநாதஞ்சாகினிசிறுகீரைப்போ
சொல்லியசகுடஞ்சேம்பாஞ்சூழ்ந்தநாளிகமேவள்ளை
நல்லநந்தைப்பேர்கொத்தானறுவிலியலியென்றுமே. (௩௨

திரிபுரிசாறடைப்பேர்சிறந்தகூதளங்கூதாளி
விரவியவுருவாரந்தான்வெள்ளரிவிளங்குநாமம்
கருதுகக்கரிவாலுங்கிகண்டூதிகாஞ்சொறிப்பேர்
பரவுமஞ்சிகமேதாளிபகன்றையாஞ்சிவேலைதானே. (௩௩

ஏலமாந்துடியோடாஞ்சியிரண்டுமேயிசங்கினுக்குக்
கோலுமுத்தாபலம்பேர்குண்டலியென்றுமாகும்
கூலகோரவல்லிகூறியபாகலின்பேர்
பாலையின்பேர்சிவந்திசிவணியென்றும்புன்னும். (௩௪